𑌸𑌕𑌲𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌃

ஸகளாதிகாரம்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் - 92

|| ஸகலாதிகார: ||

(அகஸ்த்ய ப்ரணீத:)

அகஸ்திய மகரிஷி அருளிய

ஸகளாதிகாரம்

பதிப்பாசிரியர்

கே. வாசுதேவ சாஸ்திரி, B.A.,

முன்னாள் சமஸ்கிருத பண்டிதர்

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.



தஞ்சாவூர் மஹாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

2006 விலை ரூ.

Bibliographical Data

Title of the Book	:	**SAKALADHIKARAM**
Editor	:	**K. Vasudeva Sastry, B.A.,**
Publisher	:	Director Sarasvati Mahal Library.
Publication No.	:	92
Language	:	Sanskrit & Tamil
Edition	:	Edition
Date of Publication	:	July, 2006
Paper Used	:	18.6 Kg. Seshasayee
Size of Book	:	21 x 14 cm.
Printing and Type Used	:	16 pt. & 11 pt.
Number of Pages	:	216s
Price	:	**Rs.**
Printer	:	Sarma's Sanatorium Press Pudukkottai.
Binding	:	Stiff Binding
Subject	:	Silpasastra

வெளியீட்டாளர் முகவுரை

பண்டிட் ஜவகர்லால் நேரு அவர்கள் தனது "*இந்தியாவைக் கண்டுகொண்டேன்*" (Discovery of India) எனும் நூலில் இந்தியா சமூகம், பண்பாடு, ஓவியம், சிற்பம் போன்றவற்றால் வேற்றுமையில் காணும் ஒற்றுமையை வியந்து பாராட்டுகிறார்.

குறிப்பாக தமிழ்நாடு கலைகளின் பிறப்பிடம். சிற்பக்கலை செழித்து வளர்ந்து, வாழ்ந்த - வாழும் இடம். இவை நம் தமிழ்ச் சமுதாயத்தின் உயர் இலட்சிய வாழ்வை - பண்பாட்டு உச்சத்தை - கலை நுண் ஆழத்தைப் புலப்படுத்துவன.

எத்துணைத் தத்துவ ஞானம் தழைத்த மெய்யுணர்வினரும் உருவ அல்லது படிம வழிபாட்டை உவந்து பாராட்டி வருவது மரபு. "சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரையை"ப் போற்றி மகிழும் கம்பன்போல் இறைவன் அடியவர்கள் கடவுளினும் அவன் உருவத்தை - மூர்த்தியைப் பாடிப் பரவி காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி உணர்ந்து உவப்பர்.

சிற்ப சாத்திரத்தில் அறுவகை மரபுகள் உண்டென்று கூறப்படுகின்றன. அவையாவன,

1. விச்வகர்ம மதம்,
2. விச்வம்பர மதம்
3. பிங்கள மதம்
4. உத்பவ மதம்
5. மயமதம்
6. பரிமள மதம்

இச்சிற்ப நூல்கள் மரபுவழி விச்வகர்மா தேவர்களின் சிற்பி எனவும், மயன் அசுரர்களின் சிற்பி எனவும் கூறப்படுகிறது. மிதிலையில் இராமன் திருமணம் நடந்த திருமண மண்டபம்,

"மயன் முதல் திருத்திய மணிசெய் மண்டபம்
அயன் முதல் திருத்திய அண்டமும் ஒத்த"தாகக்

கம்பர் பாடுகிறார்.

உருமானங்களைப் பற்றி மட்டுமே எடுத்தியம்பும் நூல்கள் உள்ளன. அவற்றுள் ப்ராம்மீய சித்ரகர்ம சாத்திரம், ஸாரஸ்வதீய சித்ரகர்ம சாத்திரம், சகலாதிகாரம், சித்ராகஸ்தியம் என்பன குறிப்பிடத்தக்கவை. முதல் இரண்டு நூல்களும் முறையே வைணவ படிமங்களைப் பற்றியும், சைவ படிமங்களைப் பற்றியும் கூறுகின்றன. சகலாதிகாரமும், சித்ராகஸ்தியமும் முறையே சைவ-வைணவ படிமங்களைப் பற்றிக் கூறுகின்றன.

இந்த வெளியீட்டில் முதல் 50 சுலோகங்களுக்கு மூலச் சுவடியிலேயே தமிழ் உரை காணப்பட்டது. அதுவும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. முதற்பதிப்பு திரு. கே. வாசுதேவ சாஸ்திரி அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1961 இல் இந்நூலகம் வெளியிட்டது. தற்பொழுது மூன்றாம் பதிப்பாக வெளிவருகிறது. இந்த வெளியீடு ஸ்தபதிகளுக்கும், பொதுவாகக் கலை ஆர்வலர்களுக்கும் பயனாக இருக்கும் என நம்பப்படுகிறது.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், முன்னாள் வெளியீட்டு மேலாளர் திரு. எம். பாலசுப்ரமணியன் அவர்களுக்கும், இந்நூல் நல்லமுறையில் அச்சில் வெளிவரக் காரணமான புதுக்கோட்டை சர்மாஸ் சானடோரியம் அச்சகத்தாருக்கும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சா. விஜயராஜ் குமார், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
18-7-2006

PREFACE

This publication of 'Sakalādhikāra' is the 4th in the series of Manuscripts on Sculpture edited and published by this Library with the aid of Government Grant. The title of the work means 'a treatise on Deities with form'. This deals with Śaivite images and is attributed to Agasthya. Its counter - part on Vaiṣnava images by the same author is 'Chitrāgastya' a copy of which was recently obtained from the Oriental Library, Trivandrum. It is expected that this work on Vaiṣnava images may be included in subsequent series.

The texts of Agastya, Kāśyapa and Viśvakarma are the ones usually followed in Sculpture in South India. Kāśyapa's text has already been published with translation by this library and Viśvakarma's text is being edited. Two other texts which are fuller than these and found only in this library, dealing with Śaivite and Vaiṣnavite images, are in the form of a discourse by Lord Śiva to Śri Pārvati and Lord Viṣnu to Lord Brahma, and were published with translation under the titles 'Sārasvatīya Chitrakarma Śāstra' and 'Brāhmīya Chitrakarma Śāstra' respectively. The text relating to Śilpa Śāstra in general and to Sculpture in particular abound in errors and lacunae and the present text is not an exception to the general

rule. Sri K. Vāsudēva Sāstri, retired Research Pandit of this Library, who has ably edited many works on several subjects, has done an admirable job of this work. Our thanks are due to him for his valuable services.

Our thanks are due to the Government of Madras for their timely grants that have enabled the publication of this and other valuable works available in this Library.

TANJORE
27—8—'61.

S. GOPALAN,
Honorary Secretary,
T. M. S. S. M. Library Committee.

INTRODUCTION.

The art of Shilpa is a comprehensive one. It includes Architecture, Sculpture, Painting and Craftsmanship. The most ancient treatise on this subject is a branch or Upāṅga Vēda of Yajur Vēda. Though this ancient text is not available to-day, the number of chapters and the contents of each chapter of all the ancient texts on all the subjects including Shilpa are preserved for us in a rare manuscript called Yāmalāṣṭakam preserved in the Saraswathi Mahāl Library, Tanjore. In describing the contents of the chapters of Shilpa, the subject is divided into two parts, Pūrvāṅga and Uttarāṅga, dealing respectively with objects for 'physical' and 'mental' enjoyments.

The Pūrvāṅga has 9 chapters dealing with :—

1. The Universe including the abodes of celestials and human beings.

2. The several parts of the Universe.

3. The cities of Agni, Yama and other Lords of the quarters.

4. The construction of ramparts, storeyed palaces and mansions.

5. Very high and very majestic groups of storeyed buildings.

6. The construction of vehicles and curious means of transports.

7. Air-chariots of Siddhas and Gandharvas and Vidyādharas of large proportions.

8. Construction of Ships.

9. The units of measurement.

The second part consists of 11 chapters and deals with :—

1. Ornaments of various descriptions such as crowns and coronets and bracelets.

2. Six kinds of ear ornaments and other kinds of ornaments to be worn in other parts of the body.

3. The making of ornaments of Dēvas and Dānavas Gandharvas and celestial damsels.

4. The production of Gold.

5. Gems, their examination and their weights.

6. The smelting and purification of metallic ores.

7. Boring of gems.

8. The art of brightening of gems in all its fullness.

9. The weights Gunja, Karṣa and Kalanja etc. for weighing gold and gems.

10. The making of all kinds of weapons and cutlery.

11. The proper proportions making for auspiciousness.

Six Schools of Shilpa are mentioned, namely the Schools of (1) Vis'wakarma (2) Vis'vambhara (3) Piṅgala (4) Utpala (5) Maya and (6) Parimala.

In Purāṇas, Āgamas and other works on Shilpa the original authorities on Silpa are given in varying numbers as 18, 32 and 81 etc.

The most popular of these are the treatises of Maya and Vis'wakarma, the architects of Asuras and Dēvas respectively. The treatise of Maya is available in a single book named Maya Matam. But Vis'wakarma's work is found scattered in a number of workman's manuals, some in print and others in manuscripts. Vis'wakarma Vāstu Sāstram, the biggest of these manuals dealing with planning of cities and the architecture of buildings has already been published by this library.

Of the other original authorities the most popular ones are Kās'yapa Silpam and Mānasāram. Both these works deal with every branch of Silpa. They have been published some years ago, but the text abounds in errors and lacunae. The other original authorities now available to us dealing with all the aspects of S'ilpa are Aindram, Nārada Silpam and Aparājita Pṛcchā. We have comprehensive latter day compilations of the 10th and 13th century in Bhoja's Samarāngaṇa Sūtradhāra and Kumāra's S'ilpa Ratna. We have also a number of works by Maṇḍana.

Besides these, there are a number of works dealing with sculpture alone. They are Brāhmīya Citra karma Sāstram, Sāraswatīya Citrakarma Sāstram, Sakalādhikāram and Chitrā Āgastyam. The first is said to have been addressed by Mahaviṣṇu to Bṛahma, the second by Bṛhma to Saraswaṭi Dēvi. The third

and the fourth are said to have been the works of Sage Agastya. The first and second are complimentary to each other, the former dealing with Vaiṣṇavite images and the latter with the S'aivite images. Similarly the third and the fourth deal with S'aivite and Vaiṣṇavite images respectively. The first two have recently been published by this library with translation in Tamil. The third is the present work. A manuscript of the fourth is available in the Trivandrum Library.

In these works on Sculpture the general arrangement of the subject matter is practically the same.

This work first deals with the proportion of the height of the images to those of the temple, and the units of measurements. The proportions of the several features of the body are then detailed with standard heights as reference. These standard heights are different for different classes of images and they are classified into ten main heights beginning with one span to ten spans. This system is called Tāla māna or Measurement by spans. A Tala or span is divided into 12 aṅgulas and each aṅgula is therefore ¾ of an inch in present day use. The aṅgula is divided into 8 yavas. The measurements of the features are of four kinds (1) vertical (2) breadthwise (3) thicknesswise and (4) dealing with interspaces. Hundreds of measurements are given for each image.

The text then deals with the selection of materials of which the images are made, Wood, Granite, Cement, gems, ores and metals of which copper, bronze, brass, silver and gold are sanctioned. The

process of making mettallic images is not detailed in these works. The moulding process of making mettalic images is contained in a work called 'Madhūcciṣṭa Pratiṣṭhā Vidhi' which is available in Oriental Manuscripts Library, Madras. Special details are however given for images of cement. The skeleton called 'Sūla' over which the plastering has to be made is generally of wood and is described in great detail. Over the wooden skeleton is wound the string or Rajju corresponding to the Nādis of the body. This process is called Rajju Bandhana. Over this is made the plastering. The plastering and the preparation of its materials are also given in detail. The painting over the images is next dealt with. The colours used for painting are mainly four white, yellow, blue and red and each is subdivided into 4 shades. These 16 colours are represented by minerals and other stable inorganic compounds not easily affected by atmosphere.

The last chapter deals with the ceremony of opening of the eye of the image.

The manuscript of the present work is available only in this Library and Oriental Manuscripts Library, Madras. As is generally the case with the Silpa Manuscripts the text is badly mutilated and the construction has had to be made with the help of parallel works and in some places purely by conjecture. These manuscripts are being edited, translated and published for the firrt time and the discovery of other copies of Manuscripts may help to improve the text.

It is hoped that this text may be found useful to the Sthapatis and the general readers alike.

Tanjore.
20—4—1961.

K. VĀSUDĒVA SĀSTRI.

முகவுரை.

சிற்பக்கலை என்பது ஒன்றோடொன்று சம்பந்தப்பட்ட பலகலைகள் சேர்ந்தது. அதில் கட்டடக்கலை, உருமானம் செய்தல், சித்திரம் வரைதல், வேலைப்பாடுள்ளதும் தினசரி உபயோகத்திற்கு வேண்டியதுமான சாமான்கள் செய்தல், இவை யாவும் அடங்கும். நம் நாட்டில் இக்கலையைப் பற்றிய மிகப்புராதன நூல் யஜுர் வேதத்தின் பிரிவாகிய உபாங்கவேதம் ஆகும். இந்த நூல் அதன் முழு உருவத்தில் தற்காலம் நமக்குக் கிடைக்கவில்லையாயினும், வேதங்கள், உபவேதங்கள், புராணங்கள் முதலியவற்றில் உள்ள அத்தியாயங்களின் எண்ணிக்கையும், ஒவ்வொரு அத்தியாயத்திலுமுள்ள விஷயங்களின் சுருக்கமும் 'யாமளாஷ்டகம்' என்னும் ஓர் பழைய நூலில் தஞ்சை ஸரஸ்வதி மகாலில் நமக்குக் கிடைக்கிறது.

இதில் சில்பத்தைப்பற்றிய நூல் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதல் பாகமாகிய பூர்வாங்கத்தில் நமது சரீர சௌக்கியத்திற்கு வேண்டிய கட்டடம் முதலியவற்றின் நிர்மாணம் கூறப்படுகிறது. இரண்டாவது பகுதியாகிய உத்தராங்கம் நமது மனத்தின் உற்சாகத்திற்காக உபயோகப்படுத்தும் ஆபரணம் முதலியவை செய்யும் முறையை விவரிக்கிறது. பூர்வாங்கத்தில் 9 அத்தியாயங்கள் இருக்கின்றன. அவைகளில் உள்ள விஷயங்கள் வருமாறு:—

1. மானிடர்கள் தேவர்கள் முதலிய யாவரும் வசிக்கும் இந்த உலகத்தின் வர்ணனை.

2. உலகத்தின் பல பகுதிகள்.

3. அக்னி, யமன் முதலிய திக்பாலர்களின் நகரங்கள்.

4. ப்ராகாரங்கள், உப்பரிகைகள், அரண்மனைகள், மாளிகைகள், தேவாலயங்கள் முதலியவற்றின் நிர்மாணம்.

5. மிகவும் உயரமாகவும் கம்பீரமாகவும் அமைக்கப்படும் கட்டட வரிசைகளின் அமைப்பு.

6. சாதாரண ஊர்திகள், விசித்திரமான ஊர்திகள்.

7. விசாலமான ஆகாய விமானங்கள், சிறப்பாக சித்தர்கள், வித்யாதரர்கள், கந்தர்வர்களின் விமானங்கள் ஆகியவற்றின் நிர்மாணம்.

8 கப்பல் கட்டும் முறை

9. அளவு முறைகள்

உத்தராங்கம் 11 அத்தியாயங்கள் கொண்டது. அவைகளிலுள்ள விஷயங்கள் வருமாறு:—

1. கிரீடங்கள், கடகங்கள் முதலிய விசேஷ ஆபரணங்களின் அமைப்பு.

2 ஆறுவகைக் குண்டலங்களும் மற்ற அணிகளும் அமைக்கும் வகை.

3. தேவர்கள், அசுரர்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸ்ஸுகள், முதலியவர்கள் அணியும் ஆபரணங்களை அமைக்கும் முறை.

4. தங்கம் உற்பத்தி செய்யும் முறை

5. நவரத்தினங்களைப் பரீக்ஷிக்கும் முறையும் அவற்றை எடைபோடும் முறையும்.

6. தாதுக்களினின்றும் உலோகங்களைப் பிரித்துச் சுத்திகரிக்கும் முறை.

7. ரத்தினங்களைத் துளையிடுதல்

8. ரத்னங்களைத் தேய்த்துப் பட்டைதீர்த்துப் பிரகாசமுண்டாக்கும் முறை.

9. தங்கம் முதலியவைகளை நிறுப்பதற்கான குஞ்சம் (குன்றுமணி) கர்ஷம் (வராகனெடை) களஞ்சம் (கழஞ்சு) முதலிய எடைகள்.

10. ஆயுதங்களும், சஸ்திரங்களும் செய்யும் முறை

11. அளவுகளும், ஆயாதி அல்லது அவற்றை சுபம் உண்டாக்கும் முறையில் அமைக்கும் விதிகளும்.

இதில் சில்பசாஸ்திரத்தில் 6 வகை சம்பிரதாயங்கள் உண்டென்று கூறப்படுகின்றது. அவை வருமாறு ;—

1. விச்வகர்மமதம் 2. விச்வம்பரமதம் 3. பிங்கள மதம் 4. உத்பலமதம் 5. மயமதம் 6. பரிமளமதம்

புராணங்களிலும், ஆகமங்களிலும் ஏனைய சிற்ப சாஸ்திரங்களிலும், சிற்பத்தைப் பற்றிய நூலாசிரியர்கள் 18 என்றும், 32 என்றும், 81 என்றும் இன்னும் பலவகை யாகவும் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இவர்களில் விச்வகர்மா, மயன் இவ்விருவருமே முக்கியமானவர்கள். விச்வகர்மா தேவர்களின் சிற்பி. மயன் அசுரர்களின் சிற்பி. மயமதம் முற்றிலும் ஒரே நூலாக இப்பொழுதும் கிடைக்கிறது. ஆனால் விசுவகர்மா வினுடைய நூல் பல பகுதிகளாகவே அந்தந்தப்பகுதிச் சிற்பத்தொழிலாளிக்கென்றே தனியாகத்தொகுக்கப்பட்டுப் பல நூல்களாக நமக்குக் கிடைக்கிறது. அவற்றுள், கிராமங்கள், நகரங்கள் கட்டடங்கள் இவைகளைப்பற்றிய விரிவான பகுதி "விச்வகர்மவாஸ்து சாஸ்திரம்" என்ற பெயரால் இந்த நூல் நிலையத்தாரால் சில வருஷங்களுக்கு முன் வெளியிடப்பட்டுள்ளது. மற்ற பகுதிகள் இரண்டொன்று அச்சிலும் சில சுவடிகளாகவும் கிடைக் கின்றன.

சிற்பக்கலையைப்பற்றிய மற்ற ஆசிரியர்களின் நூல்களுள் முக்கியமானவை காசியப சில்பமும், மானஸாரமும், ஆகும். இவ்விரண்டு நூல்களிலும் சிற்பக்கலையின் எல்லாப் பகுதிகளும் இடம் பெற்றிருக்கின்றன. இவ்விரண்டு நூல்களும் பல வருஷங்களுக்கு முன் அச்சிடப்பட்டுள்ள போதிலும் பிழை மலிந்திருக்கின்றன. இவ்விரண்டைத் தவிர தற்காலத்தில் சிற்பத்தின் எல்லாப் பகுதிகளும் அடங்கிய நூல்கள் நமக்கு இப்பொழுது கிடைக்கக்கூடிய முதல் நூல்கள் ஐந்த்ரம், நாரதசில்பம், அபராஜிதப்ருச்சா இவைகளே. பிற்காலத்திய தொகுப்பு நூல்கள் போஜ மகாராஜா இயற்றிய ஸமராங்கண ஸூத்ரதாரமும் குமாரர் இயற்றிய சில்பரத்னமும், மண்டனர் எழுதிய சிற்பநூலகளும் ஆகும். இவையன்றி வாயுபுராணம் முதலிய புராணங்களிலும் சைவ வைஷ்ணவ ஆகமங்களிலும 'ப்ருஹதஸம்ஹிதை' போன்ற பலவகைத்தொகுதி நூல்களிலும் அர்த்தசாஸ்த்ரங்களிலும் சிற்பத்தைப் பற்றிய பகுதிகள் அடங்கியிருக்கின்றன.

இவைகளைத்தவிர உருமானங்களைப்பற்றி மட்டும் உள்ள சில நூல்கள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை 'ப்ராம்மீயசித்ரகர்ம சாஸ்திரம்', ஸாரஸ்வதீய சித்ரகர்ம சாஸ்திரம, ஸகலாதிகாரம, சித்ராகஸ்தியம் எனபன. முதல் இரண்டு நூல்களும் முறையே வைஷ்ணவ ப்ரதிமைகளைப்பற்றியும், சைவ ப்ரதிமைகளைப்பற்றியும் கூறுகின்றன. இவ்விதமே ஸகலாதிகாரமும், சித்ராகஸ்தியமும் முறையே சைவ வைஷ்ணவ ப்ரதிமைகளைப் பற்றிக் கூறுகின்றன. முதல்நூல் விஷ்ணுவால் பிரும்மாவுக்கு உபதேசிக்கப்பட்டதாகவும், இரண்டாவது நூல் ப்ரும்மாவினுல் ஸரஸ்வதிதேவிக்கு உபதேசிக்கப்பட்டதாகவும் மற்ற இரண்டு நூல்களும் அகஸ்திய முனிவரால் இயற்றப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. முதல் இரண்டு நூல்களும் தமிழ் மொழி பெயர்ப்புடன் இந்நூல்

நிலையத்தாரால் வெளியிடப்பட்டுள்ளன. மூன்ருவது நூல் இந்த வெளியீடு. சித்ரகாஸ்தியம் என்னும் நூல் திருவனந்தபுரம் நூல் நிலயத்தில் கிடைக்கிறது. இந்த ப்ரதிமைகளைப்பற்றிய நூல்களில் அடங்கிய விஷயங்கள் அநேகமாக ஓரேமாதிரியாக இருக்கின்றன.

முதலில் தேவாலயம், கர்ப்பகிருஹம் இவற்றின் அளவுக்குப் பொருத்தமாகப் பிம்பங்களின் உயரத்தை நிர்ணயிக்கும் முறைகளும் அளவை அலகுகளும் சொல்லப் பட்டிருக்கின்றன. பிம்பங்களின் அங்கங்களின் அளவுகள் பிறகு கொடுக்கப்பட்டிருக்கின்றன. பிம்பங்களைப் பல வகைகளாகப்பிரித்து ஒவ்வொன்றுக்கும் உரியது என ஓர் உயரத்தை ஏற்படுத்தி அந்த உயரத்தின் விகிதங்களாக அங்கங்களின் அளவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன இந்த உயரங்கள் 10 சாண் முதல் 1 சாண் வரையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த முறைக்குத் 'தாள மானம்' என்று பெயர். 'தாளம்' என்பதற்குச் 'சாண்' என்பது பொருள். ஒரு தாளத்தை 12 அங்குலங்களாக்ப் பிரித்திருக்கிருர்கள். இந்த அங்குலம் இப்பொழுது நடை முறையிலுள்ள அங்குலத்தின் ¾ பங்காகும். ஒரு அங்குலத்தை 8 யவைகளாகப்பிரித்திருக்கிருர்கள். பிம்பத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் அளவுகள் நால்வகை. செங்குத்தளவுகள், அகல அளவுகள், கன அளவுகள் அங்கங்களின் இடைவெளிகள். இவ்விதமாக ஒவ்வொரு பிம்பத்திற்கும் நூற்றுக்கணக்கான அளவுகள் ஏற்பட்டிருக்கின்றன. பிம்பங்களின் அளவுகளைச் சொன்னபிறகு பிம்பங்களைச் செய்வதற்கான மூலப்பொருள்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. மரம், கருங்கல், சுதை என்னும் சுண்ணும்புக்கலவை, உலோகதாதுக்கள், ரத்தினங்கள், பொன், வெள்ளி, செம்பு, பித்தளை, வெண்கலம், ஆகிய உலோகங்கள் விக்ரகங்களுக்கு ஏற்றதாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. உலோகங்களில் விக்ரகங்களை வார்க்கும்

முறை இந்த நூல்களில் சொல்லப்படவில்லை. 'மதூச்சிஷ்ட ப்ரதிஷ்டாவிதி' அல்லது மெழுகு கட்டி வேலை செய்யும் முறை என்ற நூலில் இந்த விவரம் காணப்படுகிறது. இந்த நூல் மதராஸ் கீழ்த்திசை நூல் நிலையத்தில் இருக்கிறது. இதன் விவரமும் இன்னும் சிற்பக்கலையின் பல நுணுக்கங்களும் அக்கலையில் இப்பொழுது ஈடுபட்டுள்ள சிற்பிகளிடமிருந்தே நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஆனால் சுதையில் பிம்பம் செய்யும் முறை இந்த நூல்களில் வெகு விரிவாகக்கொடுக்கப்பட்டிருக்கிறது. முதலில் மரம் முதலிய மூலப்பொருளால் 'சூலம்' என்ற உள்கூடு செய்யப்படவேண்டும். அதன் பேரில் நாடிகளின் ஸ்தானத்தில் ரஜ்ஜுபந்தனம் என்னும் கயிறு சுற்றுதலும் செய்யவேண்டும். அதன்மீது மண், சுக்கான் முதலியவை சேர்ந்த கலவையைப் பூசவேண்டும். அதன்மீது வர்ண வேலைப்பாடுகள் செய்யப்படவேண்டும். நமது சிற்ப சாஸ்திரங்களில் வர்ணங்கள் முக்கியமாக நான்கு எனச் சொல்லப்பட்டிருக்கிறது. அவை வெள்ளை, மஞ்சள், நீலம், சிவப்பு. ஒவ்வொன்றிலும் 4 வகைகள். இந்த 16 வர்ணங்களையும் அவற்றிற்குரிய தாதுப்பொருளாலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். வர்ணங்கள் தாதுப்பொருளாயிருப்பதால் அவை காற்று சீதோஷ்ணம் முதலியவைகளால் பாதிக்கப் படாமலிருக்கின்றன. கடைசியாக அக்ஷிமோக்ஷணம் என்னும் பிம்பத்திற்குக் கண்திறக்கும் முறை சொல்லப் பட்டிருக்கிறது.

இப்பொழுது வெளியிடப்படும் ஸகளாதிகாரத்தின் சுவடி இந்த நூல் நிலையத்திலும் மதராஸ் கீழ்த்திசை நூல் நிலையத்திலுமே கிடைக்கிறது. பொதுவாகச் சிற்பநூல்கள் எல்லாவற்றிலும் உள்ள ஓர் பெரிய குறை, அதாவது நூலின் மூலபாடம் பல இடங்களில் சிதைவுற்றிருப்பது இந்நூலிலும் காணப்படுகிறது. சிதைந்த பகுதிகள் இதைப்

போன்ற மற்ற நூல்களைக்கொண்டு திருத்தப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் இந்த உதவியும் இல்லாமல் யுக்தியினாலேயே திருத்தங்கள் செய்யவேண்டியிருந்தது.

இப்பொழுது வெளியாகும் சிற்ப நூல்கள் முதல் முறையாக இப்பொழுதுதான் வெளியிடப்படுகின்றன. இந்த நூல்களின் சுவடிகள் இன்னும் வேறு இடங்களில் கிடைக்குமானால் அவற்றைக்கொண்டு மூலபாடத்தை இன்னும் சீர்திருத்தலாம்.

இந்த வெளியீட்டில் முதல் 50 ச்லோகங்களுக்கு மூலச் சுவடியிலேயே தமிழ் உரை காணப்பட்டது. அதுவும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த வெளியீடு ஸ்தபதிகளுக்கும், பொதுவாகக்கலையில் சிரத்தையுள்ளவர்களுக்கும் உபயோகமாக இருக்கும் என நம்புவோமாக.


20—4—1961. **கே. வாஸுதேவ சாஸ்திரி,**
தஞ்சாவூர்.

|| விஷயாவலீ ||

பொருளடக்கம்

—o—

ஸ்ரீ மஹாகணபதயே நம:



ஸ்ரீ மஹாகணபதி துணை.

ஸகளாதிகாரம்

என்னும்

உருமானங்களைப்பற்றிய சிற்ப நூல்

ஸகளநிஷ்களமிஶ்ரவிபாகத:
த்ரிவிதைவ வபு: பரமேஷ்டிந: |
விவிதம் ஸகளஸ்ய யதோதிதம்
ஶஶிதரேண ததா கத்யதேஹம் || க ||

சுவடியிலுள்ள உரை :—பரமேச்வரனுடைய திருமேனியானது ஸகளமென்றும் நிஷ்களமென்றும் மிச்ரமென்றும் சொல்லப்படுகிற விபாகத்தால் ஸகளமானது அவயவங்களோடே கூடியிருக்கும். நிஷ்களமானது லிங்காகாரமாயிருக்கும். மிச்ரமானது முகலிங்கங்களாயிருக்கும். இப்படி யொருமித்தாயிருந்துள்ள பரமேச்வரனுடைய வபுஸ்ஸு (சரீரம்) சசியை (சந்திரனை) தரிக்கப்பட்டிருந்துள்ள ஈசுவரனாலே யாதொருபடி சொல்லப்பட்டதோ அத்தை நான் சொல்கிறேன். (க)

1. கடவுளுடைய திருமேனி ஸகளம், நிஷ்களம், மிச்ரம் என மூன்று வகைப்படும். ஸகளமாவது தலை, உடல், கை கால் முதலிய எல்லா அவயவங்களோடும் கூடிய உருவம். நிஷ்கள

மாவது அங்க அவயவங்கள் இல்லாமல் லிங்கம் முதலான உருவமாக இருக்கும். மிச்ரமாவது அவயவங்களுள் ஏதோ சிலவற்றோடு அமைந்திருக்கும் உருவம். மிச்ர உருவத்திற்கு 'முகலிங்கம்' அதாவது லிங்கத்தில் முகத்திலுள்ள கண் முதலியவை மட்டும் அமைந்திருத்தல் உதாரணமாகும். இந்த உருவத்தில் அவயவம் எல்லாம் உள்ள உருவம், அவயவமே இல்லாத உருவம், இவ் விரண்டின் அம்சங்களும் சேர்ந்திருப்பதால் இதற்கு 'மிச்ரம்' அதாவது 'இரண்டும் கலந்தது' என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. "இவற்றின் விவரங்களை பரமசிவனால் உபதேசிக்கப்பட்டபடி இனி நான் சொல்லுகிறேன்" என்று நூலாசிரியரான அகஸ்திய மஹரிஷி ஆரம்பிக்கிறார்.

> தச்சாசலம் சலம் த்விவிதம் பவேத்
> ஸரள(தாரு) ஸந்மணிவர்ணஶிலாஸுதயா ।
> விவிதலோஹ ம்ருத்ஸுஶர்கரா
> விரசிதம் ஸ்வரூபமஷ்டவிதம் பவேத் ॥ ௨ ॥

சு - உரை:—தத் - அந்த வபுஸ்ஸானது அசலமென்றும் சலமென்றும் இரண்டுபடியாயிருக்கும். அசலமானது சலிக்கப்படாதது. சலமானது சலிக்கப்படும். ஸரள (நேர்மையான) தாருவாலும் (மரத்தாலும்) நல்லமணியாலும், பல வர்ணங்களினாலும், கல்லாலும், ஸுதையாலும், வெவ்வேறு வகைப்பட்டிருந்துள்ள லோஹங்களினாலும், மண்ணாலும், நன்றான சர்க்கரையாலும் (மெல்லிய மணல் அல்லது சுக்கானாலும்) ஸ்வரூபங்கள் எட்டுவிதமாம். (௨)

2. இப்படிச் சொல்லப்பட்ட கடவுளின் உருவங்கள் 'அசலம்,' 'சலம்' என இருவகைப்படும். 'அசலம்' என்பது இருந்த இடத்தை விட்டு நகர்த்தக் கூடாதது. இம்மாதிரியான விக்ரஹத்திற்கு 'மூலஸ்தானம்' அல்லது 'மூலபேரம்' என்று பெயர். 'சலம்' என்பது நினைத்தபடி இடம் விட்டு இடம் நகர்த்தக்கூடியது. (இம் மாதிரியான விக்ரஹத்திற்கு 'உற்சவ விக்ரஹம்' அல்லது 'உற்சவ பேரம்' என்று பெயர்.)

விஶேஷஃ]

இவ்வுருவங்கள் நல்ல மரங்களாலும், நல்ல ரத்னங்களாலும், 'தாது' அதாவது உலோகச் சத்து அடங்கிய பலவகை வர்ணப் பொடிகளாலும், கருங் கல்லாலும், 'சுதை' என்னும் நற் சாந்தாலும்,[1] பலவகை உலோகங்களாலும் மண்ணாலும், முதல் தரமான சுக்காலும், ஆக இந்த எட்டு வகைப் பொருள்களாலும் அமைக்கப்படும்.

வாயிவம் ஶாகரம் ஸௌயம் ஸ்ராம் ஸ்தாவரமிஷ்யதெ ।
அமாஅம் ஶிமாதாரா யாதாஜம் ரத்நமொஹஜெ
அமெவ ப்ரபுஜீயாதாஹாஸம் யாதாஜம் ஸவெசஃ ॥

சு - உரை :—மண்ணாலும், சர்க்கரையாலும், ஸுதையாலும் பண்ணப்பட்டது ஸ்தாவரமென்று சொல்லப்படும். சிலையும் மாமும் சலிக்கவும் சலியாதிருக்கவும்படும். தாதுவும் ரத்னங்களும், லோஹமும் சலிக்கவே படும். படஞ்சிலே ஆபாஸம் தாதுவாலே செய்யப்படும். ஸுதையாலே பண்ணப்பட்டது (அர்த்த) சித்ரம் என்று பெயர். (க.)

3. மண்ணாலும், சுக்காலும், சுதை என்னும் நற் சாந்தாலும் அமைக்கப்படும் விக்ரஹங்கள் இடம் விட்டுப் பெயராதவைகளாகவே இருக்கும். கருங்கல், மரம், தாதுவகை இவைகளால் அமைக்கப்படும் விக்ரஹங்கள் அசையாமல் ஓரிடத்திலேயும் இருக்கலாம்; அல்லது அவைகளை இடம் விட்டு இடமும் நகர்த்தலாம். இரத்தினங்கள், உலோகங்கள் இவற்றை இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லக்கூடிய விக்ரஹங்களை அமைப்பதற்கே உபயோகப் படுத்தல் வேண்டும்.

உருவத்தின் வெளித் தோற்றம் மட்டும் உள்ளதற்கு 'ஆபாஸம்' என்று பெயர். அதற்கு 'தாது' என்னும் வர்ணப் பொடியையே உபயோகிக்க வேண்டும்.

---

1. சுண்ணாம்பும் மணலும் பட்டைச்சாறு முதலியவைகளும் சேர்த்து வெண்ணெய் போல் நன்றாக அரைக்கப்படும் சாந்துக்கு நற்சாந்து என்று பெயர்.

𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌧𑌂 𑌸𑍌𑌮𑍍𑌯𑌜𑌂𑌚𑌾𑌗𑍍𑌨𑍇𑌯 𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌧𑌮𑍇𑌵𑌵𑌾 ।
𑌚𑌿𑌤𑍍𑌰𑌂𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌦𑍃𑌶𑍍𑌯𑌂𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌅𑌰𑍍𑌧𑍇𑌽𑌰𑍍𑌧𑌦𑍃𑌶𑍍𑌯𑌮𑌰𑍍𑌧𑌕𑌮𑍍 ॥ ௪ ॥

சு - உரை :—ஸர்வாங்கமும் காணப்படுவதாகில் சித்ரமென்றும் அர்த்தாங்கம் தரிசிக்கப்படுமாகில் அர்த்த சித்ரமென்றும் பெயர். (௪)

4. அர்த்த சித்திரம் சுதையினல் அமைக்கப்படும். சில நூலாசிரியர் சித்திரம், சித்திரார்த்தம் இரண்டையும் சுதையினல் அமைக்கலாம் என்று கூறியுள்ளனர். சித்திரம் என்பது எல்லா அவயவங்களும் முன்னும் பின்னும் வெளிப் படையாகத் தெரியும்படி அமைக்கப்படுவது. அங்கங்களின் முன் பாதி மட்டும் தெரியும்படி அமைக்கப்படுவது சித்ரார்த்தம் எனப்படும்.

𑌨𑌿𑌮𑍍𑌨𑍋𑌨𑍍𑌨𑌤 𑌵𑌿𑌹𑍀𑌨𑍇𑌨 𑌪𑌟𑌭𑌿𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌲𑍍𑌪𑌨𑌾 ।
𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌭𑌾𑌸𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌫𑌲𑌂𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾𑌨𑍍𑌤𑌮𑌾𑌧𑌮𑌮𑍍 ॥ ௫ ॥

சு - உரை :—நிம்ன முன்னதம் (மேடுபள்ளம்) அன்றியிலே கற்பிக்கப்பட்டது ஆபாஸ சித்ரமென்று பெயராவது. அதுதான் படங்களிலென்ன (துணியிலும்) பித்தியிலென்ன (சுவற்றிலும்) கற்பிக்கப்படும். அதனுடைய பலம் உத்தமம், மத்யமம், அதமம். (௫)

5. மேடு பள்ளங்கள் இல்லாமல் அமைக்கப்படும் 'சித்ராபாஸம்' என்னும் உருவங்கள் துணி, சுவர் முதலியவைகளில் தீட்டப்படும் ஓவியங்களாகும். 'ஆபாஸம்' என்ற சொல்லுக்கு 'வெளித் தோற்றம்' என்பது பொருள். மேலே சொல்லப் பட்ட உருவங்களை வைத்துப் பூஜை செய்வதினல் சித்ரம் என்னும் உருவம் உத்தம பலனையும், சித்ரார்த்தம் மத்திம பலனையும், ஆபாஸம் மிகவும் குறைந்த பலனையும் கொடுக்கும்.

𑌵𑌿𑌶𑍇𑌷𑌃]

𑌮𑌾𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌭𑍇𑌦𑌾𑌃

𑌸𑍋𑌮𑌾𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍇𑌖𑌰𑌂 𑌵𑍃𑌷𑌵𑌾𑌹𑌨𑌂 ।
𑌨𑌟𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌤𑌥𑌾 𑌗𑌙𑍍𑌗𑌾𑌧𑌰𑌂 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌂 ॥ ௬ ॥

𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌞𑍍𑌚𑌾𑌰𑍍𑌧𑌨𑌾𑌰𑍀𑌂 𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌂 𑌤𑌥𑌾 ।
𑌕𑌙𑍍𑌕𑌾𑌲𑌂 𑌕𑍇𑌶𑌵𑌾𑌰𑍍𑌧𑌞𑍍𑌚 𑌭𑌿𑌕𑍍𑌷𑌾𑌟𑌨𑌮𑌤𑌃𑌪𑌰𑌂 ॥ ௭ ॥

𑌚𑌣𑍍𑌡𑍇𑌶𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌶𑌂 𑌕𑌾𑌮𑌵𑌿𑌨𑌾𑌶𑌨𑌂 ।
𑌲𑌿𑌙𑍍𑌗𑍋𑌦𑍍𑌭𑌵𑌞𑍍𑌚 𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌭𑍇𑌦𑌃 𑌷𑍋𑌡𑌶𑌧𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௮ ॥

௬ - ௮ உரை:—உமையும் பரமேச்வரனும் இளைய நயினரும் கூடியிருந்த விக்ரஹமும், சந்திரனை தரிக்கப்பட்டிருந்துள்ள விக்ரஹமும், வ்ருஷ்பத்தை வாஹனமாக உடைய விக்ரஹமும், ந்ருத்தம் ஆடின விக்ரஹமும், கங்கையை தரித்த விக்ரஹமும், த்ரிபுர தஹனம்பண்ணின விக்ரஹமும், திருக்கலியாணம் பண்ணின விக்ரஹமும், அர்த்தாங்கம் பரமேசுவரியைத் தரித்த விக்ரஹமும், அர்ஜுனனுக்கு பாசுபதாஸ்த்ரம் கொடுத்த விக்ரஹமும், கங்காள விக்ரஹமும், கேசவார்த்தமான விக்ரஹமும், சண்டேச்வரனுக்குப் ப்ரஸாதம் கொடுத்த விக்ரஹமும், ருஷிகளுக்கு ஞானோபதேசம் பண்ணின விக்ரஹமும், லிங்கத்தில் நின்று உத்பவமாகத் தோற்றப்பட்ட விக்ரஹமும் ஆகப் பதினாறு படியாம். (௬, ௮)

(6-8) பரமசிவனின் மூர்த்திகள் பதினாறு. அவையாவன:—

1. ஸோமாஸ்கந்தர் அதாவது பார்வதியோடும் முருகனோடும் சேர்ந்து அமர்ந்திருக்கும் மூர்த்தி.

2. சந்திர சேகரர் அதாவது சந்திரனைத் தலையில் ஆபரணமாகத் தரித்தவர்.

3. வ்ருஷ வாகனர் - ரிஷப வாகனத்தின் மீது எழுந்தருளி யிருப்பவர்.

4. நடேசர் - ஒரு காலைத் தூக்கி நின்றாடும் நடராஜ மூர்த்தி.

5. கங்காதரர் - கங்கையைச் சடையில் தரித்தவர்.

6, த்ரிபுராந்தகர் - முப் புரங்களையும் அவைகளில் சஞ்சரித்த அசுரர்களையும் அழித்தவர்.

7. கல்யாண ஸுந்தரர்-பார்வதி தேவியோடு கல்யாணக் கோலத்தில் காட்சி யளிப்பவர்.

8. அர்த்தநாரீசுவரர் - தேவியைத் தன் உருவத்தின் இடது பாதியாகக் கொண்டவர்.

9. பாசுபதமூர்த்தி - அர்ஜுன னுக்குப் பாசுபதம் என்ற தனது அஸ்திர[1]த்தைத் தந்தருளிய மூர்த்தி.

10. கங்காள மூர்த்தி - 'கங்காளம்' என்னும் எலும்புக் கூட்டைத் தோளிலேந்தி நடமாடும் உருவம்.

11. கேசவார்த்த மூர்த்தி - ஒரு பாதி சங்கரனும் மற்றொரு பாதி நாராயணனுமாகச் சேர்ந்த உருவம்.

12. பிக்ஷாடன மூர்த்தி - பிக்ஷைக்குச் சென்ற திருக் கோலம்.

13. சண்டேசுவரானுக்ரஹ மூர்த்தி - சண்டிகேசுவரருக்கு அருள் புரிந்த கோலம்.

14. தக்ஷிணாமூர்த்தி-ஸனகாதி மகரிஷிகளுக்குத் தெற்கு முகமாய் அமர்ந்து ஞானோபதேசம் செய்த திருக்கோலம்.

---

1. அஸ்திரம் என்பது மந்திரங்களினாலும், தெய்வ சக்தியினாலும் இயங்கும் அபார சக்தியுடைய ஆயுதம். ஆயுதங்கள் முக்தம், அமுக்தம், முக்தா முக்தம் என 3 வகைப்படும். விட்டு எறியப்படுவது, எறியப்படாதது, விட்டும் விடாமலும் எறியப்படுவது என்பது இவற்றின் பொருள். அஸ்திரம் என்பது முதல் வகையைச் சார்ந்தது. கத்தி, கேடயம் இரண்டாம் வகையைச் சேர்ந்தவை. பாசம் என்னும் கயிறு மூன்றாம் வகையைச் சேர்ந்தது.

விசேஷ:]

15. காலஸம்ஹார மூர்த்தி - மார்க்கண்டேயனுக்காக யமனை வென்ற கோலம்.

16. லிங்கோத்பவ மூர்த்தி - லிங்கத்திலிருந்து மேலும் கீழும் அளவிறந்த உருவத்தோடு விஷ்ணுவும், ப்ரம்ஹாவும் அடி முடி காணமுடியாதவாறு தோன்றிய உருவம்.

ஸந்த்யேஷாம் ப்ரதிமானாம் மானகல்பே ப்ரயுஜ்யதே |
லிங்கமானம் ச கர்ப்பம் ச த்வாராதிஷ்டானபாதகம்
ஹஸ்தமானம் ச தாலம் ச யஜமானோதயேன ச || ௯ ||

மூலபேராங்குலம் மானாங்குலம் மாத்ராங்குலம் ததா |
மானம் து ருத்ரஸங்க்யம் ஸ்யாத் தத்தத் பேதம் ப்ரயோஜயேத் || ௰ ||

௯ - உரை :—லிங்கவசாத் ப்ரமாணமென்றும், கர்ப்பக்ருஹ ப்ரமாணமென்றும், த்வாரவசாத் ப்ரமாணமென்றும், அதிஷ்டான வசாத் ப்ரமாணமென்றும், பாத ப்ரமாணமென்றும், முழத்தாலும் தாலத்தாலும், யஜமானனுடைய உதயத்தாலும், மூல பேராங்குலத்தாலும், மானங்குலத்தாலும், மாத்ராங்குலத்தாலும், ஆக மானபேதங்கள் பதினொன்று மானங்கள் ஸங்க்யாவாம். (௯, ௰)

(9-10) இம்மூர்த்திகளின் அளவுகள் இனிச் சொல்லப்படுகின்றன. மூர்த்திகளின் உயரத்தை பதினோரு வகைகளில் நிர்ணயம் செய்யலாம் :—

1. மூலஸ்தானத்திலுள்ள லிங்கத்தின் அளவைக் கொண்டும்,

2. கர்ப்ப கிருஹத்தின் உட்புற அளவைக் கொண்டும்,

3. கர்ப்பகிருஹ வாயிலின் அளவைக் கொண்டும்,

4. கர்ப்பகிருஹத்தின் அதிஷ்டானம் அல்லது அடிப் பட்டறையின் அளவைக் கொண்டும்,

5. பாதம் அதாவது அடிப்பட்டறையின் பேரில் கட்டப் படும் பகுதியின் உயரத்தைக் கொண்டும்,

6. ஹஸ்தம் என்னும் முழ அளவாலும்

7. தாளம் என்னும் சாண் அளவாலும்

8. கோயிலை நிர்மாணிக்கும் யஜமானனுடைய உயரத்தைக் கொண்டும்,

9. மூலபேராங்குலம் அதாவது மூலஸ்தானத்தின் உயரத்தைத் 'தாளமான' விதி[1] ப்படி அதற்குரிய அங்குலத் தொகையால் வகுத்துக் கிடைத்த அங்குல அளவாலும்

10. மானங்குலம் அதாவது யவை, நெல் முதலிய தானியங்களின் அளவினால் நிர்ணயிக்கப்பட்ட அங்குல அளவாலும்

11. மாத்ராங்குலம் அதாவது யஜமானனுடைய நடு விரலின் நடுப் பகுதியின் நீளம் அல்லது அகலமாக நிர்ணயிக்கப்பட்ட அங்குலத்தாலும் நிர்ணயம் செய்யலாம்.

இவை ஒவ்வொன்றும் பலவகைப்படும்.

ஸமஜாம்ஶோதய தாரநாஹஸ்தப்ரஶம் வா ஷடயாம்ஶம் பவேத் |
தஸ்மாந்மாநேஷு யாதாநவாஸ்து ஶாயிகம் ப்ரோதயம் ॥ ௰௧ ॥

ஹீநம் வாऽபி ஸமேத மாநஜக்ஷிதம் ஸர்வதா த்யக்தலிங்கத: |
வைராணாம் ஹி ஶிவாம்ஶமாநவஶத: ஸ்வாயம்பவே மாநவே ॥ ௰௨ ॥

---

1. தாளமான விதியாவது - விக்கிரகங்களின் அங்க அளவுகளை நிர்ணயிப்பதற்காக, அவை ஒவ்வொன்றுக்கும் 'உரியதென' ஓர் அளவை ஏற்படுத்தி, அந்த அளவை ஆதாரமாக வைத்துக்கொண்டு அங்கங்களின் அளவை விவரிக்கும் முறை. விக்ரஹங்களுக்கு 'உரிய' அளவுகள், 'தாளம்' என்ற சாண் அளவால் நிர்ணயிக்கப்பட்டு 'தசதாளம்' என்ற 10 சாண் முதல் 'ஏகதாளம்' என்ற ஒரு சாண் வரை 10 வகையாக வகுக்கப்பட்டிருக்கிறது. 10 சாண் முதல் 3 சாண் வரையில் ஒவ்வொன்றிலும் 4 அங்குலம் கூட்டிக் குறைத்து உத்தமம், மத்திமம், அதமம் என்ற மூன்று வகையுமுண்டு. 'தாளம்' 12 அங்குலம் கொண்டதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்குலம் ஒன்றுக்கு யவை 8.

[illegible]]

சு - உரை :— பூஜாம் சத்தினுடைய உயரமென்ன, அகலமென்ன அதன் சுற்றுப் பருமை யென்ன இவற்றிலே ஒன்றைப் பதினாறு செய்து, அந்த பாகத்தினாலே 3, 5, 7, 9, 11 அம்சங்களை ஏற்றியும் குறைத்தும், ஸமமாக்கியும், ஆக ஸங்க்யைகள் முப்பத்து மூன்று படி சொல்லப்பட்டது. ஸ்வாயம்பவலிங்கத்திலும் மானவ லிங்கத்திலும் ஷோடசப்ரதிமைகளுக்கும் சொல்லப்பட்டது. (௰௧, ௰௨)

(11-12) மூலஸ்தானத்திலுள்ள லிங்கத்தின் அளவைக் கொண்டு மூர்த்திகளின் அளவை நிர்ணயிக்கும் முறை வருமாறு :—

லிங்கத்தின் 'பூஜாம்சம்' அதாவது பூஜை செய்யும் மேல் பாகத்தின் 'உதயம்' என்னும் உயரம், அல்லது 'தாரம்' என்னும் குறுக்களவு (விட்டம்) அல்லது 'நாஹம்' என்னும் சுற்றளவு இவற்றில் ஒன்றைப் பதினாறு கூறு செய்து அந்தக் கூறுகளில் 16 கூறுகளையும் அப்படியே வைத்துக் கொண்டோ, 3 அல்லது 5 அல்லது 7 அல்லது 9 அல்லது 11 கூறுகளைக்கூட்டியோ அல்லது குறைத்தோ மூர்த்திகளின் உயரத்தை நிர்ணயிக்கலாம். 16 கூறுகளோடு 3, 5, 7, 9, 11 கூறுகளைக் கூட்டும்போது 19, 21, 23, 25, அல்லது 27 கூறுகள் உள்ள ஐந்து உயரங்கள் கிடைக்கும். குறைக்கும் போது 13, 11, 9, 7, 5 இந்தக் கூறுகள் உள்ள ஐந்து உயரங்கள் கிடைக்கும். கூட்டாமலும் குறைக்காமலும் வைத்துக்கொண்டால் 16 கூறுகள் உள்ள ஒரு உயரம் கிடைக்கும். ஆகப் பதினோரு வகை உயரங்கள் கிடைக்கின்றன. இவ் விதமாக ஸ்வயம்பு லிங்கங்கள் அதாவது ஸ்தல புராணங்களின்படி தானாக உண்டான லிங்கங்களின் அளவுகளைக் கொண்டும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட லிங்கங்களின் அளவுகளைக் கொண்டும் பூஜாம்சத்தைக் கொண்டு[1] அளவுகளும், தாரத்தைக் கொண்டு

---

1. 'பூஜாம்சோதயம்' என்பதை நிர்ணயிக்கும்போது பீடத்தின் உயரத்தை நீக்கிவிட வேண்டுமென்றும், ஸ்வாயம்புவ லிங்கத்தின் சிரஸ்ஸை சேர்த்துக் கொள்ளவேண்டும், மானவலிங்கத்தில் சிரஸ்ஸின் உயரத்தை நீக்கி விகிவேண்டுமென்றும் மானஸாரத்தில் சொல்லப்பட்டியிருக்கிறது.

[illegible] ।
[illegible] ।
[illegible] ॥

[illegible]

அளவுகளும், நாஹத்தைக்கொண்டு அளவுகளும் ஆக 33 அளவுகள் கிடைக்கும்.

கர்பகேஹவிபாஜிதே நவாம்ஶம் ப்ரமாணம் பவேத்
ஶுத்தத்வாரஸமம் ச பாதஹீனம் பாதாதிகம் த்ரயம் ததா |
வேதாம்ஶம் விபஜேந்நவோதயமிதம் த்வாரப்ரமாணம் ததா
அதிஷ்டானாங்க்ரிவசாத் ப்ரமாணமுதிதம் அஷ்டாதஶோத்தம் விதே: || ௰௨ ||

கு - உரை :—கர்ப்ப க்ருஹத்தை ஒன்பது கூறுசெய்ய ஒன்பது ப்ரமாணமாம். சுத்த த்வாரஸமமும் நாலத்தொன்று குறையவும் நாலத்தொன்று ஏற்றவும் இரண்டினுடைய நடுவை நாலு கூறுசெய்ய ஒன்பது ப்ரமாணமாம். அப்படியே அதிஷ்டானத்திலும் அங்க்ரி வசத்திலும் பதினெட்டு ப்ரமாணமாம். (௰௨)

(13) கர்ப்ப கிருஹத்தின் உயரத்தைக் கொண்டு மூர்த்திகளின் உயரத்தை நிர்ணயிக்கும் விதம் எவ்வாறெனில், கர்ப்பகிருஹத்தின் உள் கூட்டு சுவற்றின் உயரத்தை 9 கூறுகள் செய்து 1, 2, 3, 4, 5, 6, 7, 8 அல்லது 9 கூறுகளாகிய 9 வகை உயரங்களாக மூர்த்தியின் உயரத்தை நிர்ணயிக்கலாம். கர்ப்பகிருஹத்தின் வாயில் உயரத்தை வாயிற்படியை நீக்கி அளந்து அதில் நாலில் ஒரு பாகம் குறைத்தோ, கூட்டியோ சமமாகவோ எடுத்துக் கொண்டால் அந்த உயரத்தில் $\frac{3}{4}$ பங்கு, 1 பங்கு, $1\frac{1}{4}$ பங்கு என்ற மூன்று அளவைகள் கிடைக்கும். இவைகளின் இடையேயுள்ள தூரங்களை நான்கு கூறுகளாகச் செய்தால் $\frac{3}{4}$ முக்கால், $\frac{13}{16}$ முக்காலே வீசம், $\frac{7}{8}$ முக்காலே அரைக்கால், $\frac{15}{16}$ முக்காலே மூன்று வீசம், 1 ஒன்று, $1\frac{1}{16}$ ஒன்றே வீசம், $1\frac{1}{8}$ ஒன்றே அரைக்கால் $1\frac{3}{16}$ ஒன்றே மூணு வீசம், $1\frac{1}{4}$ ஒன்றேகால் இப்படி 9 வகை உயரங்கள் கிடைக்கும்.

இதேவிதமாக அதிஷ்டானத்தின் அதாவது அடிப்பட்டறையின் உயரத்தைக் கொண்டு 9 வகை உயரங்களும், 'அங்க்ரி' அதாவது அடிப்பட்டறையின் மேல் கட்டப்படும்

𑌵𑌿𑌶𑍇𑌷𑌃]

பாதம் என்ற உறுப்பின் உயரத்தைக் கொண்டு 9 வகை உயரங்களும் ஆக 18 வகை உயரங்களும் கிடைக்கும்.

𑌏𑌕𑌹𑌸𑍍𑌤𑌂 𑌸𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌹𑌸𑍍𑌤𑍈𑌕𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌤𑌃 ।
𑌨𑌵𑌹𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌂 𑌨𑌵𑌧𑌾𑌹𑌸𑍍𑌤𑌮𑌾𑌨𑌕𑌂 ॥ ௧௪ ॥

ஸ - உரை :—ஒரு முழம் தொடங்கி ஒவ்வொரு முழப் பெருக்கத்தால் ஒன்பது முழமளவாக ஒன்பது ப்ரமாணமாம். (௧௪)

𑌏𑌕𑌤𑌾𑌲𑌂 𑌸𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌤𑌾𑌲𑍈𑌕𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌤𑌃 ।
𑌨𑌵𑌤𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌂 𑌨𑌵𑌧𑌾𑌤𑌾𑌲𑌮𑌾𑌨𑌕𑌂 ॥ ௧௫ ॥

ஸ - உரை :—ஒரு தாலம் தொடங்கி ஒவ்வொரு தாலப் பெருக்கத்தால் ஒன்பது தாலமளவாக ஒன்பது ப்ரமாணமாம். (௧௫)

(14-15) ஹஸ்தம் என்னும் முழத்தாலும் தாளம் என்னும் சாணாலும் ப்ரமாணம்:—ஒரு முழம் முதல் 9 முழம் வரையில் ஒவ்வொரு முழமாகச் சேர்த்துக் கொண்டு போகக் கிடைக்கும் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என்ற முழ அளவைகளை உபயோகப் படுத்தலாம். அதேவிதமாக ஒரு தாளம் அல்லது ஒரு சாண் தொடங்கி ஒவ்வொன்றாகச் சேர்த்துக்கொண்டு 9 வகை உயரங்களையும் பிரயோகிக்கலாம்.

𑌯𑌜𑌮𑌾𑌨𑌸𑌮𑍋𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌸𑍍𑌯𑌸𑍀𑌮𑌕𑌂 ।
𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 𑌬𑌾𑌹𑍁𑌸𑍀𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌤𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑍍𑌤𑌕𑌂 ॥
𑌸𑌪𑍍𑌤𑌮𑌾𑌨𑌮𑌿𑌦𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌯𑌜𑌮𑌾𑌨𑌵𑌶𑌾𑌦𑌿𑌤𑌃 ॥ ௧௬ ॥

ஸ - உரை:—யஜமானனுடைய ஸமமும், நேத்ராந்தமளவாகவும், ஆஸ்யாந்தம் அளவாகவும், ஹிக்வாந்தமளவாகவும், பாஹுஸீமாந்தமளவாகவும், ஸ்தனாந்தமளவாகவும், ஹ்ருதயாந்தமே அளவாகவும் யஜமான வசத்தால் ப்ரமாணம் ஏழுபடியாவது. (௧௬)

16. கோயிலை நிர்மாணம் செய்யும் யஜமானனுடைய உயரத்தில் (1) பாதத்திலிருந்து தலையின் உச்சி வரையில்

உள்ள உயரம் (2) கண் வரையில் உள்ள உயரம் (3) வாய் வரையில் உள்ள உயரம் (4) முகவாய்க் கட்டை வரையில் உள்ள உயரம் (5) புஜத்தின் உச்சிவரையில் உள்ள உயரம் (6) மார்பு வரையில் உள்ள உயரம் (7) ஹ்ருதயம் வரையில் உள்ள உயரம் இவ்விதமாக யஜமானனுடைய உயரத்தைப் பொறுத்து 7 வகை உயரங்கள் கிடைக்கும்.

> மூர்த்நி ஸ்வாயம்புவே லிங்கே தாராநாஹவிநிஶ்சிதம் |
> நவிஜ்ஞாதே யதோத்துங்கம் ஶிரஸா ஸஹதாரகம் ||
> நாஹதாரம் ததா ஸ்தூலப்ரதேஶே ஸம்க்ரஹ்யதே || ௧௭ ||

சு - உரை :—ஸ்வாயம்புவமான லிங்கங்களில் மூர்த்னிமானம் தாரநாஹங்களின் ப்ரமாணம் நிச்சயிக்கத் தெரியாவிடில் சிரஸ்ஸளவும் உயரமும், நாஹதாரங்கள் ஸ்தூலமான தேசங்களிலும் ஸங்க்ரஹிக்கப் படும். (௧௭)

17. ஸ்வயம்பூ லிங்கங்களில் பூஜா ஸ்தானத்தின் 'மூர்த்தா' என்னும் தலையளவு, 'தாரம்' என்ற குறுக்களவு, 'நாஹம்' என்ற சுற்றளவு இவை நிச்சயிக்க முடியாவிடில் சிரஸ் (தலை) உள்பட உயரத்தையும், லிங்கம் எவ்விடத்தில் அதிகப் பருமனுயிருக்கிறதோ அந்த இடத்தின் தாரம் என்ற விட்டத்தையும் நாஹம் என்ற சுற்றளவையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

> லிங்காத் பூஜாம்ஶதுங்கம் வா பேராத் பேரஸ்ய துங்ககம் |
> சதுர்விம்ஶச்சதாம்ஶைகம் மூலபேராங்குலம் மதம் || ௧௮ ||

சு - உரை :—லிங்கவசாத் பூஜாம் சத்தினுடைய உயரத்தையும், (மூல) பேரவசாத் பேரத்தினுடைய உயரத்தையும் நூற்றிருபத்தினாலு கூறு செய்து அதிலே ஒரு கூறு மூல பேராங்குலம் என்பது இஷ்டம். (௧௮)

18. மூல பேராங்குலம் :—மூலஸ்தான லிங்கத்தின் சிரஸ்ஸையும் உள்ள பூஜாம்சத்தின் உயரத்தை 124 கூறுகள்

विशेषः]

செய்து கிடைக்கும் ஒரு கூறின் அளவே மூல பேராங்குலம் ஆகும். (அதாவது 124 அங்குலம் என்பது உத்தம தசதாளத்தின் அளவு. ஆகையால் லிங்கத்தை உத்தம தசதாளத்தில் உண்டானதாகக் கருதவேண்டும்.) இதேவிதமாக லிங்கமல்லாத மூலபேரம் உள்ள இடத்திலும் அந்த மூலபேரத்தின் உயரத்தை 124 கூறு செய்து ஒரு கூற்றை மூலபேராங்குலமாகக் கொள்ளவேண்டும் (இவ்விடத்திலும் மூல பேரம உத்தம தள தாளமாகக் கொள்ளப்படுகிறது.)

यद्बेराङ्गुलमानाङ्गुलमात्रा
प्रमाणमुक्तं प्रतिमादितन्मं ।
तत्संख्यया आय शुभादियोग्यं
विधेयमन्यन्न विधेयमार्यैः ॥ १८ ॥

௧௮ - உரை :—யாதொரு மூல பேராங்குலத்தாலே, மானாங்குலத்தாலே, மாத்ராங்குலத்தாலே, ப்ரதிமாதிகளுக்கு ப்ரமாணம் சொல்லப்பட்டதோ, அது ப்ரதிமைகளுக்கு உயரமாவது. அந்த ஸங்க்யையாலே ஆயாதிசுபம் (சுத்தி) செய்யக்கடவது. அது இஷ்டம். அல்லாத ப்ரமாணங்கள் விதேயமல்லவென்று வித்வான்களாலே சொல்லப்பட்டது. (௧௮)

19. ப்ரதிமை என்னும் மூர்த்திகளுக்கு உயரம் மூல பேராங்குலத்தாலோ அல்லது இனி விவரிக்கப்படும் 'மானுங்குலம்' 'மாத்ராங்குலம்' என்ற அளவுகளினாலோ சொல்லப்பட்டால் அந்த அங்குலங்களின் எண்ணிக்கையையே 'ஆயாதி சுத்திக்கு' அதாவது சுபத்தைக் கொடுக்கக் கூடிய அளவை நிச்சயிக்கும் விஷயத்தில் உபயோகிக்க வேண்டும். (அதாவது இனி விவரிக்கப்படும் 'ஜாத்யம்சம் சேர்க்கத்தக்கதில்லை.)

षट्स्वष्टकाद्यायवतारविद्धं मध्यं
धात्रूक्षकं त्रिविधं मानमन्यत् ।
शाखायतद्वृत्तमण्डलाये तन्मानानां
मानानां मानं परमियं वियन्ना विधेयाः ॥ १९ ॥

சு - உரை :—ஆறுயவை (வாற்கோதுமை), ஏழுயவை, எட்டு யவை அகலங்களிலே உத்தமம் மத்யமம் அதமங்கள் மூன்று படியாய் ஆச்சுது. குளநெல்லினுடைய நீளத்தாலும், மூன்று, மூன்றரை, நாலு கொண்டது உத்தம, மத்யம, அதமங்களாக இப்படி மூன்றுபடியாக மானங்குலம் ஆறுபடியாக வைக்கப்பட்டது. (உ௰)

20. மானங்குலம் :—யவை என்னும் வாற்கோதுமை தானியத்தின் அகலத்தை எடுத்துக் கொண்டு 6 யவை யகலம், 7 யவை யகலம், 8 யவை யகலம் என மூன்று வகையாக மானங்குலம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் சாலி என்னும் உயர்ந்த சம்பா நெல்லின் நீளத்தை எடுத்துக் கொண்டு 3 சாலி நீளம், 3½ சாலி நீளம், 4 சாலி நீளம் என்று மற்றும் மூன்று வகை மானங்குலமும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக மானங்குலம் 6 வகைப் படும்.

யஜமாநதக்ஷிணே ஹஸ்தே மத்யமாங்குலிமத்யமே ।
பர்வதீர்கம் தத்வ்யாஸம்வா மாத்ராங்குலமிதீர்யதே ॥ உ௰க॥

சு - உரை :—யஜமானனுடைய வலக்கையிலே நடுவிரலின் நடுவிறைக்கும் மேவிறைக்கும் நடுச்ரேஷ்டம். அகலம் அதமம். மாத்ராங்குலம் இரண்டுபடி விதிக்கப்பட்டது. (உ௰க)

மாத்ராங்குலம் :—

21. யஜமானனுடைய நடுவிரலின் நடுப்பாகத்தின் நீளம் அல்லது அகலத்தை மாத்ராங்குலமாகக் கொள்ளலாம். நீளத்தை எடுத்துக் கொள்வது உத்தமம். அகலத்தை எடுத்துக் கொள்வது அதமம். இப்படி 2 வகையாக மாத்ராங்குலம் சொல்லப்பட்டிருக்கிறது.

மாநவைர் நிர்மிதே லிங்கே ஸிரோமாநம் விதீயதே ।
ஸம்யக் ஸாஸ்த்ரமாநம் நிஸ்சித்ய கல்பயேத் ஸகலம் ஸ்வதம் ॥ உ௰உ॥

சு - உரை :—மனுஷ்யரால் நிர்மிக்கப்பட்டிருந்துள்ள லிங்கங்களுக்கு சிரோமானமொழிய நிச்சயிக்கப்படும். (உ௰உ)

விசேஷ:]

22. ஸ்வயம் பூலிங்கமல்லாமல் மனிதர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கத்தின் அளவுகளைக் கொண்டு மூர்த்திகளின் உயரத்தை நிச்சயிக்கும்போது 'உதயம்' எனும் உயரத்தை லிங்கத்தின் சிரஸை நீக்கி உயரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஸப்தாங்குலம் ஸமாரப்ய த்வ்யங்குலவிவர்த்தநாத் ।
த்ரயோவிம்சச்சதாந்தம் ச மாநம் ஸ்யாத் த்ரிவிதாங்குலை: ॥ ௨௰௩ ।

கு - உரை :—எழுவிரல் துடங்கி ஈரிரண்டுவிரல் வர்த்தனத்தினாலே நூற்றிருபத்து மூன்று விரலளவாக மானாங்குலம், மாத்ராங்குலம், மூல பேராங்குலம், மான அங்குலத்ரயங்களிலும் ப்ரமாணம் விதிக்கப்பட்டது. (௨௰௩)

23. மூல பேராங்குலம், மானாங்குலம், மாத்ராங்குலம் இவற்றைக் கொண்டு மூர்த்திகளின் உயரத்தை நிர்ணயிப்பது எவ்வாறெனில், 7 அங்குலம் முதல் இரண்டிரண்டு அங்குலங்களாகச் சேர்த்துக் கொண்டு போய் 123 அங்குலம் வரையில் 59 வகையாக உயரத்தை நிர்ணயிக்கலாம்.

மாத்ராங்குலைர்க்ருஹார்ச்சாநாம் ப்ரதிமாநாம் ந சாலயே ।
த்ரிஷ்வங்குலப்ரமாணேஷு ஜாத்யம்சகம் நசாவயேத் ॥ ௨௰௪ ॥

கு - உரை :—க்ருஹார்ச்சனைகளுக்கு மாத்ராங்குலத்தாலே ப்ரமாணம் நிச்சயிக்கப்பட்டது. ஆலய பிம்பங்களுக்கு ஆகாது. மூன்றங்குல ப்ரமாணங்களிலும் ஜாத்யம்சம் ஏற்படக் கடவனவல்ல. (௨௰௪)

24. வீடுகளில் பூஜைக்கு வேண்டிய பிம்பங்களின் ப்ரமாணத்தை மாத்ராங்குலத்தினாலேயே நிச்சயிக்க வேண்டும். ஆலய பிம்பங்களுக்கு இது கூடாது. மேலும் மூல பேராங்குலம், மாத்ராங்குலம், மானாங்குலம் இவைகளினால் உயரத்தை நிச்சயித்து ஆயாதி சுத்தி [1] செய்யும் போது 'ஜாத்

---

1. ஆயாதி சுத்தி விசுவகர்மா மதப்படி 10 வகை :—ஆயம், வ்யயம், வாரம், நக்ஷத்திரம், பாம்சம், அம்சம், பக்ஷம், யோனி, ராசி, கணம். இவற்றின் விவரம் 'ஆயாதி' என்ற இதன் அனுபந்தத்தில் காண்க. இந்த நூலில் ஆயம், வ்யயம், வாரம், நக்ஷத்திரம் அம்சம், யோனி, என்ற 6 மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது.

யம்சம்' அதாவது நிர்மாணம் செய்பவரின் ஜாதியைப் பொறுத்துச் சேர்க்கப்பட வேண்டிய அளவைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

ஸாமாந்யம் ஸர்வஜாதீநாம் தந்மாநேநாய நிஶ்சிதம் ।
யதாந்யோக்தம் ஸம்க்ராஹ்யம் தத்வமாநம் விஶேஷத: ॥ ௨௫ ॥

சு - உரை:—ஸர்வ ஜாதிகளுக்கும் ஸமானம் அவ்வவர்மானங்களாலே ஆயாதி நிச்சயிக்கப்படும். இன்னும் வேறேயும் விசேஷித்துக் கொண்டு சொல்லப்படுகின்றது. (௨௫)

25. மேலே சொல்லப்பட்ட 3 வகையான அங்குல ப்ரமாணங்களை உபயோகிக்கும் போது எல்லா ஜாதிகளுக்கும் ஒரே வகையாகவே ஆயாதி சுத்தி செய்தல் வேண்டும். வேறுவிதமாகப் பிரமாணங்களை உபயோகிக்கும் போது அவ்வவர்க்குரிய ஜாத்யம்சத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அஷ்டஷட்த்வ்யேகவர்கக்நே வேதத்வியுகஷட்யுதம் ।
ஸாமம் க்ஷேத்ரஸமாநம் யுக்தம் ஜாத்யாதிகோணகம் ॥
ஸம்ஸாராதி அந்தர்ணாம்ஶ மாநஸ்ய க்ஷேத்ராதிஷு ॥ ௨௬ ॥

சு - உரை:—எட்டு, ஆறு, இரண்டு, ஒன்று, இவற்றைப் பத்தாலே பெருக்கி இதன்மேல் நாலு, இரண்டு, நாலு, ஆறு, இவற்றைக் கூட்டி இதன்மேலே ஒவ்வொரு பாகம் ஏற்றின் இலக்கம் 85, 63, 25, 16 பண்ணி இதிலே ஒவ்வொரு பாகம் ஜாத்யம்சகம் என்று பெயர். இந்த இலக்கங்களே. (௨௬)

அஷ்டாபிர்வர்திதே ருக்ஷஹ்ருதே சைக ருக்ஷஶிஷ்யதே ।
தத்தஜ்ஜாதிதிநம் ப்ரோக்தம் தந்நம் ஸர்வஸம்யுதம் ॥ ௨௭ ॥

சு - உரை:—8 ஆல் பெருக்கி 27-ல் கழிக்க நக்ஷத்திரமாம் அவ்வவர் ஜாதிகளுக்கு இப்படி தினம் சொல்லப்பட்டது. அந்த தினங்களாலே எல்லா ஜாதிகளுக்கும் சுபாயாதிகள் பார்க்கப்படும். (௨௭)

ஷிபேப꞉]

(26-27) ஜாத்யம்சம் என்பதாவது—மூர்த்திகளை நிர்மாணம் செய்விக்கும் கர்த்தாவின் ஜாதியைப் பொறுத்துப் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்ர ஜாதிகளுக்கு முறையே 8, 6, 2, 1 இவற்றைப் பத்தாலே பெருக்கி, அவற்றோடு 4, 2, 4, 6 இவைகளைக் கூட்டினால் முறையே 84, 62, 24, 16 கிடைக்கும். பேரங்களின் உயரத்தை 84, 62, 24, 66 பாகம் செய்து வரும் ஒரு பாகம் ஜாத்யம்சம் ஆகும். இந்த ஜாத்யம்சத்தைச் சேர்த்துக்கொண்டு கிடைக்கும் அளவை எட்டால் பெருக்கி 27 ஆல் வகுக்க வரும் மிச்சம் அசுவினி முதலாக அந்தந்த ஜாதிக்குரிய நக்ஷத்திரமாகும்.

ஶுப⁴மாநம் ந யத்ர ஸ்யாத் ராஜக்³ராமாதி³வாஸ்துஷு ।
தது³த்ஸேத⁴ம் ஶதம் க்ருத்வா த்ரிம்ஶத்³பா⁴க³ஸமாதி³கம் ॥ ௨௰௮ ॥
ஆரப்⁴யைகைகம் வர்த்⁴யாவத் ஶுபா⁴யாதி³கஸம்ப⁴வம் ।
தந்மாநம் தே³வதா³நாம் ஸ்யாத் பாதா³து³ஷ்ணீஷஸீமகம் ॥ ௨௰௯ ॥

சு - உரை:—ராஜக்ராமாதி வாஸ்துக்களுக்கு சுபமானம் குறித்தில்லையாகில் அதனது உத்ஸேதத்தை நூறுபண்ணி ஐயாறு முப்பது ஆதியாக ஒவ்வொரு பாக போகவர்த்தனத்தினாலே நூறளவுஞ்செல்லயாதொரு அளவு சுபமாக ஸர்த்வாதி ஸம்பவிப்பதோ அந்த மானம் தேவனுக்கு பாதாதுஷ்ணீஷாந்தமாக உயரமாவது. ௨௰௮-௨௰௯)

(28-29) அரசனுக்காக ஏற்பட்ட சிற்பத்திலும், க்ராமத்திற்காக ஏற்பட்ட சிற்பத்திலும் சுபத்தைக் கொடுக்கக் கூடிய சரியான அளவு சுலபமாகக் கிடைக்காவிட்டால், அளவை 100 பங்கு பண்ணி, 30 பங்கு முதல் ஒவ்வொரு பங்காகக் கூட்டிக் கொண்டு போய், 100 பங்கு வரையில் அளவு எண்களை சோதித்துப் பார்த்து சுபமான அளவைத் தீர்மானிக்கலாம். அப்படித் தீர்மானித்த அளவை மூர்த்தியின் பாத முதல் உஷ்ணீஷம் வரையில் உள்ள உயரமாகக் கொள்ளவேண்டும்.

தே³வோத்ஸேத⁴ம் த்³விதா⁴ பி⁴த்வா
ஸர்வாங்கே³ஷு நிதே³ஶயேத் ।

𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌹𑌿 𑌯𑍋𑌨𑌿𑌦𑌿𑌨𑌵𑌾𑌰𑌾𑌯𑌵𑍍𑌯𑌯𑌾𑌂𑌶𑌂

𑌧𑍍𑌵𑌜𑌾𑌶𑍍𑌵𑍍𑌯𑌹𑌰𑍍𑌬𑌹𑍁𑌲𑌾𑌘𑌵𑌤𑌸𑍍𑌕𑌰𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 ॥ ௨௯ ॥

சு - உரை :—3, 8, 9, 8, 9, 4 இவற்றினாலே பெருக்கி 8, 27, 7, 12, 10, 9 இவற்றினாலே கழித்து சேஷித்தது யோநி, தினம், வாரம், ஆயம், வ்யயம், அம்சகன் (என்று கண்டு கொள்க). யோநிக்கு த்வஜமாதியாகவும், தினத்துக்கு அசுவதி முதலாகவும், வாரத்திற்கு ஞாயிறு முதலாகவும், ஆயத்துக்கு பஹு முதலாகவும், வ்யயத்துக்கு லாகவம் முதலாகவும், அம்சத்துக்கு தஸ்கரம் ஆதியாகவும், சொல்லப்பட்டது. (௨௯)

(30) ஆயாதி :—அளவின் எண்ணிக்கையை மூன்றால் பெருக்கி எட்டால் வகுத்துக் கிடைத்த மிச்சத்தால் யோனியையும்; எட்டால் பெருக்கி 27 ஆல் வகுத்துக் கிடைத்த மிச்சத்தால் நக்ஷத்திரத்தையும், ஒன்பதால் பெருக்கி ஏழால் வகுத்த மிச்சத்தால் வாரத்தையும், எட்டால் பெருக்கி 12ஆல் வகுத்து வந்த மிச்சத்தால் ஆயத்தையும், 9 ஆல் பெருக்கி 10 ஆல் வகுத்து வந்த மிச்சத்தால் வ்யயத்தையும், 4ஆல் பெருக்கி 9 ஆல் வகுத்து வந்த மிச்சத்தால் அம்சத்தையும் நிச்சயிக்க வேண்டும். யோனியை 'த்வஜம்' முதலாகவும், தினம் என்னும் நக்ஷத்திரத்தை 'அச்வினி' முதலாகவும், வாரத்தை 'ஞாயிறு' முதலாகவும், ஆயத்தை, 'பஹு' முதலாகவும், வ்யயத்தை 'லாகவம்' முதலாகவும், அம்சத்தை 'தஸ்கரம்' முதலாகவும் கணக்கிட்டு நிச்சயிக்க வேண்டும்.

𑌧𑍍𑌵𑌜𑌹𑌰𑌿 𑌵𑍃𑌷𑌭𑍇𑌭𑌾 𑌯𑍋𑌨𑌯𑌸𑍍𑌤𑍇 𑌶𑍁𑌭𑌾𑌖𑍍𑌯𑌾𑌃

[illegible] ।

[illegible]

[illegible] ॥ ௩௧ ॥

சு - உரை :—யோநிகளில் த்வஜமும் ஸிம்ஹமும், ரிஷபமும் யானையும் சுபர்கள். நாளில் ஜன்மம், இரண்டாம் நாள், நாலாம் நாள்,

விபெபஷஃ]

ஆறும் நாள், எட்டாம் நாள், ஒன்பதாம் நாள் இவை நன்று; வாரங்களில் வெள்ளியும், வியாழனும், திங்களும் சுபங்கள். அம்சங்களில் நல்ல பெயருடையவே சுபங்கள். கர்த்தாவினுடைய ஜன்ம நக்ஷத்திரம் துவக்கி சுபாசுபங்களை விசாரித்துக் கொள்ளவும். (௩௰௧)

31. யோனிகளில் த்வஜம், சிம்மம், வ்ருஷபம், யானை இவைகள் சுபம், நக்ஷத்திரங்களில் கர்த்தாவின் நக்ஷத்திரத்திலிருந்து 1, 2, 4, 6, 8, 9 வது நக்ஷத்திரங்கள் சுபம். வாரங்களில் வெள்ளியும், வியாழனும், திங்களும், புதனும் சுபம். அம்சங்களில் சுபமான பொருளுள்ளவை சுபம். மேலும் பொதுவாகக் கர்த்தாவினுடைய ஜன்ம நக்ஷத்திரத்தில் ஆரம்பித்து சுபாசுபங்களை அறிதல் வேண்டும்.

ஶிஷ்டம் விநா ஸமெ க்ஷீணெ ஞூயாதி ஶொஹநம் விதுஃ ।
ஸௌராவாராதிஸம்யுக்தம் விஶாகாதிப்ரப்ருதிப்ரப்ருதி ।
வியொகம் மரணம் நாஶநஞ்சைவ யொகமிஷ்யதெ ॥ ௩௰௨ ॥

கணம் ஸமாநுஷாஸுரம் த்யக்த்வா ஶுபதமந்யதா ।
ஏவம் ஹி ஶொஹநாயாதி ஶுபகர்த்மாஸு யொஜயெத் ॥
௩௰௩

சு - உரை :—சேஷித்தவற்றைக் கழித்து, குறைந்தவற்றைக் கூட்டிக் கொண்டு ஆயாதி சோபனங்களைச் சொல்லவும். வாரங்களில் ஞாயிறு முதலாகவும், நக்ஷத்திரங்களில் விசாகாதியாகவும், நன்னாலாக எண்ணி வியோகமும், மரணமும், நாசமும் ஆகாது. அமிருதயோகம் சுபமாகக் கொள்ளப்பட்டது. கணங்களில் மனுஷ கணமும் அஸுர கணமும் ஒழிந்து அல்லாத கணம் சுபமாவது. ஏவம் விதமான ஆயாதிகளை சோபனார்த்தமாக யோசித்துக் கொள்ளவும். (௩௰௨-௩௰௩)

(32-33) வகுக்கும் போது மிச்சமில்லாமல் சமமாகி விட்டால் ஆயாதிகள் சுபம் என்று கொள்ள வேண்டும்.

வாரங்களில் ஞாயிறு முதலாகவும், நக்ஷத்திரங்களில் விசாகாதியாகவும், ஒன்றோடொன்று சேர்த்து நாலு நாலாக

வரிசையாக எண்ணினல் முறையே வியோகம், மரணம், நாசம் அமிர்தம் என்ற யோகங்கள் என்று கொள்ளவேண்டும். இவைகளில் அமிர்தயோகம் சுபம். மற்றவை அசுபம். கணங்களில் மனுஷ்யகணமும் அசுரகணமும் விரும்பத்தக்கதல்ல. தேவகணம் சுபம். இவ்விதமாக ஆயாதிகள் சுபமாக இருத்தல் வேண்டும்.

𑌇𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑍇 𑌸𑌕𑌳𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑍇 𑌮𑌾𑌨𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑍋 𑌨𑌾𑌮
𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

அகஸ்திய முனிவர் அருளிய ஸகளாதிகாரம் என்ற நூலில்
'அளவைகளின் வகை' என்னும் முதல் அத்தியாயம்
முற்றுப்பெற்றது.

𑌅𑌥 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ||

𑌉𑌤𑍍𑌤𑌮𑌦𑌶𑌤𑌾𑌲𑍋 𑌨𑌾𑌮 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑌾𑌨𑌮𑍍

இரண்டாவது அத்தியாயம்

உத்தமதசதாளம் என்னும் புருஷமானம்

𑌉𑌷𑍍𑌣𑍀𑌷𑌾𑌤𑍍𑌪𑌾𑌦𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌕𑍍𑌤𑌂 𑌦𑌶𑌤𑌾𑌲𑌕𑌂 |
𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌆𑌦𑌿𑌮𑌾𑌨𑌾𑌨𑍍𑌤𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 || ௧௪ |

𑌤𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌚𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌾𑌲𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌸𑌂𑌮𑌿𑌤𑌂 |
𑌯𑌥𑌾𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌂 𑌤𑌾𑌲𑌾𑌦𑍍𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌦𑍀𑌯𑌤𑍇 || ௧௫ |

வாமஷாநம்]

கு - உரை :—வேதம் 4, பாணம் 5, ஆக 20, அஷ்டத்வாதச 96, அஷ்டார்த்தகம் 4, ஆக நூற்றிருபத்து நாலு, இப்படியிலே பாகிக்கப் பட்ட அங்குலம் தேஹலப்தாங்குலம். அந்த அங்குலத்தில் எட்டி லொன்று 'யவை' எனப்பட்டது. இந்த அங்கும், யவை இவைகளி ஞலே அங்கமானம் அளக்கப்படும். (௩௰௩-௩௰௫)

34-35. மூர்த்திகளின் உஷ்ணீஷம் முதல் பாதம் வரையில் அதாவது முடிமுதல் அடிவரையில் உள்ள உயரத்தை 124 பாகங்களாக்கினல் அதையே மூர்த்தியின் தேஹலப்தாங்குலம் என்பர். அதில் எட்டில் ஒன்று 'யவை' எனப்படும். இவ்விதமான 'அங்குலம்,' 'யவை' என்ற அளவைகளினல் மூர்த்திகளின் அங்கங்களின் அளவைகள் [1] சொல்லப்படும்.

யவத்ரயாம்ஶமுஷ்ணீஷம் தஸ்மாத் தூர்த்வம் தஸ்மாத்த்ரயாம்ஶகம் |
கேஶாந்தம் து ததோ(அ)க்ஷிஸூத்ரம் யவ ஸமந்விதம் || ௩௰௬ ||
நாஸாவடாவஸாநஞ்ச ததோ ஹநுஞ்ஜஸாநகம் |
யுக்மாம்ஶம் ச யவம் தஸ்மாத் த்ரயாம்ஶம் முகஸாநகம் || ௩௰௭ ||
யவஹீநஞ்ச ஸார்த்த⁴ம் கண்ட²ம் ருத்³ர யவாதி⁴கம் |
ஹாராம்ஶம் ஹ்ருத்ததோ நாபிநார்த்தே⁴ ஹ்ருத்ஸ்தநஸ்ய ச மேட்⁴ரகம் || ௩௰௮ ||
ஸமம் தஸ்மாத் கடிப்ராந்தம் நக்ஷத்ராம்ஶம் யுக்மாம்ஶகம் |
ஜாநுஜம் சோருதை³ர்க்⁴யம் ஸ்யாத் ஜாநுஸ்ஸந்த்⁴யாயா || ௩௰௯

கு - உரை :—உஷ்ணீஷம் விரல் 1 யவை 3
அதுபற்றி கேசாந்தம் விரல் 3
அதுபற்றி நேத்ராந்தம் விரல் 4 யவை 3
அதுபற்றி நாஸாபுடம் விரல் 4 யவை 3

---

1. இது உத்தமதசானத்திலுள்ள மூர்த்திகளுக்குப் பொருந்தும். மற்ற வகைத்தாள மானத்திலுள்ள மூர்த்திகளுக்கு அவற்றிற்குரிய அங்குலத்தைத் தாளம் ஒன்றுக்கு 12 அங்குலமாகவும் உத்தமதாளத்திற்கு 4 அங்குலம் கூட்டியும், அதமதாளத்திற்கு 4 அங்குலம் குறைத்தும் கணக்குப் பார்த்து மொத்த எண்ணிக்கையினல் உயரத்தைக் கூறுசெய்து அங்குலத்தையும் யவையையும் நிச்சயிக்கவேண்டும்.

அதுபற்றி ஹங்வந்தம் விரல் 4 யவை 3

களமானது விரல் ½ அதாவது யவை 4

கண்டத்தின் நீளம் யவை குறைய விரல் நான்கு (அதாவது விரல் 3 யவை 7)

அதுபற்றி ஹ்ருதயம் விரல் 12 யவை 11

(அதாவது விரல் 13 யவை 3)

அதுபற்றி மேட்ரமூலாந்தம் விரல் 13 யவை 3

அதில் நின்றும் தன்னிலொப்பது [illegible] அதாவது

இடுப்பிலிருந்து துடை விரல் 27

ஜானு (முழங்கால் முட்டு) விரல் 4

ஜங்கா (முழங்கால்) துடைக்கு ஸமம் அதாவது விரல் 27

பாதம் ஜானுவுக்கு ஸமம் அதாவது விரல் 4. (௩௰௬-௩௰௯)

36-39.

	அங்.		யவை.
உஷ்ணீஷம் என்னும் முடி	1	—	3
உஷ்ணீஷத்திலிருந்து கேசாந்தம் அதாவது நெற்றியின் மேல் எல்லை வரை	4	—	3
அதிலிருந்து (அக்ஷிவர்மா) கண் இமைவரை	4	—	3
மூக்கு	4	—	3
அதிலிருந்து முகவாய்க்கட்டை முடிய	4	—	3
,, கழுத்தின் நுனிவரை	0	—	4
,, கழுத்தின் அடிப்பக்கம் வரை	3	—	7
அதிலிருந்து ஹ்ருதயம் வரை	13	—	3
,, நாபி வரை	13	—	3
,, மேட்ர மூலம் அதாவது குறியின் ஆரம்பம் வரை	13	—	3
இடுப்பிலிருந்து துடை சேர்ந்தது	27	—	0
முழங்கால் சில் (ஜானு)	4	—	0
முழங்கால் (ஜங்கா)	27	—	0
பாதம்	4	—	0
	124	—	0

வா...லக்ஷணம்]

அங்கு³ஷ்டா²த் பார்ஷ்ணி பர்யந்தம் தஸ்ய ஸப்ததஶாங்குலம் ।
ஹிக்காத்யோ பு⁴ஜஸ்தா²நம் ஸப்தவிம்ஶத்யங்குலம் ॥ ௪௰ ॥
ஐகவிம்ஶதி ஹஸ்தஃ ப்ரகோஷ்டம் ப்ரோக்தமாயதம் ।
தலம் மத்⁴யமாந்தம் ஸார்த⁴ம் த்ரயோத³ஶாங்குலம் ॥ ௪௰௧ ॥

சு - உரை :—பெருவிரல் முதல் குதிகால் வரையில் விரல் 17
ஹிக்கா ஸ்தானத்தைப்பற்றி (கழுத்தின் கீழ்க்கோடு முதல்)
பாஹு (புஜம்) விரல் 27

முன் கை விரல் 21
தலமூலத்தைப்பற்றி நடுவிரல் நுனிவரையில் விரல் $13\frac{1}{2}$ [1]
(௪௰-௪௰௧)

(40-41) கால் கட்டைவிரல் முதல் குதிகால் வரை நீளம் 17 அங்குலம். ஹிக்காமுதல் அதவாது நெஞ்சின் நேர்க்கோடு முதல் புஜத்தின் நீளம் 27 அங்குலம். மணிக்கட்டு வரையில் முன்னங்கையின் நீளம் 21 அங்குலம். மணிக்கட்டு முதல் நடு விரல் நுனிவரை நீளம் $13\frac{1}{2}$ அங்குலம்.

ஹிக்காஸ்தா²நம் நவாங்கம் ஸ்யாத் க்³ரீவா மூலம் க்³ரீவமுக²ம் ।
ஶிக்ஷ்யம் பா³ஹுவிஸ்தாரம் அர்த⁴ஸப்தாங்குலம் ... ॥ ௪௰௨ ॥

42. கழுத்தின் மேல் எல்லையில் அதன் விஸ்தாரம் 12 அங்குலம். கழுத்தின் அடிப்பக்கத்தின் விஸ்தாரம் 9 அங்குலம். கழுத்தின் வெளிப்பக்கத்திலிருந்து புஜத்தின் உள்பக்கம் வரையிலுள்ள தூரம் ஒவ்வொரு பக்கத்திலும் $6\frac{1}{2}$ அங்குலம் இருபுஜங்களின் வெளிப்புறஎல்லைகளுக்குள்ள விஸ்தாரம் $40\frac{1}{2}$ அங்குலம்.

---

1 இதற்குமேல் உரைப்பகுதி சுவடியில் கிடைக்கவில்லை.

𑌶𑍍𑌰𑍀𑌵𑌾𑌸𑌮𑍁𑌕𑍁𑌲𑌂 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌸𑌮𑍁𑌕𑍁𑌲𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌵𑌿𑌪𑌾𑌰𑍁𑌕𑌂 ।
𑌆𑌤𑌰𑍍𑌵𑍈𑌷𑍍𑌣𑍁 𑌹𑍍𑌰𑌦𑍋𑌪𑌤𑌂 𑌕𑌕𑍍𑌷𑌾𑌂𑌶𑌤𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌹𑍃𑌤𑌂 ॥ ௪௨ ॥

43. புஜத்தின் அடிப்பக்க விஸ்தாரம் 9 அங்குலம். கக்கங்கள் ஒன்றுக்கொன்றுள்ள தூரம் 22 அங்குலம்.

𑌭𑍁𑌜𑌮𑍂𑌲𑍇 𑌤𑍁 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌨𑌵𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌸𑌮𑍍𑌮𑌿𑌤𑌂 ।
𑌕𑌕𑍍𑌷𑌯𑍋𑌰𑌨𑍍𑌤𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 ॥ ௪௩ ॥

44. மார்பின் அகலம் ஸ்தன மத்தியக் கோட்டில் 20½ அங்குலம். ஹ்ருதயம் இருக்கும் இடத்தில் விஸ்தாரம் 18½ அங்குலம்.

𑌉𑌰𑍋 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌹𑍃𑌦𑌯𑌾𑌵𑌧𑌿𑌤𑌾𑌰𑌵𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍋𑌣𑌿𑌤𑌾𑌰𑌂 𑌕𑌟𑍀𑌤𑌾𑌰𑌂 𑌵𑌿𑌂𑌶𑌾𑌂𑌶𑌂 𑌦𑍇𑌹𑌮𑌧𑍍𑌯𑌕𑌂 ॥ ௪௫ ॥
𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌊𑌰𑍁𑌮𑍂𑌲𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌂 𑌊𑌰𑍁𑌮𑌧𑍍𑌯𑌕𑌂 ।
𑌜𑌾𑌨𑍁𑌮𑍂𑌲𑌂 𑌵𑌿𑌦𑍇𑌹𑌾𑌂𑌶𑌂 𑌜𑌾𑌨𑍁𑌮𑌧𑍍𑌯𑌂 𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 ॥ ௪௬ ॥

ललाटपट्टसंयुक्तं तदूर्ध्वे पूरिसंयुतम्।
मूलविस्तारमेवं स्यात् मौलेर्द्वादशमात्रकम् ॥ २०७ ॥
अग्रं षष्ठांशहीनं वा सप्तांशोनमथापि वा।
वामेऽर्धशशिसंयुक्तं (द)क्षिणे नागपुष्पकम् ॥ २०८ ॥

207 . 208. கேசாந்தத்திலிருந்து முடியின் உயரம் 24½ அல்லது 24¾ அங்குலம் இருத்தல்வேண்டும். நெற்றிப் பட்டத்தோடும், அதற்குமேல் 4 பூரிமங்களோடும் (புஷ்பம் அல்லது இலைபோன்ற வேலைப்பாடு) அமைந்திருக்கவேண்டும். மகுடத்தின் அடிப்பாகம் 12 அங்குலம் அகலமுள்ளதாக இருக்க வேண்டும். நுனிப்பாகத்தின் அகலம் அதில் ⅙ அல்லது ⅐ குறைவாக இருக்கவேண்டும். இடப் பக்கத்தில் அர்த்த சந்திரனும், வலப் பக்கத்தில் அர்த்த நாக புஷ்பமும் அணிந்திருத்தல் வேண்டும்.

कटिसूत्रसमायुक्तं कृत्रिमाननसंयुतम्।

209. முகம் போன்ற வேலைப்பாடுள்ள முகப்புடன் கூடிய அரைஞாண் இடுப்பில் அணிந்திருக்கவேண்டும்.

कटकत्रयसंयुक्तं केयूरं साङ्गदं तथा।
पत्रवल्लीसमायुक्तं उदरबन्धसंयुतम् ॥ २०९ ॥

209. கையில் மூன்று கங்கணங்களும், கொடிப் பூ வேலை செய்த கேயூரமும் (தோள்வளை) அங்கதமும் (வாகுவலயம்) உதரபந்தனமும் (வயிற்றுப் பக்கத்தில் அணியப்படும் ஆபரணம்) அணிந்திருக்க வேண்டும்.

ऊरुदामान्वितं पादजालं पादाङ्गुलीयकम्।
कर्णवेष्टस्य विस्तारं हारमयूरांगुलीयकम् ॥ २१० ॥

210. ஊரு தாமம் என்னும் ஆபரணமும், மாலைபோன்ற பாதசரமும், துடைவரையில் தொங்கும் பாதங்களில் விரலணி

1. कृत्रिमानन इति वा पाठः

களும் ஆபரணங்களாக அமைக்கப்படவேண்டும். கர்ணபூரம் என்னும் காதணியின் அகலம் 4½ அங்குலம் இருக்கவேண்டும்.

பரஶுர்த்வாதஶமாத்ரஸ்ஸ்யாத் தத்ஸமம் ஹரிணீ ஭வேத் ।
யஜ்ஞோபவீதஸம்யுக்தம் சன்னவீரம் ப்ரயோஜயேத் ॥ ௨௱௰௧ ॥

211. மழுவின் நீளம் 12 அங். மானின் உயரமும் அதுவே. யக்ஞோப வீதமும் (பூணூல்) சன்ன வீரம் என்னும் பூணூலைப்போல் குறுக்காக அணியப்படும் இருமாலை களும் அமைக்கப்படவேண்டும்.

ஹாரஸூத்ரேண ஸம்யுக்தம் ஹாரஶ்ரீவத்ஸகம் ஭வேத் ।
உபர்யுபரி ரத்நாட்யம் நிஸ்தலாஞ்சலஸம்யுதம் ।
ஸர்வாங்கஸுந்தரம் தேவம் ஶேஷமூஹ்யம் விசக்ஷணை: ॥ ௨௱௰௨

212. ஹாரமும், ஹார ஸ்ரீவத்ஸமும் (ஆரத்தில் தொங் கும் மாணிக்கக் கல்) கழுத்தை ஒட்டின ரத்ன அட்டிகையும், நிஸ்தலாஞ்சலமும் (?) ஆபரணங்களாக அமைந்திருக்கவேண் டும். இவ்விதமாக ஸர்வாங்க சுந்தரராய் ஸோமாஸ்கந்த மூர்த்தி அமைக்கப்படவேண்டும். மற்ற அளவுகள் புத்திமான் களால் ஊகித்துக்கொள்ளத் தக்கவை.

தேவீலக்ஷணம்

தேவஸ்ய வாமபாகே து வாமபாதஞ்ச ஸஹாஸநே ।
குஞ்சிதாஸநஞ்ச தக்ஷிணம் ஶாயிதம் ஭வேத் ॥ ௨௱௰௩ ॥

213. பரமசிவ மூர்த்தியின் இடது பாகத்தில் அதே ஆச னத்தில் உமாதேவி இடது காலைத் தொங்க விட்டுக் கொண்டும் வலது காலைப் படுக்கையாக வைத்துக் கொண்டும் அமைக்கப் படவேண்டும்.

ஸாவ்யம் ஸ்யாத் ப்ரலம்பம் (தேவ) தேவீ தேவஸ்ய சேஷ்டிதே ।
ஶேஷா தேவாஶ்ரிதம் வக்த்ரம் முகுளிதம் ஸமஸம்யுதம் ॥ ௨௱௰௪ ॥

ஸோமாஸ்கந்தமூர்த்திலக்ஷணம்]

142. தேவி ஈசுவரனுக்குச் சற்றுப் பின்னல் அமர்ந்து இருக்கவேண்டும். தேவியின் முகம் ஈசுவரனைப் பார்ப்பது போல் சிறிது திரும்பியிருக்கவேண்டும். அழகாகச் சிறிது வளைந்திருக்கவும் வேண்டும்.

வாமஹஸ்தம் து வரதம் தக்ஷிணம் தூத்பலாந்விதம் ।
மகுடம் கரண்டிகாம் வாபி கேசபந்தமதாபி வா ॥ ௨௱௰௩ ॥

214. இடதுகை வரத[1] முத்திரையைத் தாங்கியிருக்க வேண்டும். வலது கையில் புஷ்பம் இருக்கவேண்டும். தலையில் மகுடமோ, கரண்டிகையோ, கேசபந்தமோ, கிரீடமோ[2] அமைந்திருக்கலாம்.

கிரீடம் வா விசேஷேண ஷட்கர்ணமுகஸம்யுதம் ।
ஸர்வாபரணஸம்யுக்தம் ச்யாமம் ஸஸ்யநிபம் ஸதா ॥ ௨௱௰௪ ॥

215. காதில் மகர குண்டலத்தோடும் மற்ற எல்லா ஆபரணங்களோடும் நெற்பயிர் போன்ற சியாமள வர்ணத்தோடும் தேவி விளங்கவேண்டும்.

ரக்தாம்பரதரா தேவீ கிஞ்சிதுந்நதசிபுகா ।
சந்நவீரயுக்தா ஹாரகேயூரபூஷணா ॥ ௨௱௰௫ ॥

216. சிவப்பு வஸ்திரம் தரித்து முகவாய்க் கட்டை சற்று உயர்ந்து சன்ன வீரம் என்னும் குறுக்கு மாலை அணிந்து ஹாரங்கள், தோள்வளை முதலிய ஆபரணங்களோடும் தேவி அமைக்கப்படவேண்டும்.

---

1. மணிக்கட்டிலிருந்து விரல்கள் கீழ்நோக்கி உள்ளங்கை முன்புறம் இருக்கும்படி கையைத் தொங்கவிடுவதற்கு 'வரதமுத்ரை' என்று பெயர்.

2. இந்நான்கும் நால்வகை மகுடங்கள் அல்லது தலையணிகள். இவற்றின் விவரம் மானஸாரத்தைக் [illegible] சிற்பங்களைக் கொண்டும் [illegible] இவற்றின் [illegible] கோபிநாதராவால் எழுதப்பட்டுள்ள Indian Icnography முதல் வால்யூமில் முதல் பாகத்தில் 15-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

𑌮𑌾𑌂𑌗𑌲𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌵𑌿𑌭𑍇𑌦𑌿𑌤𑌂 ।
𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌦𑍃𑌶𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 ॥ ௨௱௰௭ ॥

𑌅𑌥𑌵𑌾 𑌹𑍇𑌮𑌜𑌂 𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌵𑍍𑌯𑌂 𑌵𑌾 𑌤𑍍𑌰𑌪𑍁𑌜𑌂 𑌤𑌥𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌵𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌵𑌚𑍍𑌛𑌿𑌦𑍇𑌵𑍀𑌹𑌾𑌰𑌮𑌾𑌂𑌮[1] 𑌸𑌂𑌯𑍁𑌤𑌂 ॥ ௨௱௰௮

217 - 218. தேவிக்கு உள்ள மாங்கல்யம் இருவிதமாக அமைக்கலாம். ஒன்று வ்யக்தம் அதாவது தெளிவாகப் புலப்படுவது, மற்றொன்று தெளிவாகப் புலப்படாதது; அல்லது பொன்னாலான மாங்கல்யமும் தொங்க விடப்பட்டோ திடமாகப் பிம்பத்தோடு பொருத்தப்பட்டோ இருக்கலாம். சிலர் தேவீ பிம்பத்திற்கு ஏற்பட்ட அளவுகளின்படி வேறு வகையாகவும் தேவியின் உருவத்தை அமைக்கின்றனர்.

𑌊𑌰𑍁𑌬𑌾𑌹𑍍𑌯𑌾 𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 ।
𑌧𑍃𑌤𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌜𑌾𑌨𑍌 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌵𑌾 ॥ ௨௱௰௯ ॥

219. தொடைக்கு வெளியே இடது கையை ஊன்றியும், வலது கையில் புஷ்பத்தைத் தரித்து வலது முழங்காலிலோ அதற்குச் சற்று உயரமாகவோ வைத்தும் அமைக்கிறார்கள்.

𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌲𑌕𑍍𑌷𑌣𑌂

𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍍𑌯𑍋𑌸𑍍𑌤𑍁 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌰𑍂𑌪𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥
𑌦𑍇𑌵𑌮𑌾𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍇𑌨 𑌷𑌡𑍍𑌵𑌿𑌂𑌶𑌦𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑌕𑌂 ॥ ௨௱௨௰ ॥

220. ஈச்வரனுக்கும் தேவிக்கும் நடுவே ஸ்கந்தன் உருவம் நின்ற நிலையில் அமைக்கப்படவேண்டும். ஈசுவரனுடைய உயரத்தினால் கிடைத்த அங்குலத்தால் 26 அங்குலம் ஸ்கந்தனுடைய உயரம் இருக்கவேண்டும்.

𑌤𑌨𑍍𑌮𑌾𑌨𑌂 𑌬𑌹𑍁𑌧𑌾𑌵𑍇𑌨 𑌅𑌮𑌲𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌦𑍀𑌯𑌤𑍇 ।
𑌸𑌮𑍍𑌮𑌾𑌨𑌂 𑌤𑍁 𑌪𑌿𑌣𑍍𑌡𑌮𑌾𑌨𑌂 𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑍍𑌨𑍇𑌤𑍍𑌰𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌕𑌂 ॥
॥ ௨௱௨௰௧ ।

---

1. ‘𑌸𑌂𑌮𑌾𑌂𑌮’ 𑌇𑌤𑌿 ‘𑌵’ 𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑍇 𑌪𑌾𑌠𑌃.

வேரோலஷ்க்ஷணம்]

221. அந்த உருவத்திற்கு பஞ்சதாளத்திற்குச் சொன்ன முறைப்படி அங்கங்களின் அளவுகள் கணக்கிடப்பட வேண்டும். சிரத்தின் அளவு 1 அங். கேசாந்தத்திலிருந்து கண் 3 அங்.

த்தார்த்யம் தாவத்பாதம் ஸ்யாத் ச்ரோத்ரம் ஹநுர்விஷ்யதே ।
க்ரீவா தத்வ்யம் மத்யம் மேட்ரம் நாபிர்மாத்ரே ருகம் ॥ ௨௱௨௰௨ ।
ஊருர்வேதாயதம் ஜாநு கராஜம் மேட்ரம் தத்ஸ்யகம் ।

222 - 223. கண்ணிலிருந்து நாஸாபுடம் அதே அளவு, அதாவது 3 அங். அதிலிருந்து ஹநு அல்லது தாடை 3 அங் கழுத்து 2 அங். கழுத்திலிருந்து ஹ்ருதயம், ஹ்ருதயத்திலிருந்து நாபி, நாபியிலிருந்து மேட்ரமூலம் முறையே 9, 8, 7 அங்குலம். தொடையின் நீளம் 12 அங். முழங்கால் முட்டு 2 அங். முன்னங்கால் தொடையைப்போல், அதாவது, 12 அங்.

தஜ்ஜாநுஸமோத்தம் வதஸாயாமஷிஷ்யதே ॥ ௨௱௨௰௩. ॥

223. பாதத்தின் உயரம் 2 அங். இவை உயரங்கள்.

தயாம் மத்யம் தயாபாமம் ஷிவத்ராம் மத்யதீவர்கம் ।
பாஹுதயாம் மத்யம் மேட்ரம் கோஷ்டம் ஹாமம் தத்ஸமம் ॥
॥ ௨௱௨௰௪ ॥

224. பாதத்தின் நீளம் 10 அங்குலம். புஜத்தின் நீளம் 14 அங். முன்னங்கை நீளம் 10 அங். உள்ளங்கை நீளம் 4 அங்.

மத்யாமத்யம் யமாமத்யம் ச்ரோத்ராயதநாஷிகா ।
தர்ஜநீஸமம் ஸமம் கநிஷ்டம் த்ர்யம் மத்யம் ஸமம் ॥ ௨௱௨௰௫ ॥

225. நடுவிரல் நீளம் 4 அங்குலம். மோதிர விரல் நீளம் $3\frac{1}{2}$ அங். ஆள்காட்டி விரலின் நீளமும் அதுவே. அதாவது $3\frac{1}{2}$ அங்குலமே. கட்டை விரல், சுண்டு விரல் இவைகளின் நீளம் 3 அங்குலம்.

[illegible]
[illegible] ॥ 226 ॥

226. உள்ளங்கையின் அகலம் 2½ அங்., முன்னங்கை மத்தியின் அகலம் 4 அங்., புஜத்தின் அடிப்பக்க அகலம் 5 அங்.

[illegible]
[illegible] ॥ ॥ 227 ॥

227. முகத்தின் அகலம் 8½ அங்., கழுத்தின் அகலம் 7 அங். இரு கக்ஷங்களுக்கும் இடையேயுள்ள தூரம் 13 அங்.

[illegible]
[illegible] ॥ ॥ 228

228. தொடையின் அகலம் 8 அங். முழங்கால் முட்டின் அகலம் 6 அங். முன்னங்கால் அகலம் 4 அங். முன்னங்கால் கீழ்க் கோடியிலுள்ள 'நளகா' என்னும் இடத்தின் அகலம் 4 அங். பாதத்தின் அகலம் 6 அங்.

[illegible]
[illegible] ॥
॥ 229 ॥

229. ஹ்ருதயத்தின் ஒழுங்குக்கு உடம்பின் அகலம் 12 அங். உதர மத்யம் 11 அங். ச்ரோணி தேசம் (தொப்புள் ஒழுங்கு) 12 அங். இடுப்பு 13 அங்.

[illegible]
[illegible] ॥ 230 ॥

ஸோமாஸ்கந்தலக்ஷணம்]

230. இடது கையில் முகுள [1] முத்திரையைத் தாங்கி அதில் புஷ்பத்தைத் தரித்தும், வலக்கையில் வரத ஹஸ்தத்தையும் தாங்கியிருக்கவேண்டும். சன்ன வீரமும், (இரு தோள்களிலிருந்தும் பூணூல் போல நாபி வழியாக எதிர்ப்புற விலா வரை தொங்கும் இரு குறுக்கு மாலைகளுக்குச் 'சன்ன வீரம்' என்று பெயர்.)[2] பாம்பு முகப்போடு கூடிய அரைஞாணும் அணிந்திருக்கவேண்டும்.

ஸம்க்ஷிப்தபாதௌ து ஸம்க்ஷிப்தஜாநுஸம்யுதம் |
ஸிம்ஹாஸநோபரிஷ்டாத்தம் பத்மாஸநதலேऽபி வா || ௨௱௩௰௧ ||

231. இரு கால்களும் சிறிது வளைந்து சிறிது நடப்பது போன்ற ஜாடையா யிருக்கவேண்டும். சிம்மாசனத்தின் பேரிலோ, பத்மாசனத்தின் பேரிலோ ஸ்கந்த மூர்த்தியை அமைக்கலாம்.

உத்தமே தஶதாலேந ஈஶ்வரம் தேவீம் ச மத்யமே |
ஸ்கந்தம் ச பஞ்சதாலேந பாலபூஷணபூஷிதம் || ௨௱௩௰௨

232. ஈசுவரனை உத்தம தசதாளத்திலும், தேவியை மத்யமதசதாளத்திலும், ஸ்கந்தரை பஞ்சதாளத்தில் குழந்தைகளுக்கான ஆபரணங்களோடும் அமைக்கவேண்டும்.

ஹிக்காஸூத்ராந்தகோச்ச்ராயம் தேவ்யாஸ்தநாந்தமாத்ரக:
ஸமவாமகே சைக: |
தேவ்யாவக்ஷ:ஸ்கந்தஸ்தநாந்தே சாந்தே த
யாஸ்கந்தஸ்யாதிகமீரித: || ௨௱௩௰௩ ||

233. தேவியினுடைய உயரத்தில் பாதம் முதல் (ஹிக்கா) நெஞ்சுக்குழி வரையில் உள்ள உயரம், ஸ்தநாந்தம் வரை

1. முகுளம் என்பது மொட்டைப்போல விரல்களை மேலே குவித்துச் சேர்த்து வைத்துக்கொள்ளுதல்.

2. ஸந்நவீரலக்ஷணம் ||
யஜ்ஞோபவீதவத் ஸ்கந்தயோருபயோரபி |
வாமதக்ஷிணயோ: ப்ருஷ்டே நாப்யா: ஸூத்ராந்தமேகவத் ||
—காஶ்யபீயம் அ. 16. ஶ்லோ. 54, 55.

யில் உள்ள உயரம் இவற்றிற்கு இடையேயுள்ள உயரம் மூவகை உயரங்களாக ஆக ஸ்கந்தரின் உயரத்தை அமைத்துக்கொள்ளலாம். ஸ்கந்தரை வைசாக[1] ஸ்தானகத்திலோ, நர்த்தன நிலையிலோ, உட்கார்ந்திருக்கும் நிலையிலோ அமைக்கலாம்.

——(O)——

𑌇𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑍇 𑌸𑌕𑌳𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑍇 𑌸𑍋𑌮𑌾𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌨𑌾𑌮 𑌷𑌷𑍍𑌠𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

இவ்வாருக அகஸ்தியர் அருளிச்செய்த ஸகளாதிகாரம் என்னும் சிற்ப சாஸ்திரத்தில் ஸோமாஸ்கந்த லக்ஷணம் என்னும் ஆருவது அத்தியாயம் முற்றுப்பெற்றது.

— :0: —



𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍇𑌖𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌂

𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍇𑌖𑌰𑌬𑌿𑌮𑍍𑌬𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌽𑌧𑍁𑌨𑌾 ।
𑌮𑌾𑌨𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌚 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌂 𑌲𑌮𑍍𑌬𑌮𑌾𑌨𑌾𑌵𑌕𑌾𑌶𑌕𑌂 ॥
॥ 𑌉𑌾𑌨𑌟𑍇 ॥

234. சந்திரசேகர மூர்த்தியின் நீள அகல அளவைகள் முன் சொல்லப்பட்டதுபோல் எடுத்துக்கொள்ளவேண்டும். லம்பமானமும் (சூத்திரங்களும் அவற்றிலிருந்து இடைவெளிகளும்) அங்கங்களின் இடைவெளிகளும் இனி விவரிக்கப்படுகின்றன.

---

2. வலது காலை முன்னால் சிறிது நீட்டி ஒரு பக்கமாகச் சிறிது திருப்பியும், பின்புள்ள காலை சிறிது மற்றொரு புறமாகத் திருப்பியும், வலத்தொடையின் பாரம் வலக்காலின் பேரில் தாங்கியும் இடக்கை வலக்கைகளில் ஆயுதம் முதலிய முத்திரைகள் தாங்கியும் நிற்கும் நிலைக்கு வைசாகஸ்தானகம் என்று பெயர். விசககன் என்பது ஸ்கந்தரின் பெயர்.

[illegible]]

[illegible] ॥ ௨௩௫ ॥
[illegible]
[illegible]
॥ ௨௩௬ ॥

235 - 236. சந்திரசேகர மூர்த்தி விசேஷமாக 'ஸமபாத ஸ்தானகம்' அதாவது இரண்டு பாதங்களையும் ஒழுங்காகச் சேர்த்து நிமிர்ந்து நிற்கும் நிலையில் அமைக்கப்பட வேண்டும். இரு புஜங்களின் எல்லைவரையில் உள்ள நீளமும், அகலம் 18 அங்குலமும் உள்ளதாக (சூத்திரங்களை அமைப்பதற்கான லம்பபலகை) இருக்கவேண்டும். அதன் கனம் 2 அங். அல்லது $1\frac{1}{2}$ அங்குலம் இருக்கலாம். அதிலிருந்து சூத்திரங்களைத் தொங்கவிடவேண்டும். மத்ய சூத்திரத்திற்கான துவாரமும் நடுவே இருக்கவேண்டும்.

[illegible]
[illegible] ॥
॥ ௨௩௭ ॥

[illegible]
[illegible] ॥ ௨௩௮ ॥

237 - 238. பூர்வாபர ஸூத்ரங்கள் (எதிரிலும் பக்கங் களிலுமுள்ள சூத்திரங்கள்) பஸ்சாத் ஸூத்ரம் (பின் புறச் சூத்திரம்) இவைகளின் இடங்களை நிச்சயித்து அவைகளுக் கான த்வாரங்களை லம்பபலகையில்செய்து, அவற்றின் வழியே சூத்திரங்களைத் தொங்கவிடவேண்டும்.

பிம்பம் அமைக்கப்படவேண்டிய இடத்தில் நாற்புறங்களி லும் ஸ்தம்பங்கள் அமைத்து அதன்பேரில் சமமாக லம்பபல கையைப் பொருத்திவைக்கவேண்டும். அதிலிருந்து கணக்குப் படி தொங்கவிடப்பட்ட சூத்திரங்கள், அவற்றிலிருந்து இடை வெளி அளவுகள், இவற்றின் கணக்குப்படி பிம்பத்தை அமைக்க வேண்டும்.

पश्चात्पृष्ठे तु पार्श्वे तु कायमध्ये नसंयुतम् ।
सव्यासे पृष्ठसूत्रं तु कर्णान्तमुखपार्श्वयोः ॥
॥ २३९ ॥

नवसूत्रसमायुक्तं स्थानकासनकं तथा ।

239 - 240. பிம்பத்துக்கு எதிரிலும், பக்கங்களிலும், பின்புறத்திலும், காய மத்தியிலும் காதுகள், முகங்களின் பக்கங்களிலும் தொங்கவிடவேண்டிய 9 சூத்திரங்களையும் பின் வருமாறு தொங்கவிடவேண்டும்:—

ப்ரும்ம சூத்திரம் பிம்பத்துக்கு எதிரிலும், பஸ்சாத் சூத்திரம் பிம்பத்துக்குப் பின் புறத்திலும், பக்க சூத்திரங்கள் காதுகளுக்கு உட்புறத்திலும் வெளியிலும், முகத்திற்கு உட்புறத்திலும், வெளியிலும் இவ்வாறு நின்ற நிலையிலுள்ள மூர்த்திக்கான 9 சூத்திரங்களை அமைத்துக்கொள்ளல் வேண்டும். இவ்வாறே உட்கார்ந்த நிலையிலுள்ள மூர்த்திகளுக்கும் அமைத்துக்கொள்ளலாம்.

उष्णीषे च ललाटे च नासाग्रे हनुमध्यमे ॥ २४० ॥
हिक्काहृदये नाभौ योनौ जान्वन्तरे तथा ।
पादयोर्मध्यमे ब्रह्मसूत्रं प्रलम्बयेत् ।
॥ २४१ ॥

240 - 241. புர சூத்திரமாகிய ப்ரும்ம சூத்திரம் உஷ்ணீஷம், நெற்றி, மூக்கு நுனி, தாடையின் மத்தி இவைகளுக்கு எதிரிலும் ஹிக்கா (நெஞ்சுக் குழி) வின் எதிரிலும், ஹ்ருதயத்திற்கு (மார்புக் குழி) எதிரிலும், நாபிக்கு எதிரிலும், யோனிக்கு எதிரிலும், இரண்டு தொடைகளுக்கு இடையிலும், இரண்டு பாதங்களுக்கு மத்தியிலும் அமைந்து தொங்கும்.

ग्रीवाया मणिबन्धयोः स्यात् पार्श्वसूत्रद्वयं विदुः ॥
॥ २४२ ॥

242. கழுத்தின் ஓரங்களிலும், கணுக்கால்களின் மத்தியிலும் பார்ச்வ சூத்திரங்கள் தொங்கும்.

அத்ர ப்ரலம்பலக்ஷணம்]

காயமத்யமதைவைவ பஞ்சஸூத்ரம் ப்ரயாநகம் |
கர்ணபாஹ்யமத:ஸூத்ரம் ஸ்தநசூசுகமத்யகே || ௨௱௪௰௩ ||

பாதமத்யே ப்ரதேஶிந்யா மத்யமே பார்ஶ்வயோஸ்தத: |
கக்ஷாக்ரே கடிபார்ஶ்வே ச பார்ஶ்வயோர்ஜங்கமத்யமே || ௨௱௪௰௪ ||

243 - 244. காயமத்யத்தில் அதாவது உடம்பின் நடுவில் செல்லுவதாகக் கருதப்படும் சூத்திரம் (தலையின் உச்சி வழியாக)த் தொங்கும். இந்த ஐந்து சூத்திரங்களுக்கும் ப்ரதான சூத்திரங்கள் என்று பெயர். காதுகளின் வெளிப்புறத்தில் உள்ள இரண்டு சூத்திரங்களும், ஸ்தன சூசுகங்களின் மத்தியின் வழியாகவும், பாதங்களில் ஆள்காட்டி விரல்களின் மத்தியிலும் தொங்கும். மற்ற இரண்டு பார்ச்வ சூத்திரங்களும் கக்கங்களின் வழியாகவும் இடுப்பின் பக்கங்களின் வழியாகவும், கணுக்கால் வெளிப்புற முழிகளின் மத்தி வழியாகவும் தொங்கும்.

ஸூத்ரான்மத்யலலாடாந்தம் த்வ்யங்குலம் ஹநுமத்யமே |
ஸயவம் த்வ்யங்குலம் ஹிக்கா ஷண்மாத்ராங்குலா பவேத் ||
|| ௨௱௪௰௫ ||

உதரமத்யம் ஷட்யவம் நீவ்ரம் ஹ்ருதயம் நாபிமாத்ரகம் |
மாத்ரம் யோநிமூலம் ஸ்யாத் த்ரிமாத்ரமூருமத்யமம் ||
|| ௨௱௪௰௬ ||

ஜாநுமத்யம் ஷடம்ஶமத்யம் ஜங்காமத்யேऽஷ்டமாத்ரகம் |
நலகாமத்யமம் ஸார்தஷண்மாத்ரம் ஸூத்ரகேவலே ||
|| ௨௱௪௰௭ ||

245 - 247. இந்த சூத்திரங்களுக்கும் அங்கங்களுக்கும் உள்ள இடைவெளிகள் இனிச் சொல்லப்படுகின்றன. பூர்வ சூத்திரத்திலிருந்து நெற்றியின் மத்தி 2 அங்குல தூரத்தில் உள்ளது. தாடையின் மத்தி 2 அங். 1 யவை. ஹிக்கா (நெஞ்சுக் குழி) 6 அங். உதரமத்யம் 6 யவை. ஹ்ருதயம் 1 அங். நாபி 1 அங். யோனிமூலம் 2 அங். தொடைகளின்

மத்தி 3 அங். முழங்கால் முட்டுக்களின் மத்தி 6 அங். முன்னங்கால்களின் மத்தி 8 அங். நளகா என்னும் முன்னங்கால் கீழ்க்கோடிகளின் மத்தி 8½ அங். கால் நடுவிரல்களின் நுனிகளின் மத்தியத்தில் புர சூத்திரம் வந்துமுடியும்.

[illegible]
[illegible] ॥௨௱௪௰௮

[illegible]
[illegible] ॥௨௱௪௰௯॥

[illegible]
[illegible] ॥௨௱௫௰

[illegible]
[illegible] ॥௨௱௫௰௧

[illegible]
[illegible] ॥
॥ ௨௱௫௰௨ ॥

248 - 252, புரசூத்திரத்துக்குக்காய மத்திய சூத்திரம் 11 அங்குல தூரத்தில் இருக்கும். அந்த சூத்திரத்திலிருந்து தலையின் பின்புறம் 4½ அங்குலம். கழுத்துக்குக் கீழே உள்ள. ‘ககுத்’ அல்லது திமில் என்னும் மேடான பாகம் 5½ அங். மார்பின் மத்திக்கு நேராகப் பின்புறம் நேராக 6½ அங். வயிற்றின் நடுவுக்கு நேராகப் பின்புறம் 4½ அங். நாபிப் பிரதேசத்திற்கு நேராகப் பின்புறம் 5½ அங். இடுப்புக்குப் பின்புறம் 6½ அங். பிருஷ்டம் என்னும் பின்புறம் 1½ அங்குலம். தொடைகளின் மத்தி 4 அங். முழங்கால் முட்டுக்களுக்குப் பின்புறம் அதே 4 அங். முன்னங்கால்களுக்கு மத்தி 6 அங். நளகா என்றும் முன்னங்கால் கீழ்க்கோடி 2 அங். குதிகால் கீழ்க்கோடி 3½ அங்குலம்.

[illegible]
[illegible] ॥
॥ ௨௱௫௰௩ ॥

அங்கப்ரமாணலக்ஷணம்]

253. பார்ச்வ சூத்திரத்திலிருந்து முன்புறக் கைகளின் புஜம் வரையில் இடைவெளி 4 அங். வெளிபுறக் கைகளின் புஜம் 6 அங்குலம்.

ஸர்வஸூத்ராத் பூர்வபாஹ்வோர் அந்தரம் வேதஸம்மிதம் ।
ஸர்வஸூத்ராத் பாஹ்யபாஹ்வோர் மத்யம் ஷண்மாத்ரகம் ।
॥ ௨௱௫௰௪ ॥

254. பூர்வ புஜத்திற்கும் அபர புஜத்திற்கும் உள்ள இடைவெளி 2 அங். பூர்வ சூத்திரத்திலிருந்து மௌளியக்ரமத்யம் (தலைஉச்சி) 12 அங்.

பூர்வாபரபுஜயோர் மத்யம் த்வ்யங்குலம் ஸமாத்ருகம் ।
ஸர்வே பூர்வஸூத்ராத் மௌளிமத்யம் ரவிமாத்ரகம் ॥ ௨௱௫௰௫ ॥

255. கர்த்தரீ முத்திரைகளோடுகூடிய இரண்டு வெளிப் புறக் கைகளின் உச்சியும், ஹிக்கா (நெஞ்சுக் குழி) வுக்குச் சமமாக இருக்கவேண்டும். அபய ஹஸ்தத்தின் மேல் நுனி, ஸ்தன உயரத்துக்குச் சமமாக இருக்கவேண்டும். வரதஹஸ்தத்தின் உள்ளங் கையின் பின் புறம் தொப்புள் வரையில் இருக்கவேண்டும். அல்லது இடுப்பு வரையில் இருக்கலாம்.

கர்த்தரீமுத்ராஸம்யுக்தம் பாஹ்யஹஸ்தத்வயோச்ச்ரயம் ।
ஹிக்காஸமம் ததா ப்ரோக்தம் அபயஹஸ்தாக்ரம் ததா ॥ ௨௱௫௰௬ ॥

ஸ்தநாந்தம் வா கர்த்தவ்யம் ஸமோத்ஸேதம் ததைவ ச ।
ஸவ்யஸ்தநாந்தம் வா கடி ஸமஸ்தநாந்தம் ததா வா ॥ ௨௱௫௰௭ ॥

வரதஹஸ்ததலாக்ரம் நாபிமத்யம் ப்ரகீர்த்திதம் ।
ஜாநுத்வயம் தலாக்ரம் ஜங்கயோ: ஸமமாத்ரகம் ॥ ௨௱௫௰௮ ॥

நாபிகாந்தம் ஷடங்குலம் கக்ஷாந்தம் ஸமமாத்ரகம் ।
பாஹ்வந்தம் அந்தரங்குலம் த்ர்யங்குலம் ததா ஷடங்குலம் ॥ ௨௱௫௰௯ ॥

கக்ஷாந்தம் ஹஸ்தவிஸ்தாரம் கரம் ஸ்தநாந்தரேண வா ।
ஸர்வாங்குலிகம் ப்ரோக்தம் ஸர்வம் ஜ்ஞாயதாம் ஹஸ்தகம் ॥ ௨௱௬௰ ॥

256 - 260. வரத ஹஸ்தத்தின் நுனி மேட்ரத்தின் நுனிக்குச் சமமாகத் தொங்கவேணடும். அபய ஹஸ்தத்தில் உள்ளங்கை நடு, மத்திய சூத்திரத்திலிருந்து 15 அங்குல தூரத்தில் இருக்கவேண்டும். வெளிப்புறக் கைகள் பார்ச்வ சூத்திரத்திலிருந்து 12 அல்லது 10 அங்குல தூரத்தில் இருக்கவேண்டும். முழங்கை முட்டின் தூரம் மத்திய சூத்திரத்திலிருந்து 17 அங்குலம் அல்லது 18 அங்குல தூரமாகும். அடித்தொடையிரண்டுக்குமுள்ள இடைவெளி 1 அங். நடுத்தொடைகளின் இடைவெளி 2½ அங். முழங்கால் முட்டுக்களின் இடைவெளி 4 அங். முன்னங்கால்களின் இடைவெளி 5 அங். நளகைகளின் இடைவெளி 6 அங். கணுக்கால் முழிகளின் இடைவெளி 5 அங். குதிகால்களின் இடைவெளி 4 அங். புறங்கால்களின் இடைவெளி 6 அங். கட்டைவிரல்களின் இடைவெளி ½ அங். இவ்விதமாக ஸமபாத ஸ்தானகத்தில் நேராக நிமிர்ந்து நிற்கும் நிலையில் சந்திரசேகர மூர்த்தி அமைக்கப்பட வேண்டும்.

அபயம் தக்ஷிணே ஹஸ்தே வரதம் வாமஹஸ்தகே ।
ஸர்வாச்ரிதம் வா கர்தவ்யம் வரஹஸ்தாயபார்ச்வி ॥ ௨௱௫௰௯ ॥

பரசும் தக்ஷிணே ஹஸ்தே ஹரிணம் வாமஹஸ்தகே ।
பரசுர்த்வாயதம் ப்ரோக்தம் தத்ஸமம் ஹரிணம் ஸ்ம்ருதம் ॥ ௨௱௬௰ ॥

261 - 262. வலது கையில் அபய முத்திரையும், இடது கையில் வரத முத்திரையும் தாங்கி நிற்க வேண்டும். அல்லது இடது கையைத் தொடையில் வைத்தும் அமைக்கலாம். வெளிப் புறக்கையிரண்டிலும் வலக்கையில் மழுவும், இடக் கையில் மானும் இருக்க வேண்டும். மழுவின் உயரம் 12 அங். மானும் அதே உயரமாகும்.

ஜடாமகுடஸம்யுக்தம் வாமே சந்த்ரஸமன்விதம் ।
ஶுத்தவித்ருமஸங்காஶம் சிவம் ஸர்வாங்கஸுந்தரம் ।
ஸர்வாபரணஸம்யுக்தம் ஸர்வாலங்காரபூஷிதம் ॥ ௨௱௬௰௩ ॥

263. இடப்பக்கத்தில் அர்த்த சந்திரனேடு கூடிய ஜடா மகுடத்தோடும் (சடை முடி), சுத்தமான பவழ நிறத்தோடும்,

வ்ருஷவாஹநதேவஸ்ய லக்ஷணம்]

தேஜோமயமான உருவத்தோடும், மூன்று கண்களோடும், பூர்ண அலங்காரத்தோடும், ச்ருங்கார பாவம் நவழும் முகத்தோடும் மூர்த்தி அமைக்கப்படவேண்டும்.


விசாலவக்த்ரநேத்ரம் ச ச்ருங்காரரஸ ஸம்யுதம்
அபயவரதஹஸ்தம் ச அர்த்தசந்த்ரம் சிரோபரி ।

ஸ்தாநகம் ஸமபாதம் ச ப்ரவாளாபம் ஸுமத்யமம்
ம்ருகஹஸ்தம் பத்மபீடே சந்த்ரசேகரம் ॥ உாகூ௰௪ ॥

264. விசாலமான முகமும், கண்களும் ச்ருங்கார பாவத்தோடு கூடிய முகமும், அபய வரத ஹஸ்தங்களும், அர்த்த சந்திரனைத் தலையிலணிந்தும், நிமிர்ந்த தோற்றமும், ஸமபாத நிலையும், பவழ மேனியும், மான்மழுவேந்திய கைகளும், பத்ம பீடத்தின் பேரில் எழுந்தருளியும் சந்திரசேகரர் விளங்க வேண்டும்.

இதி ஸகலாதிகாரே அகஸ்த்யப்ரோக்தே சந்த்ரசேகரலக்ஷணம் நாம ஸப்தமோऽத்யாய: ॥

இவ்வாறாக அகஸ்தியர் அருளிச்செய்த ஸகளாதிகாரம் என்னும்
சிற்ப சாஸ்திரத்தில் சந்திரசேகர லக்ஷணம் என்னும்
ஏழாவது அத்தியாயம் முற்றுப்பெற்றது.



வ்ருஷவாஹநதேவஸ்ய லக்ஷணம்

வ்ருஷவாஹநதேவஸ்ய லக்ஷணம் வக்ஷ்யதேऽதுநா ।
ஸமபங்கம் ஸமாவேக்ஷ்யம் அதிபங்கமதாபி வா ॥ உாகூ௰௫ ॥

265. வ்ருஷவாஹன தேவரின் லக்ஷணம் இனிக் கூறப்படுகிறது. இவரை ஸமபங்க நிலையிலாவது, அதிபங்க நிலையிலாவது அமைக்கலாம்.

[illegible] [illegible] || ௨௱௬௰௫ ||

266. வலது கால் ஸ்வஸ்திகமாகவும் அதாவது இடது காலின் பேரில் குறுக்காகவும், இடது கால் சிறிது வளைந்தும், அல்லது இடது கால் வலது முழங்காலுக்குக் குறுக்காக வைக்கப்பட்டும் பிம்பத்தை அமைக்கலாம்.

[illegible] [illegible] || ௨௱௬௰௬ ||

[illegible] [illegible] || ௨௱௬௰௭ ||

267 - 268. ஸமபங்க நிலையில் புர சூத்திரமானது உஷ்ணீஷத்திலிருந்து நெற்றியின் இடது பக்கத்திலும், இடது கண்ணிலும், இடது நாஸா புடாந்தத்திலும் (மூக்கின் புடைப்பின் ஓரம்), ஸ்தன பீடத்தின் இடது பக்கத்திலும், நாபி மத்யத்திலும், ஊரு மத்தியிலும், குதி கால்களின் மத்தியிலும் சூத்திரமானது விழவேண்டும்.

[illegible] [illegible] || ௨௱௬௰௮ ||

[illegible] [illegible] || ௨௱௬௰௯ ||

269 - 270. அதிபங்கத்தில் முன்னங்காலைக் குறுக்காக அமைத்து மூர்த்தியை அமைக்கவேண்டும். முகம் முதலிய இடங்களில் ஸமபங்கத்துக்குச் சொன்னபடியும், நாபிக்கு இடப் பக்கத்திலும் இடது தொடையின் மத்தியிலும், வலது கணுக்காலிலும் சூத்திரம் விழவேண்டும். வளைவு 5 அங்குலம் உள்ளதாக இருக்க வேண்டும்.

[illegible] [illegible] || ௨௱௭௰ ||

வ்ருஷவாஹநமூர்த்திலக்ஷணம்]

தத்³யோர்விஷாணயோ: தஞ்சிதம் ஊர்த்⁴வஹ்ருதம் ।
நாபிஸூத்ரஸமம் வாபி யதா²ஶோப⁴ம் ததா²க³தம் ॥ ௨௱௭௰௨ ॥

271 - 272. கைகளை வைக்கும் முறை இனிச் சொல்லப் படுகிறது. இடது முழங்கை முட்டு விருஷபத்தின் தலை உச்சியில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்தக் கை ஹிக்கா சூத்திரத்திலிருந்து 18 அங்குல தூரத்தில் இருக்கவேண்டும். அந்தக் கை, ரிஷபத்தின் மேலுள்ள ஆசனத்தின் உயரம் வரையில் சாய்ந்திருக்கவேண்டும். நாபி சூத்திரத்துக்கு ஸமமாகவோ அல்லது, அழகை உத்தேசித்து சிறிது நகர்ந்தோ இருக்கலாம்.

ஸவ்யேதரோருஶ்ரிதம் வாபி பல்லவம் வாபி வா ।
த³க்ஷிணே வா ப்ரகோஷ்ட²ம் து நாபிஸூத்ராத் ததஸ்ததா² ॥ ௨௱௭௰௩ ॥

திவா ஷோட³ஶாங்குல்யம் ஸம்ப³ந்த⁴ம் வாக்ஷிப்ரகோஷ்ட²கம் ।
ஊருமூலம் தலஹஸ்தஸ்ய மேட்⁴ராக்³ரம் மத்⁴யமாங்கு³லி ॥ ௨௱௭௰௪ ॥

273 - 274. கை அடித்துடையில் வைக்கப்படலாம், அல்லது அழகை உத்தேசித்து பல்லவ முத்திரையோடும் இருக்கலாம். நாபி சூத்திரத்திலிருந்து வலது முன் கை 15 அல்லது 16 அங்குல தூரத்தில் இருக்கலாம். துடையில் வைக்கப்பட்டிருக்கும் உள்ளங் கையின் அடிப் பாகம் துடையோடு சேர்ந்திருக்கவேண்டும். அதன் நடு விரல் மேட்ரத்தின் நுனிக்குச் சமமாக இருகக வேண்டும்.

பரஹஸ்தத்³வயம் தத்³வத் க்ருஷ்ணாபரஶுதா⁴ரிணௌ ।
ஜடாமகுடஸம்யுக்தம் லம்ப³மாநநதம் ததா²வா ॥ ௨௱௭௰௫ ॥

275. புறக் கைகள் இரண்டும் மான், மழுவேந்தியிருத்தல் வேண்டும். ஜடா மகுடத்தோடு (சடைமுடி) அமைந்திருக்கவேண்டும். லம்பமானத்திற்குச் சிறிது சாய்ந்திருக்கலாம்.

விஹஸ்தம் வா ப்ரயுஞ்ஜீயாத் ஸவ்யாஹரணஸம்ஸ்தி²தம் ।
யதா²ஶோப⁴ம் ததா² கார்யம் வரஹஸ்தம் ததா²பி வா ॥ ௨௱௭௰௬ ॥

276. இரண்டே கைகளோடும் மூர்த்தியை அமைக்கலாம். மூர்த்தி எல்லா ஆபரணங்களோடும் விளங்கவேண்டும். பின் கைகளின் வளைவும், உயரமும் அழகாக இருக்கும்படி அமைக்கப்படவேண்டும்.

வாமபாகெ மஹாதெவீ ஸமபங்கஸமன்விதா ।
தக்ஷிணம் ஸ்வஸ்திகம் பாதம் வாமபாதம் து குஞ்சிதம் ॥ உ௭௭ ॥

ஸவ்யஹஸ்தம் கடகம் வாமம் தக்ஷிணம் து ப்ரலம்பிதம் ।
தெவஸ்ய பாஹுமாத்ரம் வா ஸ்தநாந்தம் கக்ஷஸீமகம் ॥
தெவீமானம் ப்ரயுஞ்ஜீயாத் அந்யத் பூர்வவதாசரெத் ॥ உ௭௮ ॥

277 - 278. இடப்புறத்தில் உமாதேவி ஸமபங்க நிலையில் இருக்கவேண்டும். தேவியின் வலக்கால் ஸ்வஸ்திகமாகவும் இடது பாதம் சிறிது வளைந்தும் இருத்தல்வேண்டும். வலக்கை தொங்கவிடப்பட்டும், இடக்கை புஷ்பமோ அல்லது கடக முத்திரையோ தாங்கியும் இருத்தல்வேண்டும். ஈசுவரனுடைய உயரத்தில் புஜம் வரையிலாவது, ஸ்தன உயரம் வரையிலாவது, கக்கங்களின் உயரம் வரையிலாவது தேவியின் உயரம் அமைக்கப்படவேண்டும். மற்ற அளவுகளை முன் சொல்லியபடி அமைக்க.

—: (o) :—

இத்யாகஸ்த்யெ ஸகலாதிகாரெ வ்ருஷவாஹநலக்ஷணம் நாம

அஷ்டமோऽத்யாய: ॥

இவ்வாறாக அகஸ்தியர் அருளிச்செய்த ஸகளாதிகாரம் என்னும் சிற்ப சாஸ்திரத்தில் வ்ருஷ வாஹன லக்ஷணம் என்னும் எட்டாவது அத்தியாயம் முற்றுப்பெற்றது.

अथ नवमोऽध्यायः

ताण्डवलक्षणं

अव्यक्तयुगमासाद्य नटनारम्भे शिवः ।
नन्द्यादिगणसंयुक्तो भूतकिन्नरयक्षकैः ॥ २७९ ॥

लोकपालाष्टसिद्धैश्च ऋषिभिश्च सपत्निभिः ।
स्कन्दविघ्नेशौ वाहनारूढसंयुतौ ॥ २८० ॥

279 - 280. சிருஷ்டியின் ஆரம்பத்தில் உள்ள அவ்யக்த யுகம் வந்ததும் பரமசிவன் நடனம் செய்ய ஆரம்பிக்கிறார். அவரோடு நந்தி முதலிய சிவகணங்கள் இருக்கிறார்கள். பூத கணங்களும், கின்னரர்களும் (தேவலோகப் பாடகர்கள்), யக்ஷர்களும், அஷ்டதிக் பாலர்களும், அஷ்டமா சித்தி பெற்ற சித்தர்களும், மஹரிஷிகளும் தங்கள் பத்தினிகளுடன் சூழ்ந்திருக்கிறார்கள். ஸ்கந்தரும், விக்னேசுவரரும், வாகனரூடராகப் பிரஸன்னமாயிருக்கிறார்கள்.

काली कात्यायिनी चैव सप्तमातृस्त्वतिवेषणैः ।
सर्वतन्त्रगणैर्युक्ते योगिनीसंयुता गिरे ॥ २८१ ॥

[illegible] ॥ २८२ ॥

[illegible] ॥ २८३ ॥

[illegible] ।

281 - 284. அப்போது காளியும், காத்யாயினியும் சப்த மாதாக்களும் அவர்களது கணங்களோடும், யோகினிகள்

அவர்கள் பந்துக்களோடும் மற்ற தேவர்களும் ஸ்துதிகோஷத்தோடு வந்திருக்கிறார்கள். பார்வதி பரமசிவனுக்குச் சிறிது பின்னால் லஜ்ஜையுடன் த்ரிபங்கமான அங்கத்துடன் நிற்கிறாள். அப்பொழுது இடது பக்கத்தில் பார்வதியும், வலது பக்கத்தில் நந்திகேச்வரருமாகக் காட்சி கொடுக்கிறார்கள். நந்திகேசுவரர் நான்கு புஜங்களோடும், மூன்று கண்களோடும் விளங்குகிறார். பரமசிவனுக்கு வலப் பக்கத்தில் இரண்டு கைகளால் வாத்யத்தை வாசித்துக்கொண்டும் மற்ற இரு கைகளிலும் அலபத்ம முத்திரை (மலர்ந்த தாமரைப் பூவைப்போல் விரிந்து கொண்டிருக்கும் விரல்களுடன் கூடிய முத்திரையோ) அல்லது அஞ்சலி பந்த முத்திரையோ தாங்கி நிற்கிறார். ச்யாமள வர்ணத்தோடிருக்கிறார்.

வடவ்ருக்ஷஸ்ய மூலே து ந்ருத்தம் க்ருத்வா வாஸ்லேப்ஷத: || ௨௱௮௰௪ ||
தக்ஷாஸே பவவைசேஷா த்ஷ்ட: கார்கோடகேன து |

284 - 285. வடவிருக்ஷத் (ஆலமரம்) தினடியில் பரமசிவன் நர்த்தனம் செய்யும்போது அவர் கார்க்கோடகனால் தீண்டப்பட்டார். அப்போது 'புஜங்கத்ராஸிதம்' (பாம்பைக் கண்டு பயப்படுதல் போன்ற நர்த்தனம்) என்ற நர்த்தனம் அவரால் ஆடப்பட்டது. அந்த நர்த்தன நிலைக்கான அளவுகள் பெரியோர்களால் சொல்லப்படுகிறது.

தந்மயயோக்தஸ்தைஷா யதாயுக்தம் ப்ரமாணதே || ௨௱௮௰௫ ||

உத்தமே தசதாலே ச ஸாந்தரே நவகாணகம் |
ஆதிக்யமானிதம் வாபி ஹீனமானிதம் ததா || ௨௱௮௰௬ ||

ந்ருத்தமூர்த்தி விசேஷேண ப்ரஸம்பவாத் ததஸாரத: |

285 - 287. நடேச்வரருக்கான உயரம் ஏற்கெனவே சொல்லப்பட்ட உத்தம, மத்யம தசதாள பேதங்களில் யுக்தமான உயரத்தை எடுத்துக்கொள்ளலாம். உத்தம தசதாளத்திற்கான அளவுகள் இங்கே கூறப்படுகின்றன. ஆனால்

நடேஶ்வரலக்ஷணம்]

நர்த்தன மூர்த்தியைத் தசதாளத்திலோ அல்லது த்வாதச தாளத்திலோ அமைக்கலாம். நர்த்தனத்திற்கான அங்கங்கள் எடுத்துக்கொள்ளப்பட்ட உயரத்துக்குத் தகுந்தபடி அமைக்கப்படவேண்டும்.

உஷ்ணீஷாத்ஸவ்யபார்ஶ்வே து ஸூத்ரம் ஸவ்யபுடாத³தே⁴ || ௨௮௭ ||

ஸவ்யாஸ்யவக்த்ரஸ்ய ஹிக்காயா மத்⁴யே நாபே⁴ஸ்து மத்⁴யகே |
வாமோரோர்மத்⁴யதேஶே து ஸவ்யபாத³ஸ்ய கு³ல்ப²கே || ௨௮௮ ||

ப்ரபா⁴மண்ட³லமத்⁴யே து லம்ப³யேத் ப்³ரஹ்மஸூத்ரகம் |
ஹ்ருத³யோத³ரயோ: ஸ்பர்ஶமுபரிஷ்டாத்ஸமந்தத: || ௨௮௯ ||

287 - 289. ப்ரும்ம சூத்திரமானது உஷ்ணீஷத்திலிருந்து நெற்றிக்கு வலது பக்கத்திலும், வலது நாஸா புடத்திலும், (மூக்கின் புடைப்பு), முகவாய்க் கட்டையின் வலது புறத்திலும், நெஞ்சுக் குழியின் மத்தியிலும், நாபியின் மத்தியிலும், இடது தொடையின் இடை வெளியிலும், ஊன்றிய வலது காலின் கணுக் காலிலும், ப்ரபாமண்டல (திருவாசி) மத்யத்திலும் தொங்கும். அது ஹ்ருதயத்தையும் வயிற்றுக்குமேல் பிரதேசத்தையும் தொட்டுக்கொண்டிருக்க வேண்டும்.

மத்⁴யமாங்கு³லிவ்ருத்தஸ்ய ஸூத்ராந்தம் நாஸிகாக்³ரகே |
ஸூத்ராந்தம் தோ³ஷ்பா³ஹ்வோ: ஶேஷபா³ஹுஷு மத்⁴யமம் || ௨௯௦ ||

தஸ்யாத்³வாமபார்ஶ்வம் அந்தராலம் ப்ரஸாரயேத் |
ஸூத்ராந்தம் ந்ருத்தயாத்ராயாம் ஸார்த⁴ (ஷட்கம்) பஞ்சாம்ஶம் மத்⁴யமம் || ௨௯௧ ||

பா³ஹுமூலாத³தோ⁴ மத்⁴யம் த³க்ஷிணே பா³ஹுமூலகம் |
லிங்கா³ந்தம் மத்⁴யமம் ஸவ்யஸூத்ரம் ப⁴வேத்³ நாஸாக்³ரகாத் || ௨௯௨ ||

பா³ஹ்வோ: ஶேஷாம்ஶமத்⁴யம் ச ஹஸ்தம் அங்கா³ந்திமாந்தகம் |
கர்ணேஸ்ஸீமாந்தபந்தாந்தம் ஸூத்ராந்தம் வை நாதா³யதம் || ௨௯௩ ||

290 - 293. நெற்றி, கணுக்கால் இவ்விரண்டிலிருந்தும் சூத்திரத்துக்கு ½ அங்குல இடைவெளி இருக்கும். அந்த சூத்திரத்திலிருந்து தொங்குகின்ற கையின் நுனி 16½ அங். அதிலிருந்து மற்றொரு கையின் முடிவு 4 அங். சூத்திரத்திலிருந்து அக்கினியை ஏந்தியிருக்கும் கையின் நுனி 40 அங்குலம், உயரம் தோளுக்கு ஸமம். மத்திய சூத்திரத்திலிருந்து இந்த புஜத்தின் அடிப் பக்கமும், வலது புஜத்தின் அடிப் பக்கமும் 20 அங். வலக்கையில் இருக்கும் உடுக்கையின் நீளம் 8 அங்., கையின் நுனி 40 அங். இந்தக் கை காதின் உயரத்துக்குச் சமமாக இருக்கவேண்டும்.

[illegible]
[illegible] ॥ ௨௱௯௰௪ ॥

[illegible]
[illegible] ॥ ௨௱௯௰௫ ॥

294 - 295. சூத்திரத்திலிருந்து அபயஹஸ்தத்தின் மத்தியம் 24 அங்குலம், அபயஹஸ்தத்திலிருந்து புஜத்தின் உயரம் 2½ அங்., இரண்டு அல்லது மூன்று அங்குலம் அதிகமும் இருக்கலாம். மத்திய சூத்திரத்திலிருந்து வலது கக்கத்தின் தூரம் 12 அங். உதர மத்யத் (வயிற்றின் மத்தி) தின் இடது, வலது பக்கங்கள் மத்ய சூத்திரத்திலிருந்து 9 அங்குலம்.

[illegible]
[illegible] ॥ ௨௱௯௰௬ ॥

[illegible]
[illegible] ॥ ௨௱௯௰௭ ॥

[illegible]
[illegible] ॥ ௨௱௯௰௮ ॥

[illegible]
[illegible] ॥ ௨௱௯௰௯ ॥

[illegible] |

[illegible] |
[illegible] | ௩௦௦ ||

296 - 300. வளைக்கப்பட்ட காலின் முழங்கால் முட்டு சூத்திரத்திலிருந்து 19 அங்., முழங்கால் முட்டின் முன் பக்கத்திற்கும் பின் புறத்திற்கும் உள்ள இடைவெளி ப் அங்., தேகத்திலிருந்து முன் பக்கத்தில் அதன் இடைவெளி 14 அங்., அதன் நளகையும் பார்ஷ்ணி (குதிகால்) யும் மத்திய சூத்திரத்திலிருந்து 30 அங். தூக்கப்பட்ட பாதம் ஊன்றிய காலின் முழங்காலிலிருந்து 31 அங். முழங்கால் முட்டும் அதே தூரம். அதன் உயரம் நாபியின் எல்லைக்குச் சமமாக இருக்கவேண்டும். 2½ அங்குலம் அதிகமும் இருக்கலாம். தொங்கவிட்ட கை நாபி சூத்திரத்திலிருந்து 12 அங்குல தூரத்தில் இருக்கும் அல்லது 11 அங்குலமும் இருக்கலாம். அதன் மணிக்கட்டு 10 அல்லது 9 அங்குலம் இருக்கலாம். அதற்கும் அபயஹஸ்தத்திற்கும் உள்ள தூரம் 9 அல்லது 8 அங்குலம். இங்கு சொல்லப்படாத மற்ற விஷயங்கள் அழகான அமைப்புக்கானபடி எடுத்துக்கொள்ளவும்.

[illegible] |
[illegible] || ௩௦௧ ||

301. ‘பட்டஹார பத்ரம்’ என்னும் கொடிவேலை செய்த பதக்கம் பாதத்திற்கு 18 அங்குல உயரத்தில் இருக்கவேண்டும். இரண்டு மூன்று அங்குலம் குறைவாகவும் இருக்கலாம். அகலம் அழகுக்கானபடி.

[illegible] |
[illegible] || ௩௦௨ ||

[illegible] |
[illegible] || ௩௦௩ ||

[illegible] ।
[illegible] ॥ ௩௱௪ ॥

[illegible] ।
[illegible] ॥ ௩௱௫ ॥

[illegible] ।
[illegible] ॥ ௩௱௬ ॥

[illegible] ।
[illegible] ॥ ௩௱௭ ॥

[illegible] ।

302 - 308. தலையின் ஜடாபாரம் இருபுறங்களிலும் விரிந்து நீண்டிருக்கவேண்டும். புன் சிரிப்பான முகத்தோடும், அங்கம் முழுவதும் விபூதியினால் அலங்கரிக்கப்பட்டும் சில இடங்களில் விபூதி பட்டும், சில இடங்களில் படாததுமாய் அழகாக அமைந்திருக்க வேண்டும். சர்ப்பமும், கங்கையும் செங்கழுநீர் புஷ்பமும், ஊமத்தைப் பூவும் தலையில் அலங்காரமாக அமைந்திருக்கவேண்டும். கபாலமும், ரத்னங்களும், இடது பக்கத்தில் இளம் பிறையும் அணிந்து சிரித்த முகத்தோடு இருக்க வேண்டும். நெற்றிக்கு மேல் ரத்தினத்தினால் பூரிமம் என்னும் கொடிப் பூவேலைப் பாட்டினால் அலங்கரிக்கப்படவேண்டும். மார்பு சிந்தூரத்தினால் அலங்காரம் செய்யப்பட்டும், ருத்ராக்ஷ மாலையும் தரித்திருக்க வேண்டும். புலித் தோல் ஆடையும், முன்னே தொங்குகிற அக்ரபந்தமும் (அரைக் கச்சையின் நுனிகளும்) காலில் கல்லிழைத்த பாதஸரமும், கையில் கங்கணமும், அரை ஞாணும், பத்ர வேலைப்பாடுகளோடு கூடிய கோள்வளையும், அணிந்தும் சர்ப்பகங்கணத்தோடு கூடிய வலது முன் கையோடும், மலர்ந்த முகத்தோடும் துடிக்கின்ற கண்களோடும், ரத்ன மோதிரங்களும், ரத்ன ஹாரங்களும், கழுத்தை ஒட்டின உபக்ரீவம் என்னும் அட்டிகை போன்ற ஆபரணங்களும், அணிந்திருக்க வேண்டும்.

வ்ருஷவாஹனதேவஸ்ய லக்ஷணம்]

தக்ஷிணே நாட்யபாதேன அபஸ்மாரோபரி ஸ்திதம் || ௩௱௮ |

பயானகமுகம் க்ருஷ்ணம் ரக்தகேசாக்ருதிம் பவேத் |
வாமஹஸ்தே பணீந்த்ரம் து தக்ஷிணே ஸர்பமுத்ரயா || ௩௱௯ ||

தேவாங்குலேன தத்தீர்கம் அஷ்டாதசாங்குலம் பவேத் |

ஏவம் ந்ருத்தம் சைவம் ஶேஷயுக்த்யம் விசக்ஷணை: || ௩௱௰ ||


308 - 310. அபஸ்மாரன் என்னும் முயலகன் மீது வலது காலை ஊன்றியிருக்க வேண்டும். அந்த அபஸ்மாரன் கறுப்பு வர்ணத்தோடும், சிவந்த கேசத்தோடும், பயந்த முகத்தோற்றத்தோடும், இடது கையில் சர்ப்பமும், வலது கையில் சர்ப்ப சீர்ஷ (பாம்புப் படம் போன்ற) முத்திரையும் உள்ளதாகவும் அமைக்கப்படவேண்டும் இந்த உருவத்தின் நீளம் தேவாங்குலத்தாலே 18 அங்குலம்.

இவ்விதமாக ந்ருத்த மூர்த்தியின் அமைப்பு சொல்லப்பட்டது. மற்றவை யுக்தப்படி அமைத்துக்கொள்ளலாம்.

—: (o) :—

இத்யகஸ்த்யப்ரோக்தே ஸகலாதிகாரே நடேஶ்வரலக்ஷணம் நாம
நவமோத்யாய: ||

இவ்வாறாக அகஸ்தியர் அருளிச்செய்த ஸகளாதிகாரம் என்னும்
சிற்ப சாஸ்திரத்தில் நடேசுவர லக்ஷணம் என்னும்
ஒன்பதாவது அத்தியாயம் முற்றுப்பெற்றது.



கங்காதரலக்ஷணம்

வக்ஷ்யே கங்காதரம் தேவம் லக்ஷணம் ச விசேஷத: ।
[1] ஸ்வஸ்திகம் தக்ஷிணம் பாதம் வாமபாதஞ்ச குஞ்சிதம் ॥
॥ ௩௱௰௧ ॥

உஷ்ணீஷாத் தக்ஷிணே பார்ச்வே லலாடஸ்ய ச தக்ஷிணே ।
க்ராணபார்ச்வே புடஸீமாந்தே ஹிக்காமத்யே ததைவ ச ॥ ௩௱௰௨ ॥

நாபிதேசே த்வயம் மாத்ரம் தக்ஷிணே மேட்ரமூலகே ।
அந்தரம் மாத்ரம் ஸவ்யேதரபார்ஷ்ணிமத்யே ததா ஸூத்ரம் லம்பயேத் ॥ ௩௱௰௩

கங்காதர லக்ஷணம்

311 - 313. இனி கங்காதரரின் லக்ஷணம் சொல்லப்படுகிறது. வலதுகால் குறுக்காகவும் இடதுபாதம் சற்று வளைந்தும் உள்ள நிலையில் இந்த மூர்த்தி அமைக்கப்படவேண்டும். உஷ்ணீஷத்தின் வலதுபக்கத்திலும், நெற்றியின் வலதுபக்கத்திலும், நாஸாபுடத்தின் வலதுபக்கத்திலும், ஹிக்கா என்னும் நெஞ்சுக்குழியின் மத்தியிலும், நாபிக்கு வலதுபக்கத்திலும், மேட்ரமூலத்தின் வலதுபக்கத்தில் 4 அங்குலம் தள்ளியும், குதிகால் மத்தியிலும் மத்ய சூத்திரம் தொங்கும்.

அங்குஷ்ட்யோரந்தரம் பார்ஷ்ண்யோரந்தரம் ஸமபங்கவத் ।
ஸ்வீக்ருதம் ஸர்வமஸ்யாஸ்து பாதாம்புஜ ததா ததம் ॥ ௩௱௰௪ ।

314. கால் கட்டைவிரல்களின் இடையேயுள்ள தூரமும், குதிகால்களின் இடைவெளியும் ஸமபங்கத்திற்குச் சொன்னது

1. 'வ' புஸ்தகத்தில் 'ஸ்திதந்து' என்றும், 'க' புஸ்தகத்தில் 'ஸ்வஸ்திகம்' என்றும் காணப்படுகிறது.

संसारमोक्षणं]

போல் இருக்கவேண்டும். சரீரத்தைச் சற்று சாய்த்துக் கொண்டு முகத்தைச் சற்று இடதுபக்கமாக வளைத்துக்கொண்டும் உள்ள நிலையில் இருக்கவேண்டும்.

वरदं दक्षिणं हस्तं देव्यालिङ्गं तु वामकं ।
वामं तु दक्षिणं हस्तं उष्णीषान्तं तथोच्छ्रितम् ॥ ௩௱௰௫ ॥

जटायां जाह्नवीं श्रीमान् सव्यं कर्तरी भवेत् ।
बाह्वन्ते वरदाग्रेण वक्त्रं देव्योच्छ्रितम् ॥ ௩௱௰௬ ॥

315 - 316. வலதுகையில் வரத முத்திரையும் இடது கையில் தேவியை ஆலிங்கனம் செய்துகொண்டும் இருக்க வேண்டும். மற்றொரு வலதுகை உஷ்ணீஷம்வரையில் தூக்கப் பட்டு ஜடையிலுள்ள கங்காதேவியின் பக்கமாக இருக்க வேண்டும். மற்றொரு இடதுகை கர்த்தரீ முத்திரையைத் தாங்கி யிருக்கவேண்டும். புஜத்தின் எல்லையில் வரதஹஸ்தத்தின் நுனியால் திருப்பப்பட்ட பார்வதியின் முகத்தைத் தாங்கிப் பிடித்திருக்கவேண்டும்.

देवस्य वामपार्श्वे तु देवी आवहितानना ।
समभङ्गस्थिता देवी दक्षिणं कुञ्चितं भवेत् ॥ ௩௱௰௭ ॥

317. ஈசுவரனுடைய இடதுபக்கத்தில் தேவியானவள் சிறிது மறைக்க முயலப்பட்ட முகத்தோடு அமைக்கப்பட வேண்டும். தேவி ஸமபங்கநிலையில் வலதுகால் சற்று வளைந்து அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

सव्ये पुष्पं वामहस्तं तु दक्षिणं लम्बितं तु वा ।
तिर्यक्प्रकोष्ठसंयुक्तं श्रोणिपार्श्वे तु हस्तकम्
॥ ௩௱௰௮ ॥

318. இடதுகையில் புஷ்பமும், வலதுகை தொங்கவிடப் பட்டோ அல்லது முன்கையைக் குறுக்காக வைத்துக் கைத் தலத்தை இடுப்பின் பக்கத்தில் வைத்தோ இருக்கலாம்.

ஸர்வாலங்காரஸம்யுக்தா மகுடாதிவிபூஷிதா ।
பகீரதஸ்து தக்ஷிணே ருஷிபி: பரிவேஷ்டிதம் ॥ ௩௱௧௯ ॥

319. ஸர்வாலங்கார பூஷிதையாய், மகுடம் முதலியவை வைத்துக்கொண்டு தேவி விளங்கவேண்டும். வலப்பக்கத்தில் பகீரதனும், ரிஷிகளால் சூழப்பட்டு பகவானை தோத்திரம் செய்பவனுக அமைக்கப்படவேண்டும்.

ஏவம் ஸம்க்ஷேபதோ தேவ: கங்காதர உதீரித: ।

இவ்விதமாகக் கங்காதர மூர்த்தியின் அமைப்பு சொல்லப் பட்டது.

அத த்ரிபுராந்தக லக்ஷணம் ।

த்ரிபங்கம் ஸமாயுக்தம் வைசாகஸ்தானஸம்யுதம் ॥ ௩௱௨௰ ॥
மத்யஸூத்ராத் த்ரிவேதாக்ஷ மாத்ராணி ப்ரதிதோ ப்ரமாத் ।

த்ரிபுராந்தக லக்ஷணம்

320 - 321. இனி த்ரிபுராந்தக லக்ஷணம் சொல்லப்படுகிறது. மூன்று வளைவுகளோடுகூடிய (த்ரிபங்க) உருவத்துடன், வைசாகஸ்தானகம் என்னும் நிலையில் இந்த மூர்த்தியை அமைக்கவேண்டும். வளைவுகள் (த்ரிபங்கங்கள்) மத்திய ஸூத்ரத்திலிருந்து மூன்று, நான்கு, ஐந்து அங்குலமிருக்கலாம்.

பாதாம் மாஷ்டமதோ ஹஸ்தை நாமதக்ஷம் ॥ ௩௱௨௰௧ ॥

த்ரிஜடாமகுடம் வா தன்மௌலிம் வாதாக்ருதம் ।
சூலம் வா த்ரிசூலம் வா ஸூத்ரம் வக்ஷஸ்யவாமனோர்த்வகம் ॥
॥ ௩௱௨௰௨ ॥

உஷ்ணீஷம் வாமஹஸ்தே த்ருதம் தேவஸ்ய தாம்ரகே ।
வாமநாஸாவாமபாதே ச மனோஹரம் வரத்ரோபிகே ॥ ௩௱௨௰௩ ॥

पादाङ्गुष्ठलक्षणं]

दक्षिणस्तनपार्श्वे तु नाभेर्दक्षिणपार्श्वके ।
पादान्तं पार्श्वजानुं च पादाङ्गुष्ठान्तं प्रलम्बयेत्
॥ ௩௱௨௰௪ ॥

321 - 324. மூன்றுவித த்ரிபங்கங்களிலும் கால் கட்டை விரல்களுக்கு இடையேயுள்ள தூரம் முறையே 16, 18, 20 அங்குலம் இருக்கவேண்டும். இந்த கட்டைவிரல்களுக்குள்ள இடைவெளிகளில் மூன்றில் ஒரு பாகம் குதிகால்களுக்கு இடையேயுள்ள தூரமாகும்.

இனி ஆபங்கம், ஸமபங்கம், அதிபங்கம் ஆகிய மூன்று நிலைகளுக்கும் அமைக்கவேண்டிய சூத்திரங்களின் வகை சொல்லப்படுகிறது.

ஆபங்க நிலைக்கு சூத்திர அமைப்பு

உஷ்ணீஷத்திலிருந்து கண்ணின் இடது பக்கத்தில் வெண்மையான பாகத்தின் வழியாகவும், இடது நாஸாபுட (மூக்கின்புடைப்பு)த்தின் வழியாகவும், இடதுதாடையின் வழியாகவும், வலது ஸ்தனத்தின் இடது பாகத்திலும், நாபியின் வலப்பக்கத்தின் வழியாகவும், இடது தொடையின் பக்கத்திலும், இடது குதிகால் ஓரத்திலும் ப்ரதானசூத்திரம் தொங்க வேண்டும்.

सूत्रं मस्तकमध्ये तु समस्तं विन्यसेत् ।
नासाग्रपार्ष्णिमध्ये तु सूत्रं प्रलम्बयेत् मध्यसूत्रकम्
॥ ௩௱௨௰௫ ॥

स्कन्धाग्रपार्श्वे तु हिक्कामध्यान्तमेव च ।
हृदयं सव्ये मध्यं नाभिमध्यमं ॥ ௩௱௨௰௬ ॥

दक्षिणे योनिमध्यं तु पार्ष्णिमध्यं ।
सव्यपार्ष्णिं जानुं समस्तके ॥ ௩௱௨௰௭ ॥

ஸமபங்கத்திற்கான சூத்திர அமைப்பு

325 - 327. மூக்கின் நுனியிலிருந்து குதிகால் மத்திவரையில் பூர்வசூத்திரம் தொங்கவேண்டும். அந்த சூத்திரத்திலிருந்து ஹிக்கா (நெஞ்சுக்குழி) இடதுபக்கத்தில் ஒரு அங்குல தூரத்தில் அமையும். ஹ்ருதயம் வலதுபக்கத்தில் ½ அங்குல தூரத்தில் இருக்கும். நாபிமத்யம் 2 அங்குல தூரத்தில் இருக்கும். மேட்ரமூலம் வலதுபக்கத்தில் 4 அங்குல தூரத்தில் இருக்கும். இடது முழங்கால் முட்டு 1½ அங்குல தூரத்தில் இருக்கும்.

[illegible] ।
[illegible][1] ॥ ३२५-६ ॥

[illegible] ।
[illegible] ॥ ३२७ ॥

அதிபங்கத்திற்கான சூத்திர அமைப்பு

328 - 329. இதற்கு ஆபங்க சூத்திரத்தைப்போலவே முகத்தில் சூத்திர ஸ்தானங்கள் அமையும். ஸ்தனம் வலது பக்கத்தில் 3 அங்குல தூரத்தில் அமையும். நாபிமத்யம் இடது பக்கத்தில் 2 அங்குல தூரத்தில் அமையும். இடது முழங்கால் முட்டின் ஓரம் இடது பக்கத்தில் 1 அங்குல தூரத்தில் அமையும். இரு குதிகால்களுக்கிடையில் வந்து முடியும். அங்கங்கள் சூத்திரத்தைத்தொடும் இடங்களும், விலகியிருக்கும் தூரங்களும் ஸமபாதஸ்தானகத்திற்கு (நிமிர்ந்து நிற்கும் நிலைக்கு)ச் சொன்னபடி இருக்கவேண்டும்.

[illegible] ।
[illegible]
॥ ३२९ ॥

---

1. இந்த இடத்தில் 'வ' என்ற சுவடியில் '[illegible]' என்று காணப்படுகிறது.

த்ரிபங்காங்கலக்ஷணம்]

330. பார்ச்வ ஸூத்திரங்களும் த்ரிபங்கங்களுக்குத் தகுந்த படி அமைத்துக்கொள்ளவேண்டும். இவ்விதமாக மூன்றுவித த்ரிபங்கங்களிலும் அதற்குரிய முறைகளிலேயே உருவங்களை அமைக்கவேண்டுமேயல்லாது ஒன்றோடொன்றைக் கலக்கக் கூடாது.

தக்ஷிணம் ஸ்வஸ்திகம் பாதம் வாமபாதம் து குஞ்சிதம் |
வாமதக்ஷிண ஸூத்ரே து லம்பனம் நாபிஸீமகம் || ௩௩௧ ||

331. த்ரிபுராந்தகமூர்த்தியின் வலதுகால் ஸ்வஸ்திகமாகவும் (குறுக்காகவும்) இடதுகால் சிறிது வளைந்தும் இருக்க வேண்டும். இடது வலது கைகளில் முறையே, வில்லும் அம்பும் இருக்கவேண்டும். அம்பு நாபியின் உயரத்திற்குச் சமமாக இருக்கவேண்டும்.

வாமே ஹஸ்தே கடகம் ஸவ்யே சாபம் விசேஷத: |
வாமம் து காமுகம் ஹஸ்தம் கர்ணஸீமோர்த்வ தாந்தரம் || ௩௩௨ ||

நதம் வா ஸ்தபூர்வம் வா அந்யம் மந்த்ர விசேஷத: |
கதிஸீமா ஸஹஸ்தௌ ச ஸ்ருஷ்டாபரம் யாமிநௌ || ௩௩௩ ||

332 - 333. உள்ளங்கையின் அடிப்பாகத்தில் அழகாகக் கங்கணம் (வீரசங்கிலி) தரித்திருக்க வேண்டும். வில் உடன் கூடிய இடதுகை காதின் உயரத்துக்குச் சமமாக உயர்ந்திருக்கவேண்டும். அதற்கு இரண்டு அங்குலம் தணிவாகவும், அதிகமாகவும் இருக்கலாம். வெளிப்புறக்கைகள் இரண்டும் கர்த்தரீ முத்திரையைத் தாங்கி அவைகளில் மான் மழுவேந்தியிருக்க வேண்டும்.

ஜடாமகுடஸம்யுக்தம் ஸர்வாபரணபூஷிதம் |
தேவதேவஸ்ய தேவீ ச ஸம்ஸ்தாப்ய ஸ்திதா ... || ௩௩௪ ||

ஸர்வலக்ஷணஸம்பூர்ணா ஸர்வாலங்காரபூஷிதா |
ஸம்ஸ்த்ரீயாயாமஸ்ய ஸம்மம் தேவாம்பிகாஸ்ததே || ௩௩௫ ||

புஷ்பதாமபரம் தேவம் மௌக்திகோஜ்வலபூஷிதம் |

334 - 336. சடைமுடியணிந்து சகல ஆபரணங்களணிந்து இடப்பக்கத்தில் த்ரிபங்க நிலையில் கையில் புஷ்பத்தோடும், ச்ருங்காரபாவத்தோடுகூடிய முகத்தோடும், எல்லா ஆபரணங்களோடும்கூடிய தேவியோடு அமைக்கப்படவேண்டும். த்ரிபங்கங்களில் எந்த நிலையிலும் உசிதம்போல் த்ரிபுராந்தகரை அமைக்கலாம். மூர்த்தி பவழமேனியும், ஸௌம்யமுகமும், ராஜஸ பாவமும் உடையவராக இருக்கவேண்டும்.

—(o)—

இத்யகஸ்த்யக்ருதே ஸகலாதிகாரே சில்பசாஸ்த்ரே கங்காதர த்ரிபுராந்தக லக்ஷணம் நாம தசமோऽத்யாய: ॥

இவ்வாறாக அகஸ்தியர் அருளிச்செய்த ஸகளாதிகாரம் என்னும் சிற்ப சாஸ்திரத்தில் கங்காதரர், த்ரிபுராந்தகர் என்ற இரு மூர்த்திகளின் லக்ஷணம் என்னும் பத்தாவது அத்தியாயம் முற்றுப்பெற்றது.

அத ஏகாதசோऽத்யாய:

கல்யாணஸுந்தர லக்ஷணம்

கல்யாணஸுந்தரம் வக்ஷ்யே ஸஸூத்ரம் ஸாந்தராயதம் ॥ ௩௩௬

கல்யாணசுந்தரர்

336. இனி, கல்யாணசுந்தரமூர்த்தியின் லக்ஷணத்தை அதற்குரிய சூத்திரம், சூத்திரத்திலிருந்து அங்கங்களின் இடைவெளிகள் இவைகளுடன் சொல்லுகிறேன்.

कक्ष्याणामर्धमुक्षणं]

ललाटवामदेशे तु वामनेत्रे घ्राणपुटे ।
हिक्कामध्ये तु हृदये नाभेर्दक्षिणपार्श्वके ॥३३७॥

वेदं वा त्र्यङ्गुलं नीत्वा गुल्फमध्ये प्रलम्बयेत् ।

337 - 338. மத்ய சூத்திரம் நெற்றியின் இடது பக்கத்திலும், இடது கண்ணிலும், இடது நாஸாபுடத்திலும், ஹிக்கை (நெஞ்சுக்குழி)யின் மத்தியிலும், ஹ்ருதயத்தின் வலது பாகத்திலும், நாபியின் வலப்பக்கத்தில் நான்கு அல்லது 3 அங்குலம் தள்ளியும், கணுக்காலின் மத்தியிலும் தொங்கும்.

गमनावेक्षितं पादं कुञ्चितं तु प्रदक्षिणम् ॥३३८॥

देवस्य दक्षिणं हस्तं देव्या हस्तेन संयुतम् ।
वामहस्तं तु वरदं परहस्तद्वयोरपि ॥३३९॥

कृष्णापरशुधारी स्याच्छृङ्गारवदनान्वितम् ।

338 - 340. கால்கள் நடக்கும் ஜாடையுடன், பிரதக்ஷிணமாக வளைந்து (வலதுகாலை சிறிது மடக்கி முன்னே வைத்து) இருக்கவேண்டும். ஈசுவரனுடைய வலதுகை தேவியினுடைய கையோடு சேர்ந்திருக்கவேண்டும். ஈசனின் இடதுகை வரத முத்திரையோடிருக்க வேண்டும். மற்ற இரு பின்புறக் கைகளிலும் மானும் மழுவும் ஏந்தியிருத்தல் வேண்டும். முகத்தில் ச்ருங்காரபாவம் இருக்கவேண்டும்.

सर्वाङ्गं तु जटामौलिं सर्वालङ्कारशोभिते ॥३४०॥

देहं प्रवालसंकाशं साक्षान्मङ्गल्यरूपवान् ।

340 - 341. சர்வாங்க சுந்தரராய், ஜடாமகுடத்துடன் (சடைமுடி) எல்லா ஆபரணங்களோடும் விளங்குபவராய், பவழ மேனியுடன் மங்களமே உருவெடுத்தாற்போன்ற தோற்றத்துடன் விளங்கவேண்டும்.

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

341 - 345. பார்வதி இடக்கரத்தில் புஷ்பத்தோடும், வலக்கரம் ஈச்வரனால் பற்றப்பட்டும் எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு நாணத்துடன் விளங்கவேண்டும். பார்வதியோடு சீதேவியும் பூதேவியும் சர்வாலங்காரங்களுடன் விளங்கவேண்டும். ஈசுவரனுக்கு முன்னால் அக்னியில் ஹோமம் செய்து வைக்கும் ப்ரும்மாவும் நான்கு கைகளோடு விளங்கவேண்டும். பக்கத்தில் மஹாவிஷ்ணுவும் த்ரிபங்க நிலையில் தங்கக் கலசத்துடனும் சங்கசக்ரம் ஏந்திய கைகளோடும், உதக தாராபூர்வமாக பார்வதி தேவியைத் தாரை வார்த்துக் கொடுக்கும் நிலையில் அமைக்கப்படவேண்டும். லோக பாலர்களாலும், தேவர்களாலும், சித்தர்களாலும் யக்ஷர்களாலும், பூதகணங்களாலும், கணநாயகர்களாலும், கின்னரர்களாலும், நாரதர் முதலானவர்களாலும், ஸப்த மாதாக்களாலும், ஸ்திரீகணங்களாலும் சூழப்பட்டு ச்ருங்கார முகவிலாசத்துடன் கல்யாண சுந்தரர் விளங்கவேண்டும். இந்த மூர்த்தி எல்லா பாபங்களையும் போக்கி மனதிற்குச் சாந்தியை உண்டாக்கும்.

[illegible]

இவ்வாறாக அகஸ்தியர் அருளிச்செய்த ஸகளாதிகாரம் என்னும் சிற்ப சாஸ்திரத்தில் கலியாண ஸுந்தர லக்ஷணம் என்னும் பதின்மூன்றாவது அத்தியாயம் முற்றுப்பெற்றது.

அயாச்நாரீஸ்வரலக்ஷணம்]

அய ஆஉபெபாஉஸ்யாயः

அயாச்நாரீஸ்வரலக்ஷணம்

அயாச்நாரீஸ்வரஞ்சைவம் அதஃபரஹாஷிபாஹகம் ।
ஷிஷியம்கஷுயெஷ்வம் ஸஸூத்ரம்தஸமஹம்ஶவெத் ॥ ௩௪௬ ॥

அர்த்தநாரீச்வர லக்ஷணம்

346. அர்த்தநாரீசுவரரை இரண்டு கைகளுடனே அல்லது நான்கு கைகளுடனே அமைக்கலாம். இந்த மூர்த்திக்கான சூத்திரம் ஸமபங்கத்திற்கான முறையில் தொங்கவிடப் படவேண்டும்.

ஸ்வஸ்திகம் உக்ஷிணம்வாஉம் வாஉவாஉந்த குஞ்சிதம் ।
வாஉாயஃம் வாவச்தீரவ்வம் உக்ஷிணாயஃந்த ஶாங்கரம் ॥ ௩௪௭ ॥

347. வலதுகால் ஸ்வஸ்திகமாகவும் இடதுபாதம் சிறிது வளைக்கப்பட்டும் இருக்கவேண்டும். இடதுபாதி பார்வதியின் உருவத்தோடும், வலதுபாதி சங்கரரின் உருவத்தோடும் இருக்கவேண்டும்.

அஹயம் வரஶம் வவெச்வரஹஸ்த அயம்ஹஸ்வெத் ।
வாஉவவ்வச்ம் வ்ருஷஸ்யைவ ஶிரஸிந்யஸ்தகவவச்ரம் ॥ ௩௪௮ ॥

அவரம் வஷ்யஸ்யக்தம் கடிகெநஸமந்விதம்[1] ।
விஹஜம் வாவ்யோக்தவ்யம் ஸவஷ்ஷ வாஉம் ஹவெத் ॥ ௩௪௯ ॥

348 - 349. வலது பக்கத்தில் முன்கையில் அபய முத்திரையும் பின்கையில் மழுவும் தாங்கியிருத்தல் வேண்டும். இடது பாகத்தின் முன்கை ரிஷபத்தின் தலைமேல் வைக்கப்பட்டும்

1. இந்த இடத்தில் 'க' என்ற சுவடியில், உவவ்யெக்ஷிதஸம்யதம் என்று காணப்படுகிறது. 'முகம் புஷ்பத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறது' என்பது இதன் பொருள்.

பின்கை கடக முத்திரையில் புஷ்பத்தைத் தரித்துமிருக்க வேண்டும். இந்த மூர்த்தியை இரண்டே கைகளோடும் அமைக்கலாம். அப்பொழுது இடதுகையில் புஷ்பமும் வலதுகையில் வரதமுத்திரையும் இருக்கவேண்டும்.

ஸ்த்ரீணாமாபரணம் வாமே தக்ஷிணம் சிவபூஷணம் |
ஸர்வாங்கம் வாமஹஸ்தம் து தக்ஷிணம் து த்ரிசூலகம் || ௩௱௪௯ ||

அதவோக்ஷசிரோந்யஸ்தம் கூர்பரம் வாமஹஸ்தகே |
அர்தநாரீச்வரஞ்சைவம் ஸர்வலக்ஷணஸம்யுதம் |
தக்ஷிணம் வரதம் ஹஸ்தம் பல்லவம் ச விசேஷத: || ௩௱௫௧ ||

350 - 351. இடதுபாதியில் ஸ்திரீகளுக்கான ஆபரணங்களையும் வலதுபாதியில் புருஷர்களுக்கான ஆபரணங்களையும் அணிவித்திருக்கவேண்டும்.

வேறு வகைகளிலும் இரண்டு கைகளோடுகூடிய அர்த்தநாரீசுவரரை அமைக்கலாம். இடதுகையில் புஷ்பமும், வலதுகையில் திரிசூலமும் இருக்கலாம் அல்லது இடது முன்னங்கை ரிஷபத்தின்மீது வைக்கப்பட்டும் வலக்கை வரத முத்திரையுடனோ அல்லது பல்லவ[1] முத்திரையுடனோ இருக்கலாம்.


இவ்விதமாக அர்த்தநாரீசுவரரை ஸர்வ லக்ஷணங்களுடன் அமைக்க வேண்டும்.

இத்யாகஸ்த்யே ஸகலாதிகாரே அர்தநாரீச்வரலக்ஷணம் நாம
த்வாதசோऽத்யாய: ||

இவ்வாறாக அகஸ்தியர் அருளிச்செய்த ஸகளாதிகாரம் என்னும்
சிற்ப சாஸ்திரத்தில் அர்த்தநாரீசுவர லக்ஷணம் என்னும்
பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றுப்பெற்றது.

---

1 பல்லவம் என்றால் துளிர் என்பது பொருள். பல்லவ முத்திரை நான்கு விரல்களையும் சேர்த்துச் சிறிது வளைத்துக் கட்டை விரலை ஆள்காட்டி விரல்மேல் வைத்துக் கை சிறிது தாழ்ந்திருக்கும் முத்திரை.



பாசுபதலக்ஷணம்

ஸக்ஷ்யே பாசுபதம் சைவம் அஸ்த்ரமேவாவதாரிதம் |
த்ரிணேத்ரம் சதுர்புஜம் ரௌத்ரம் ஊர்த்வகேசம் மஹாதநும்
|| 352 ||

352. இனி, பாசுபதாஸ்திரம் அளித்த[1] மூர்த்தியின் லக்ஷணம் சொல்லப்படுகிறது (பாசுபதம் என்பது சர்ப்ப உருவத்திலுள்ள பரமசிவனுடைய அம்பும் வில்லுமாகும்).

இவருடைய நிலையை சந்திரசேகரமூர்த்தியைப்போல் அமைக்கவேண்டும். நான்கு கைகளோடும் மூன்று கண்களோடும் ரௌத்ராகாரமான ரூபத்தோடும் மேல் நோக்கிய கேசத்தோடும், பெரிய சரீரத்தோடும் இருக்கவேண்டும்.

ஹஸ்தே து தக்ஷிணே சூலம் அக்ஷமாலாம் து வாமகே |
அபயம் தக்ஷிணம் சான்யம் வரதம் வாமகே ஸ்ம்ருதே |
ஏவம் பாசுபதம் ப்ரோக்தம் ஜ்யாலதம்[2] ச விதீயதே || 353 ||

353. வலதுகையில் சூலமும், இடதுகையில் ருத்ராக்ஷமாலையும் ஏந்தியிருத்தல் வேண்டும். மற்றொரு வலதுகை அபய முத்திரையோடும் இடதுகை வரத முத்திரையோடும் இருக்கவேண்டும்.

---

1. மூலத்தில் 'பாசுபத மூர்த்தி' என்று சொல்லப்பட்டிருப்பதை "பாசுபதாஸ்திரமே மூர்த்தி வடிவெடுத்தது" என்றோ, அல்லது "பாசுபத அஸ்திரம் அளித்த மூர்த்தி" என்றோ பொருள் கொள்ளலாம்.

இந்த நூலில் 7-வது சுலோகத்திற்கான பழைய உரையில் 'அர்ஜுனனுக்கு பாசுபதாஸ்திரம் கொடுத்த விக்ரஹமும்' என்று கண்டிருக்கிறது.

2. ஜ்யாலதம் - வில்லுக்கு 'ஜ்யாலதம்' என்று பெயர்.

இந்த முறையில் பாசுபதாஸ்திரமாகிய அம்பும் வில்லும் (அளித்த) மூர்த்தியின் லக்ஷணம் கூறப்பட்டது.

இதி பாசுபதலக்ஷணம் ||

அத கங்காளமூர்த்திலக்ஷணம்

[illegible] |
[illegible] || ௩௱௫௰௪ ||

[illegible][1] |
[illegible]
|| ௩௱௫௰௫ ||

351 - 355. பிக்ஷைகேட்கத் தகுதியான உருவத்தோடிருக்கும் கங்காள மூர்த்தியின் லக்ஷணம் கூறப்படுகிறது. முன்னால் அடி எடுத்து வைப்பதுபோன்ற ஜாடையுடன் தேகம் முழுவதும் விபூதி பூசப்பட்டு, மிகுந்த சோபையுடன் விளங்கும் ஹஸ்தபாதங்களுடன் பாதங்களில் பாதுகையுடன் மனோஹரமான ரூபத்துடனும் ச்ருங்கார பாவத்துடன் இந்த மூர்த்தி அமைக்கப்பட வேண்டும்.

[illegible] |
[illegible] || ௩௱௫௰௬

356. புன்சிரிப்போடு கூடிய இலேசாகத் தெரியும்படியான பல்வரிசையுடன்கூடிய வாயும், ஒரு காதில் குண்டலமும் மற்றொரு காதில் கர்ணபூரம் என்ற தோடும் அணியப்பட்டும் இருக்கவேண்டும்.

[illegible] |
[illegible] || ௩௱௫௰௭ ||

[illegible] |
[illegible] || ௩௱௫௰௮

1. '[illegible]' என்று 'க' என்ற சுவடியின் பாடம்.

[illegible]]

357 - 358. முன்கை இரண்டும் ஒன்று 'டக்கா' வாத்தியம் தாங்கி மற்றொரு கை அதை வாசிக்கும் முறையிலும் அமைந்திருக்க வேண்டும். மற்ற இரு கரங்களில் ஒன்றினால் மானின் வாயில் புல்லைக் கொடுத்துக் கொண்டும், மற்றொன்றினால் 'கங்காளம்' என்னும் எலும்புக்கூட்டைத் தாங்கியும் இருக்கவேண்டும். பூதகணங்களால் சூழப்பட்டிருக்க வேண்டும். முன்னே செல்லும் பூதம் ஒன்று பிக்ஷா பாத்திரத்தை ஏந்திச் செல்லும் முறையிலும், மற்ற பூதங்கள் ஈசுவரனுக்கு முன்னும் பின்னுமாகச் செல்லும் முறையிலும் அமைக்கப்படவேண்டும்.

[illegible] ।
[illegible] ।
[illegible] ॥
॥ [illegible] ॥

[illegible] ।

359 - 360. இந்த மூர்த்தியின் நிலையான 'ஆபங்க'த்திற்குரிய மத்திய சூத்திரம் நெற்றியின் இடது பக்கம், இடது கண், இடது நாஸாபுடம், இடது உதடு, இடது தாடை, நெஞ்சுக் குழியின் மத்தி, ஹ்ருதயமத்தி, நாபிக்கு வலதுபுறம் நான்கு அங்குல தூரம், கணுக்காலின் மத்தி இவைகளுக்கெதிரில் தொங்கவேண்டும். இதுவே உத்தமதசதாளத்தில் ஆபங்க நிலைக்கான சூத்திரம் அமைக்கும் முறை.

[illegible] ॥ [illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
॥ [illegible] ॥

[illegible] ।
[illegible] ॥
॥ [illegible] ॥

360 - 362. அவருக்கு முன்னால் தன்னை மறந்து ஆடையும் தலைமுடியும் நெகிழ்ந்து ப்ரளயம் என்னும் சீர்குலைந்த

நிலையில், அவரிடம் மோகத்தினல் ஏற்பட்ட மன்மத வேதனை யுடன் மிரண்ட பார்வையுடன் ஒரு பக்கம் நாணத்திற்குள்ளா கியும் ஒரு பக்கம் புன்முறுவல் தவழவும் அவருக்குப் பிக்ஷை யிடவந்த ஸ்திரீகணங்களால் சூழப்பட்டிருக்கவேண்டும். அவ ரோடு பலவித லீலைகளில் மனதைப் பறிகொடுத்தவர்களாக வும், ஸர்வாபரண பூஷிதர்களாகவும், அந்த ஸ்திரீகள் அமைக்கப்படவேண்டும். கங்காள ரூபலக்ஷணம் இவ்வாறு சொல்லப்பட்டது.

இத்யாகஸ்த்யே ஸகலாதிகாரே பாசுபதகங்காளமூர்த்தி லக்ஷணம் நாம த்ரயோதசோத்யாய: ||

இவ்வாருக அகஸ்தியர் அருளிச்செய்த ஸகளாதிகாரம் என்னும் சிற்ப சாஸ்திரத்தில் பாசுபத கங்காள மூர்த்தி லக்ஷணம் என்னும் பதின்மூன்ருவது அத்தியாயம் முற்றுப்பெற்றது.

(—:o:—)

அத சதுர்தசோத்யாய:

ஹரிஹரார்த்த லக்ஷணம் ||

ஹராயதம் ஸ்திதஞ்சைவம் ஸமபாதஸ்தானகம் பவேத் |

ஹரிஹரார்த்த லக்ஷணம்

363. இனி சங்கரநாராயணர் (ஹரிஹரார்த்தர்) மூர்த்தி யின் லக்ஷணம் சொல்லப்படுகிறது. நீண்டு நிமிர்ந்த தோற்றத் துடன் ஸமபாதஸ்தானகத்தில் இந்த மூர்த்தி இருக்க வேண்டும்.

தக்ஷிணம் சங்கரம் வாமம் ஹரிம் வாஸுதேவம் ததா |

வாமம் தக்ஷிணே பாகே ஹரம் கல்பயேத் ஸ்வயம் || நாராயணம் ||

பிக்ஷாடனலக்ஷணம்]

363. வலது கை அபய முத்திரையைத் தாங்கியும் இடது கை தொடையில் வைக்கப்பட்டும் இருக்கவேண்டும். மற்ற இரு கைகளுள் வலது கை மழுவும் இடது கை சங்கு அல்லது கத்தி தரித்திருக்க வேண்டும்.

ஜடாகிரீடயோரர்தே ஶ்ரீ
ப்ரவாலஶ்யாமவர்ணயோ: |
ஶாம்பவம் தக்ஷிணார்த்தே வாமார்த்தே
ஶௌரம் சாங்கவதர்த்தமீரிதா || ௩௬௪ ||

364. தலையின் ஒரு பாதியில் ஜடையும், மற்ருெரு பாதியில் கிரீடமும் ஒரு பாதி பவழ மேனியும் மற்ருெரு பாதி ச்யாமள வர்ணமும், ஒரு பாதி பரமசிவனின் அங்கங்களுக்கான அடையாளங்களோடும், மற்ருெரு பாதி மஹாவிஷ்ணுவின் அங்கங்களுக்கான அடையாளங்களோடும் கூடியவராய் விளங்கவேண்டும்.

இதி ஶ்ரீமதகஸ்த்யஸகலாதிகாரே கேஶவார்த்தமூர்த்திலக்ஷணம் நாம
சதுர்தஶோऽத்யாய: ||

இவ்வாருக அகஸ்தியர் அருளிச்செய்த ஸகளாதிகாரம் என்னும்
சிற்ப சாஸ்திரத்தில் கேசவார்த்த மூர்த்தி லக்ஷணம் என்னும்
பதிஞன்காவது அத்தியாயம் முற்றுப்பெற்றது.

(—:o:—)



பிக்ஷாடனலக்ஷணம்

பிக்ஷாடனஸ்ய லக்ஷணம் வக்ஷ்யே ஸமாஸத: |
ஜடாதக்ஷிணவாமே து நாகமாலாவ்ருதே || ௩௬௫ ||

𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌯𑌾𑌶𑍍𑌚 𑌹𑍃𑌦𑌯𑌮𑌧𑍍𑌯𑍇 𑌨𑌾𑌭𑍇𑌸𑍍𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 ।
𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑌾𑌦𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌚 𑌲𑌮𑍍𑌬𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ॥ ௩௱௬௰௪

𑌗𑌮𑌨𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌮𑍍 ।
𑌵𑌿𑌕𑍀𑌰𑍍𑌣𑌂 𑌵𑌾 𑌜𑌟𑌾𑌭𑌾𑌰𑌂 𑌨𑌗𑍍𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌨𑌤𑌾𑌨𑌤𑌮𑍍 ॥ ௩௱௬௰௭ ॥

பிக்ஷாடன லக்ஷணம்

365 - 367. பிக்ஷாடனர் லக்ஷணம் இனி முறைப்படி சொல்லப்படுகிறது. இந்த மூர்த்திக்குரிய மத்ய சூத்திரம் நெற்றியின் வலது புறத்திலும், மூக்கு நுனி உதடு இவற்றின் இடது பக்கத்திலும், ஹிக்கா (நெஞ்சுக்குழி) வின் இடது பக்கத்திலும், ஹ்ருதயத்தின் மத்தியிலும், நாபியின் வலப் புறத்திலும், ஊன்றிய காலின் கணுக்காலிலும் தொங்க வேண்டும். நடக்கும் பாவனையுடன், ஜடாமகுடத்துடன் அல்லது விரிந்த சடையுடன், வஸ்திரம் அணியாமலும் சிறிது சாய்ந்த முகத்துடன் இருக்கவேண்டும்.

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌹𑌸𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌮𑍃𑌗𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌵𑌾𑌮𑍇 𑌕𑌪𑌾𑌲𑌵𑌰𑌦𑌂 𑌤𑌤𑍍𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌬𑌰𑍍𑌹𑌿𑌪𑌿𑌞𑍍𑌛𑌕𑌮𑍍 ॥ ௩௱௬௰௮ ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑌰𑌹𑌸𑍍𑌤𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍 𑌡𑌮𑌰𑍁𑌕𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌪𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌨𑌾𑌗𑍇𑌨 𑌕𑌟𑌿𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑍍 ॥ ௩௱௬௰௯ ॥

𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌶𑍇𑌷𑌂 𑌕𑌙𑍍𑌕𑌾𑌲𑌵𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌨𑌤𑌜𑍍𑌞 [illegible] 𑌕𑍀𑌰𑍍𑌣𑌕𑍇𑌶𑍋 [illegible] ॥ ௩௱௭௰ ॥

368 - 370. முன் பக்கத்திலுள்ள வலக்கை மானுடன் விளையாடுவது போலவும், இடக்கை கபாலத்தோடுகூடிய வரத முத்திரையுடனும், அந்தக் கையின் பக்கத்தில் மயில்தோகையைத் தாங்கியும், பின்புற வலககையில் 'டமருக' (உடுக்கை போன்ற) வாத்தியமும், நழுவித் தொங்கும் மேலாடையுடனும், இடுப்பில் பாம்பினாலான அரைஞான் அணிந்தும், பூணூல் தரித்தும் இருக்கவேண்டும். மற்ற அம்சங்கள் கங்காள மூர்த்திக்குச் சொன்னபடி இருக்கவேண்டும். உடம்பின் வளைவு


चण्डेश्वरानुग्रहलक्षणम्]

ஸமபங்கத்திற்கான முறையில் இருக்கவேண்டும். விரிந்த சடையுடனும் இருக்கலாம்.

इत्यगस्त्यसकलाधिकारे भिक्षाटनलक्षणं नाम
पञ्चदशोऽध्यायः ॥

இவ்வாருக அகஸ்தியர் அருளிச்செய்த ஸகளாதிகாரம் என்னும்
சிற்ப சாஸ்திரத்தில் பிக்ஷாடன லக்ஷணம் என்னும்
பதினைந்தாவது அத்தியாயம் முற்றுப்பெற்றது.

—(o)—



चण्डेश्वरानुग्रहमूर्तिलक्षणम्

चण्डेश्वरप्रसादं तु सर्वावयवसंयुतम् ।
उमासहितवक्त्रं च किञ्चिदवनताननम् ॥ ௩௭௧ ॥

சண்டேச்வரானுக்ரஹ லக்ஷணம்

371. சண்டேச்வரனுக்கு அனுக்ரஹம் செய்த மூர்த்தி சுகாசனத்தில் அமர்ந்திருக்க வேண்டும். ஸோமாஸ்கந்தரைப் போல எல்லா அம்சங்களும் இருக்க வேண்டும். ஆனல் முகம் முன்புறம் சிறிது குனிந்திருக்க வேண்டும்.

दक्षिणं वरदं हस्तं न्यस्तं चण्डेश्वमूर्धनि ।
न्यस्तं [illegible] चण्डेशो [illegible] ॥ ௩௭௨ ॥

कृताञ्जलिपुटो [illegible] ।
चण्डेशः [illegible] ॥
॥ ௩௭௩ ॥

372 - 373, வலக்கரம் வரத முத்திரையுடன் சண்டேசுவரரின் தலைமீது அனுக்ரஹத்துடன் வைக்கப்பட்டிருக்க

வேண்டும். சண்டேச்வரர் பக்தியுடன் அஞ்சலி முத்திரை (கைகூப்பி)யுடன் ஈசுவரனுக்குச் சிறிது தாழ்ந்த ஆசனத்தில் ஸ்வர்ண (பொன்மேனி) வர்ணத்துடன் எல்லாவித அலங்காரங்களுடன் அமர்ந்திருக்க வேண்டும்.

தேவவாமே து பார்ச்வே து தேவீ ச்யாமா ஸமாஸநா |

இதி சண்டேசாநுக்ரஹலக்ஷணம்

𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑌣𑍍𑌡𑍁𑌲𑍈𑌰𑍇𑌵 𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌕𑍁𑌸𑍁𑌮𑌂
𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ॥௫௨௧॥

[illegible] 𑌸𑍂𑌤𑍍𑌰𑌨𑌾𑌮𑍍𑌬𑌰
𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑍈𑌃 ।
𑌗𑌨𑍍𑌧𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌪𑍂𑌜𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍀𑌂𑌸𑍍𑌤𑌤𑍍𑌰
𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ॥௫௨௨॥

𑌤𑌤𑍍𑌸𑍍𑌵𑌨𑌾𑌮𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌬𑌲𑌿𑌂 𑌦𑌤𑍍𑌵𑌾 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 ।
[illegible] 𑌵𑌿𑌮𑍁𑌚𑍍𑌯(𑌵𑍀𑌤)
𑌮𑌨𑌸𑌃 ॥௫௨௩॥

𑌨𑌵𑌾𑌮𑍍𑌬𑌰𑌂 𑌸𑌮𑌾𑌦𑌾𑌯 𑌕𑍃𑌤𑍍𑌵𑍈𑌵𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌕𑌮𑍍 ।
𑌗𑌨𑍍𑌧𑍋𑌦𑌕𑍈𑌰𑌭𑌿𑌷𑌿𑌚𑍍𑌯(𑌷𑍇𑌕𑌂) 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌗𑌨𑍍𑌧𑌾𑌦𑌿𑌭𑌿𑌃
𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ॥௫௨௪॥

[illegible] 𑌨𑍃𑌤𑍍𑌤𑌗𑍀𑌤𑌰𑌵𑍈𑌸𑍍𑌸𑌹 ।
𑌹𑍇𑌮𑌰𑍂𑌪𑍍𑌯𑌶𑌲𑌾𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌦𑍇𑌵𑌯𑍋𑌰𑍍𑌨𑍇𑌤𑍍𑌰𑌯𑍋𑌃 ॥௫௨௫॥

𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 [illegible] ।

(520-526) பிம்பத்துக்கு சமீபத்திலோ சற்று தூரத்திலோ அடியில் உபபீடம் அமைத்து அதன்பேரில் அரிசி

[illegible]]

யினால் பீடம் அமைத்து அல்லது உபபீடம் இல்லாமலே அரிசியினால் பீடம் அமைத்து அதில் கலச ஸ்தாபனம் செய்ய வேண்டும். கலசத்தை வெண்மையான நூல் கயிற்றால் அழகாகச்சுற்றி வஸ்திரம் கட்டி சந்தன புஷ்பாதிகளால் பூஜித்து அர்ச்சனை செய்து அந்தந்த தேவதைகளுக்குரிய மந்திரங்களை உச்சரித்து விதிப்படி பலிபோட்டு, பிறகு ஸ்நானம் செய்து பூதசுத்தி செய்துகொண்டு சந்தோஷமான மனதுடன் புதிய வஸ்திரம் தரித்து ஒரு தோளில் உத்தரீயம் (மேல் வேஷ்டி) தரித்து கும்பத்திலுள்ள தீர்த்தத்தினால் நர்த்தனகீத வாத்தியங்களுக்கிடையே பிம்பத்துக்கு அபிஷேகம்செய்து பொன்னால் செய்த ஊசிச்சலாகையினால் பிம்பத்திற்கான மூன்று கண்களையும் எழுதவேண்டும். புறகு கூரான ஆயுதத்தினால் மூன்று நேத்ர மண்டலங்களையும் உண்டாக்கவேண்டும்.

[illegible] ॥

[illegible] ।

[illegible] ॥

[illegible] ।

[illegible] ॥

[illegible] ।

[illegible] ॥

[illegible] ।

[illegible] ॥

𑌯𑌜𑌮𑌾𑌨𑌸𑍍𑌯(𑌸𑍍𑌵) 𑌹𑌸𑍍𑌤𑌸𑍍𑌯(𑌸𑍍𑌵) 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌤𑍁 𑌵𑌾𑌰𑌣
𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 ।
𑌉𑌭𑍌 𑌸𑌨𑍍𑌨𑌿𑌹𑌿𑌤𑍌 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌯𑌥𑌾𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌵𑌾𑌦𑌿𑌤𑍌 ॥

𑌅𑌕𑍍𑌷𑍍𑌯𑍋𑌃 𑌪𑍍𑌰𑌹𑍃𑌤𑌿𑌰𑍍𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌪𑍂𑌜𑌾𑌂 𑌗𑍃𑌹𑌾𑌣 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 ।
𑌨𑍇𑌤𑍍𑌰𑍋𑌨𑍍𑌮𑍇𑌷𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑌾𑌨𑌕𑍍𑌷𑍀 𑌨𑌾𑌯𑌕𑍍𑌯𑌂 𑌕𑍍𑌷𑌮𑌂 𑌪𑍍𑌰𑌭𑍋 ॥

𑌕𑌲𑍍𑌯𑌾𑌂 𑌪𑍂𑌜𑌯𑌿𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌤𑌃 𑌜𑌯𑌹𑌸𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌪𑍂𑌜𑍍𑌯𑌤𑍇 ।
𑌏𑌵𑌂 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑍍𑌯 𑌦𑍇𑌵𑍇𑌶𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑌸𑍍𑌯𑌤𑍍𑌯 𑌸𑌨𑍍𑌦𑍇𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌤𑍁 ॥

𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌭𑌿𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑍃𑌤𑌿𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑌯𑍋𑌧𑌾𑌰𑌾𑌦𑍍𑌯𑌂 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌕𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑍂𑌪𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌸𑌵𑌤𑍍𑌸𑌾𑌨𑌾𑌂 𑌸𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌰𑍂𑌪𑍍𑌯𑌾𑌣𑌿 𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌨𑍇 𑌦𑌦𑍇𑌤𑍍 ॥

𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌭𑍂𑌷𑌣𑌦𑌾𑌨𑌾𑌦𑌿𑌸𑌮𑍍𑌭𑌾𑌰𑍈𑌃 𑌸𑌨𑍍𑌤𑍋𑌷𑌿𑌤𑌾𑌃
𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌨𑌃
𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌦𑍌 𑌵𑌿𑌧𑌿𑌵𑌤𑍍 𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑍍𑌯 𑌨𑌯𑍇𑌨𑍍𑌨𑍀𑌰𑍍𑌘𑌿𑌤𑍇
𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌭𑌿𑌃 ।
𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌯𑍁𑌃 𑌸𑌹𑌶𑌿𑌷𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌿𑌧𑌿𑌤𑌃 𑌶𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑌾𑌦𑌿
𑌵𑌾𑌚𑌾𑌦𑍁𑌕𑌂
𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌚𑍈𑌵 𑌤𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍍𑌯𑌂 𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌵𑌾 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌂
𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ॥ ௫௰௫ ॥

𑌇𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑍇 𑌸𑌕𑌲𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑍇 𑌅𑌕𑍍𑌷𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌧𑌿𑌰𑍍𑌨𑌾𑌮
𑌤𑍍𑌰𑌯𑍋𑌵𑌿𑌂𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

॥ 𑌸𑌕𑌲𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌃 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 ॥

ரோக்ஷணம்]

(526-535) பிம்பம் வர்ணம் தீட்டப்பட்டிருந்தால் அதற்குக் கண் திறப்பதில் அதற்குத்தகுந்தபடி மாற்றி யெழுதவேண்டும். பொன்மயமான அல்லது பொன் வர்ண மான பிம்பத்துக்கு மசியினால் மட்டும் கண்ணை எழுதலாம். அக்ஷிமோசநத்துக்காக ஸ்தாபனம் செய்யப்பட்ட கும்பத் தின் தீர்த்தத்தினால் பிம்பத்தில் தேவதையை ஆவாஹநம் செய்து தேவதையின் மந்திரத்தை ஜபித்து தேவதையைப் பூஜை செய்யவேண்டும். ஆசாரியன் அனுமதியின்பேரில் வலது கண், இடது கண், நடுக்கண் இம்மூன்று கண்களையும் சந்திர பீஜமந்த்ரம், ஸூர்யபீஜ மந்திரம், அக்னி பீஜ மந்திரங்களை மனதால் ஸ்மரித்துக்கொண்டு கண் திறந்து தூபதீபாதி ஷோடசோபசாரங்களைக்காட்டி பிறகு தேனும் பாலும் நிவேதனம் செய்யவேண்டும். தானியக் குவியல் களையும், கன்றுடன் கூடிய பசுவையும் பிராமணர்களுக்குக் கொடுக்கவேண்டும். எல்லாத் திசைகளிலும் உள்ள யாவரும் க்ஷேமமாக இருக்கும்பொருட்டு ஸ்வஸ்திவாசனம் செய்விக்கவேண்டும். அப்படி ஸ்வஸ்திவசனம் செய்யும் ரித்விக்குகள் ப்ரதிஷ்டை செய்யப்படும் தேவதையை ஸ்தோத்திரம் செய்து இவ்வாறு ப்ரார்த்தனை செய்ய வேண்டும். "ப்ரபுவே! இந்த ப்ரதிஷ்டை செய்விக்கும் யஜமானன் நல்ல பக்தன். தங்கள் பாதமலரடியை அண்டியிருக்கிறான். தேவியுடன் தாங்கள் ப்ரஸந்நமாகி யஜமானனால் இன்றுமுதல் தன் சக்திக்கேற்றபடி செய்யப் படும் பூஜையை ஒப்புக்கொள்வீராக. உலகுக்கெல்லாம் நாயகனாகிய ப்ரபுவே, இவரால் செய்யப்படும் பூஜையி லுள்ள குற்றங்குறைகளைப் பொறுத்தருள வேண்டும். தேவரீரை முறைப்படி பூஜிக்கும் சக்தியுடையவர் யாவர்? ஆகையினாலேயே பூஜை செய்வோருடைய பக்தியினாலேயே பூஜை செய்யப்பட்டவராக தேவரீர் கருதுகிறீர்கள்." இவ்வாறு ப்ரார்த்தித்து நமஸ்கரித்து சில்பிகளைக்கொண்டு

பிம்பத்திற்கான ஸம்ஸ்காரங்களைச் செய்து பிறகு ஆசாரியன் தினந்தோறும் செய்யவேண்டிய பூஜை அதற்கான சரியை இவைகளைச்செய்யவேண்டும். கண் திறத்தலை உத்தேசித்து கன்றுடன்கூடிய பசுவையும் இதரத்ரவ்யங்களையும், வஸ்திரங்களையும், ஆபரணங்களையும், வேலை ஆட்களையும் சில்பிகளுக்குக் கொடுத்து அவர்களை சந்தோஷிப்பிக்கவேண்டும். இப்படிச்செய்து விதிப்படி கண் திறத்தலைச் செய்து ஆசாரியர் தனது சிஷ்யர்களுடன் பக்தியுடன் தேவதா ப்ரதிஷ்டையைச்செய்யவேண்டும்.

இவ்வாறுக அகஸ்தியர் அருளிச்செய்த ஸகளாதிகாரம் என்னும்
சில்பநூலில் அக்ஷிமோக்ஷணம் என்னும்
23வது அத்தியாயம் முற்றுப்பெற்றது

ஸகளாதிகாரம் முற்றிற்று.



|| श्रीः रामजयः ||

आयादिलक्षणम् ||

अथ वक्ष्ये विशेषेण आयादीनां तु लक्षणम् |
नृपकर्तृस्थापकानां सर्वसम्पत्करायकम् ||

அநுபந்தம்

ஆயாதி லக்ஷணம்.

1. ஆயாதி என்னும் லக்ஷணம் இனி கூறப்படுகிறது. இதன் நோக்கம் அரசனுக்கும் சிற்பங்களைச்செய்விப்பவருக்கும் செய்பவருக்கும் ஸம்பத்தை உண்டாக்குவதாகும்.

आयादिभिर्युतं यन्नाम तच्छ्रीकरं भवेत् |
अयुतं सर्वदोषं स्यात् तस्मादायादिसंयुतम् ||

2. ஆயாதி கணக்குப்படி உள்ள அளவுகள் எந்த சிற்பத்தில் அமைந்திருக்கின்றனவோ அது செல்வத்தை விருத்திசெய்யும். அப்படிப்பட்ட அளவுகள் இல்லாத சிற்பங்கள் பலவகை தோஷங்கள் உள்ளவை. ஆகையால் ஆயாதிக் கணக்குப்படியே சிற்பங்களை அமைக்கவேண்டும்.

आयं व्ययं च वारं च नक्षत्रं पांशमंशकम् |
पक्षं च योनिकं राशिगणं च दशधा मतम् || १ ||

3. ஆயாதி என்பது 1 ஆயம், 2 வ்யயம், 3 வாரம், 4 நட்சத்திரம், 5 பாம்சம், 6 அம்சம், 7 பட்சம், 8 யோனி 9 ராசி, 10 கணம் என பத்து வகைப்படும்.

𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌚 𑌵𑌾𑌸𑍍𑌤𑍂𑌨𑌾𑌂 𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌕𑌰𑌂 𑌤𑌥𑌾 |
𑌦𑍈𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌆𑌯𑍁𑌯𑌂 𑌚 𑌤𑌥𑌾 𑌵𑍍𑌯𑌯𑌃 ||

𑌲𑌿𑌙𑍍𑌗𑌬𑍇𑌰𑌾𑌦𑌿𑌕𑌂 𑌚𑍈𑌵 𑌯𑌾𑌨𑌾𑌦𑌿𑌶𑌯𑌨𑌾𑌸𑌨𑍇 |
𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌚𑌾𑌯𑌾𑌦𑍀𑌨𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌂 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ||௫||

(4–5) கிராமம் முதலியவைகளை அமைக்கும் விஷயத்திலும் கோயில்கள், வீடுகள் முதலியவைகளை அமைப்பதிலும் லிங்கம், பிம்பம் இவைகளை அமைப்பதிலும் வாகனங்கள், கட்டில், ஆஸனங்கள் முதலியவைகளைச் செய்வதிலும் செல்வத்தைக்கொடுக்கும் ஆயாதிக் கணக்குகள் இப்பொழுது சொல்லப்படுகின்றன.

𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌚 𑌵𑌾𑌸𑍍𑌤𑍂𑌨𑌾𑌂 𑌦𑌣𑍍𑌡𑌮𑌾𑌨𑍇𑌨 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 |
𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌸𑍍𑌯 𑌸𑌭𑌾𑌶𑌾𑌲𑌾 𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌂 𑌗𑍋𑌪𑍁𑌰𑌂 𑌗𑍃𑌹𑌮𑍍 ||

𑌮𑌾𑌲𑌿𑌕𑌾𑌮𑌣𑍍𑌡𑌪𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌪𑌾𑌰𑌙𑍍𑌗𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 |
𑌹𑌸𑍍𑌤𑌮𑌾𑌨𑍇𑌨 𑌸𑌂𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌆𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌃 ||

(6–7) கிராமம், நகரம் இவைகளை அமைப்பதற்கான அளவுகளைத் தண்டம் அதாவது 4 முழம் 8 முழம் கொண்ட அளவுகோலினாலேயே கணக்கிடவேண்டும். ப்ராஸாதம் அதாவது கோயில், அரண்மனை, சபை, சாலை (பல கட்டுக்கள் உள்ள கட்டடங்கள்), ப்ராகாரம் கோபுரம், வீடு, மாளிகை, மண்டபம், தண்ணீர்ப்பந்தல், நாடகசாலை முதலியவைகளுக்கு முழத்தைக்கொண்டு அளவுகளைக் கணக்கிட்டு ஆயாதிக்கணக்கில் சொல்லப்பட்டபடி நிச்சயிக்கவேண்டும்.

𑌯𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌶𑌯𑌨𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌿𑌕𑌂 𑌤𑌥𑌾 |
𑌵𑌿𑌤𑌸𑍍𑌤𑌿𑌨𑌾 𑌵𑌿𑌧𑌾𑌤𑌵𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌦𑍇𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌕𑍇𑌨 𑌵𑌾 ||௮||

முகூர்ணம்]

சஜ்ஜாஷ்டதஜகூநீஹ்ராம் தா ஹ்ராஷெமாஜ்ஜாமுஷிஷ்ஷ்தெ |

(8–9) தேர், பல்லக்கு முதலிய வாகனங்களுக்கும், உட்காருவதற்கும், படுப்பதற்கும் வேண்டிய சாதனங்களுக்கும் 'விதஸ்தி' என்னும் சாண், அல்லது ப்ராதேசம் என்னும் [1] ஓட்டை, அல்லது அங்குலம் ஆகிய அளவைகளை உபயோகப்படுத்தவேண்டும்.

மஹாகூலம்ஹம் மூஹலம்ஹம் சாமயொமவஸ் சாநகூ ||

சாநாஜ்ஜாமெந தஸ்காயகூாஸ் ஆயாதீநாம் விஶெஷத: |

(9–10) கர்ப்பகிருஹத்திலுள்ள தூண், வீடுகளில் உள்ள தூண், வாசற்படி நிலை இவற்றை [2] மானுங்குலத்திலுல் கணக்கிட்டு ஆயாதிகளைச் சோதித்தல் வேண்டும்.

ஶிஜ்ஜவொராஷிகம் வெவ வஷ்வகூாவிஷ்டரம் தயா ||ம||

சாநசா தாஜ்ஜாமுாஹ்ராம் வ ஷெஹமூபாஜ்ஜாமுாத்தா வா |

ஆயாஷ்ம்ஶெந வா காயகூாஸ் ஆயாதீநாம் ஹகமூநகூ ||

(10–11) லிங்கம், பிம்பம் முதலியவைகளுக்கும், பலிபீடம், பிம்பபீடம் முதலியவைகளுக்கும் மானுங்குலம், மாத்ராங்குலம், தேகலப்தாங்குலம் இவைகளை உபயோகித்து ஆயாதி சுத்திசெய்யலாம்.

ஆயாஷிஸம்வஷயகூம் வ வுஸிம் ஹாநிஶநிஷிதகூ |

---

1. கட்டை விரலையும் ஆள்காட்டி விரலையும் பிரித்து வைக்கும்போது ஏற்படும் இடைவெளிக்கு ப்ராதேசம் அல்லது ஓட்டை என்று பெயர்.

2. மானுங்குலம், மாத்ராங்குலம், தேகலப்தாங்குலம் இவற்றின் விவரம் முன் 12, 13 14 பக்கங்களில் 18, 19, 20வது சுலோகங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

தண்டஹஸ்தாங்குலம் தாலம் ப்ராதேசாங்குலகம் ததா ||

வ்ருத்திம் ஹானிம் ததா கார்யாத் ஸமைகைகம் மான
ஸம்பத்யா |

தன்மானம் ஶுபதம் ஜ்ஞேயம் ஸர்வகாமபலப்ரதம் ||௧௩||

(12-13) மேலே சொன்னபடி தண்டம், முழம், அங்குலம், தாலம் என்னும் சாண், ப்ராதேசம், அங்குலம் இவைகளால் அளக்கப்பட்ட எண்ணிக்கை நன்மையையோ கெடுதியையோ செய்யவல்லது. ஆயாதி விதிகளில் சுபம் என்று நிச்சயிக்கப்பட்ட அளவுகள் நாம் விரும்பும் நன்மையெல்லாம் தரும்.

க்ராமாதிவாஸ்துமானாநி விஸ்தாராயாமேண து |
ப்ராஸாதீநாம் ச யாநாநாம் தேவாதீநாம் விஶேஷத꞉ ||

காஷ்டாத(த?)ஸ்ய பாஹ்யம் வா ததாப்யந்தரம்
து வா |

ததைவ மாநஸீமா வா காஷ்டாநாம் சைவ பாகக꞉ ||

பித்த்யந்தரம் வா மத்யம் வா ததைவ ஶாலாதிக꞉ |
ப்ராகாரம் பித்திபாஹ்யே வா ததாப்யந்தரம் து வா ||

பித்திமத்யம் ந்ருபாணாம் து ஸ்தம்பமத்யோபி வா |
ஸ்தம்பமத்யஸம்ஸ்தம் பாஹ்யாப்யந்தரமேவ ச ||

தத்ஸம்ஸ்தயோர்மத்யே வேத்யா ஶம்ப்ரா ஸ்தம்பம் ததா |
ஸர்வேஷாம் ஸம்ஸ்தயே வா மானஸூத்ராவஸானகம் ||

யானானாம் ஶயனானாம் ச ஸிம்ஹாஸனாதிவிஷ்டரே |
வாப்யாதௌ பாதமத்யே வா பாதாப்யந்தரமேவ வா ||

ணலக்ஷணம்]

(14-19) கிராமம் நகரம் முதலியவைகளின் அளவு கணக்கிடும்போது சுவர்களுக்கு இடையே உள்ளதை எடுத்துக்கொள்ளவேண்டும். ப்ராஸாதத் (கோயில், அரண்மனை) தின் அளவு சுவற்றின் வெளிப்புறங்களுக்கு இடையேயுள்ள அளவையோ, சுவற்றின் மத்தியங்களுக்கு இடையேயுள்ள அளவையோ, சுவர்களுக்கு இடையேயுள்ள அளவையோ எடுத்துக்கொள்ளலாம். சாலைகளுக்கு (பல கட்டுக்கள் உள்ள வீடுகள்) எல்லைகளை நிச்சயிக்கும் அளவு சுவர்களின் இடைவெளியாகவோ, சுவர்களின் மத்தியங்களின் இடைவெளியாகவோ இருக்கலாம். அவ்விதமே கோபுரம் முதலியவைகளின் அளவுகள் சுவற்றின் வெளிப்புறங்களின் இடைவெளியாகவோ, சுவற்றின் மத்தியங்களின் இடைவெளியாகவோ அல்லது சுவர்களுக்குள்ள இடைவெளியாகவோ இருக்கலாம். அரசர்களுக்குரிய நிர்மாணங்களில் சுவற்றின் மத்தியங்களுக்கு உள்ள இடைவெளியையோ, சுவர்களுக்குள்ள இடைவெளியையோ எடுத்துக்கொள்ளவேண்டும். கட்டடங்களில் ஸ்தம்பங்களைக் கொண்டு நிர்ணயிக்கும் அளவுகள் ஸ்தம்பங்களின் வெளிப்புறங்களின் இடைவெளியாகவோ ஸ்தம்பங்களின் இடைவெளியாகவோ இருக்கலாம். (இது க்ஷத்திரியர்களுக்கு உரியது) வைசியர்கள் ஸ்தம்பமத்தியங்களின் இடைவெளியையே கொள்ளவேண்டும். சூத்திரர்களுக்கு ஸ்தம்பங்களுக்குள்ள இடைவெளியையே எடுத்துக்கொள்ளவேண்டும். அல்லது எல்லா வர்ணத்தாருக்கும் ஸ்தம்பங்களின் மத்தியங்களுக்குள்ள இடைவெளியையே எடுத்துக்கொள்ளவேண்டும். கட்டில், ஆசனம், சிம்மாசனம், பீடம் முதலியவைகளுக்கு அவற்றின் கால்களின் வெளிப்புறங்களுக்குள்ள இடைவெளியையோ, கால்களின் மத்தியங்களுக்கு உள்ள இடைவெளியையோ, கால்களுக்குள்ள இடைவெளியையோ எடுத்துக்கொள்ளலாம்.

உத்ஸேதேந விஸ்தாரேண தாரேண ஸம்க்ருஹ்யதே |

ஶ்ரீஜபேரே விஶேஷேண தஜ்ஜ்ஞைநைவ நிரீக்ஷயேத் ||

(20) தோரணம் (அலங்கார வாசல்) கல்பவிருக்ஷம் என்னும் அமைப்பு, லிங்கம், பிம்பம் இவற்றின் அளவு உயரத்தைக்கொண்டு கணக்கிடவேண்டும்.

விஸ்தாரஸ்யைவமாயாதீந் ஆயாமேநாபி வா ததா |
பரிணாஹவஶாத்வாபி ஹ்யாயாதீநாம் து காரயேத் ||

ப்ராஸாதாதிஷு ஸர்வேஷு காரயேத்விஸ்தரேண வா |
ஆயாமேநோத்ஸேதேநைவ வாபி வா ஸ்யாத்விஶேஷத: ||

ஆயாதிஸம்க்ரஹம் யோஜ்யம் ததைவ த்வாரகோபுரே |
ததைவ யாநஶயநம் ஸிம்ஹாஸநாதிவிஷ்டரே || ௨௩ ||

ஸர்வமேவ ப்ராகாரேண ஶய்யாதிஷ்வபி தாபிதம் |

(21–24) அகலத்தைமாத்திரம் வைத்துக்கொண்டும் அல்லது நீளத்தை மாத்திரம் வைத்துக்கொண்டும் அல்லது பள்ளமான இடங்களுக்கு சுற்றளவைக்கொண்டு கிராமம் முதலியவைகளுக்கு ஆயாதிக் கணக்குப் பார்க்கலாம். ப்ராஸாதம் முதலியவைகளுக்கு அகலத்திலேயாவது நீளத்திலேயாவது, உயரத்திலேயாவது சுற்றளவிலேயாவது ஆயாதிக்கணக்குப் பார்க்கலாம். இப்படியே வாயில், கோபுரம், ரதம் முதலிய வாகனங்கள், படுக்கைக்கான உபகரணங்கள், சிம்மாசனம் முதலிய உட்காரும் சாதனங்கள் இவைகளுக்கும் ஆயாதிக்கணக்குப் பார்க்கலாம்.

ஆயாதீநாம் விஶேஷேண ஸம்க்ஷிப்தமிஷ்யதே || ௨௪ ||

ஆயம் வ்யயம் யயோஶ்ஶேஷம் நாஹேநவாரதீக்ஷிதம் |

𑌲𑌕𑍍𑌷𑌣𑌂]

𑌤𑌾𑌰𑍇𑌣𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌸𑌂𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑌕𑌲𑌾𑌨𑌾𑌮𑌂𑌶𑌕𑌂 𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌃 ॥

𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇𑌣 𑌯𑍋𑌨𑌿𑌕𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌾𑌦𑍀𑌨𑌿 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌾𑌦𑍀𑌨𑌿 𑌵𑌾𑌸𑍍𑌤𑍂𑌨𑌾𑌂 𑌕𑌾𑌰𑌯𑍇𑌦𑍍𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑍇𑌨 𑌵𑌾 ॥

𑌶𑍍𑌰𑍀𑌜𑌾𑌤𑍇𑌨 𑌕𑌂(𑌚𑍈)𑌯𑍋𑌨𑌿𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌾𑌯𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌵𑍍𑌯𑌯𑌾𑌂𑌶𑌂 𑌤𑌾𑌰𑌕𑍇𑌣𑍈𑌵 𑌨𑌾𑌹𑍇𑌨 𑌵𑌾𑌰𑌰𑍍𑌕𑍍𑌷𑌤𑌿𑌥𑌿𑌃 ॥௨௭॥

𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌬𑌹𑌿𑌰𑌂𑌶𑌸𑍍𑌯 𑌅𑌨𑍍𑌤𑌰𑌾𑌂𑌶𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌮𑌹𑌾𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑍇 𑌗𑍃𑌹𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑍇 𑌚𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌤𑍁
𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌯𑍇𑌤𑍍 ॥ ௨௮ ॥

𑌛𑌤𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌕𑍇 𑌚𑍈𑌵𑌂 𑌉𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌕𑌾𑌰𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ।
𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌯𑌾𑌂 𑌯𑌷𑍍𑌟𑍍𑌰𑌹𑌾𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌪𑌾𑌤𑍍𑌰𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑍇𑌣 𑌸𑌂𑌜𑌯𑍇𑌤𑍍 ॥

𑌶𑌯𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌤𑌥𑍈𑌵𑌾𑌲𑍍𑌪𑌂 𑌦𑍇𑌹𑌪𑌾𑌤𑍍𑌰𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑍇𑌣 𑌵𑌾 ।
𑌏𑌵𑌂 𑌪𑌾𑌦𑌾𑌦𑌿𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌶𑌯𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑍁𑌪𑌰𑌿𑌕𑍍𑌷𑌯𑍇𑌤𑍍 ॥௩௰॥

(24–30) ஆயாதி முதலியவைகளுக்கு எல்லாவற்றிற்கும் ஒரேவிதமான அளவைக்கொண்டோ அல்லது ஆயம் வ்யயம் முதலானவை ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு வகை அளவைக்கொண்டோ கணக்குப் பார்க்கலாம். ஒரே வகை அளவைக்கொண்டு கணக்குப்பார்ப்பதற்கு 'ஸமம்' என்று பெயர். வெவ்வேறு அளவுகளைக்கொண்டு கணக்குப் பார்ப்பதற்கு 'மிச்ரகம்' என்று பெயர். ஆயம், வ்யயம் இவ்விரண்டையும் உயரத்தைக்கொண்டும், வாரத்தைச் சுற்றளவைக்கொண்டும் பிம்பங்களுக்கு அம்சம், திதி இவைகளை விட்டம் உயரம் இவைகளைக்கொண்டும், ப்ராஸாதம் முதலியவைகளின் யோனியை அகலத்தைக் கொண்டும் கணக்குப்பார்க்கலாம். ப்ராஸாதம் முதலியவை

களின் ஆயாதிகளை அகலத்தைக்கொண்டே நிச்சயிக்கலாம். லிங்கத்தின் உயரத்தைக்கொண்டு யோனி, தினம், ஆயம் இவைகளை நிச்சயிக்கலாம். வ்யயம், அம்சம் இரண்டையும் விட்டத்தைக்கொண்டும், வாரத்தைச் சுற்றளவைக் கொண்டும் நிச்சயிக்கலாம். பலிபீடம், பிம்பபீடம் இவைகளுக்கு அகலத்தைக்கொண்டு கணக்கிடலாம். கர்ப்ப கிருஹத்தின் தூண் வீட்டிலுள்ள தூண் இவைகளுக்கு உயரத்தைக்கொண்டு கணக்கிடலாம். அஸ்திரம் (அதாவது அம்பு முதலியவை), சஸ்திரம் (கத்தி முதலியவை) இவைகளுக்கு உயரத்தைக்கொண்டு கணக்கிட வேண்டும். ஆத்மார்த்தமாக வீட்டில்வைத்துப் பூஜை செய்யவேண்டிய பிம்பங்களுக்கு மாத்ராங்குலத்தினால் கணக்கிடவேண்டும். ஆயுதங்களுக்கு தேஹலப்தாங்குலம், மாத்ராங்குலம் இவ்விரண்டினாலும் கணக்கிடலாம். இவ்விதமாக ஆயாதி சுத்தி செய்யவேண்டும்

ஸுநக்ஷத்ரே ஸுமுஹூர்த்தே ச ஸுதினே ஶுக்லபக்ஷகே |
ஶுபலக்னே ஶில்பகர்த்தா ஜ்யோதிர்ஜ்ஞைஸ்ஸ்தாபகோ வா
ஸ்தபதிஸ்ஸஹ ||௩௧||

த்விஜைஶ்ச தத்ர ச பஹுஶாஸ்த்ரவித்பிஸ்ஸஹ |
விசக்ஷணைஸ்ஸம்யுக்த: ஆயாதீம்ஶ்சைவ காரயேத் ||௩௨||

நாநாப்ரகாரநாநாம் ஶாஸ்த்ராணாம் தத்ப்ரகீர்த்திதம் |

(31-33) சுக்லபக்ஷத்தில் நல்லநாள் நக்ஷத்திரம். பார்த்து நல்ல முகூர்த்தத்தில் நல்ல லக்னத்தில் சில்பத்தை செய்விக்கும் கர்த்தா ஜ்யோதிஷர்களை வரவழைத்து ஸ்தாபகர், ஸ்தபதி இவர்களுடன், பல சாஸ்திரங்களைக் கற்றறிந்த வித்வான்களையும் சேர்த்துக்கொண்டு சுத்தமான

முக்ஷணம்]

ப்ரதேசத்தில் ஸ்நாநாதிகளால் தங்களை சுத்தி செய்து கொண்டு கிழக்கு முகமாகவோ வடக்கு முகமாகவோ உட்கார்ந்து ஆயாதிக்கணக்குப்போட்டு ஆயர்தி சுத்தி செய்ய வேண்டும். அவ்விதம் ஆயாதிகளைக் கணக்குப்பார்ப்பதில் பல வகையுண்டு. அவை இனிச் சொல்லப்படுகின்றன.

அஷ்டஷட்த்ரிகு⁻ணம் ஹ்ருத்வா ஸூர்யார்க்கதி³க்³பி⁴ஸ்ததஸ்
ததா || ௩௩ ||

ஶேஷமாயம் த்ரிதா ப்ரோக்தம் க்ரமேண வ்யயமாதி³வே |
பங்க்திநந்தா³ஷ்டகு⁴ணிதே ஸப்தர்துதி³க்³பி⁴ர்ஹ்ருதே ||௩௪||

வ்யயே ஸாஷ்டாஷ்டர்த்தாஶே ஹ்ருதே வாரம் த்ரிதா⁴பி⁴: |
ருத்வஷ்டதி³க்³கு³ணே ஸப்தவிம்ஶத்யா ஹ்ருதே தி⁴ஷ்ண்யே ||௩௫||

யாதர்த்து²ஷட்கு³ணிதே நவஹ்ருதே நவாம்ஶகே |
வ்யயம் நவாஷ்டகு³ணிதே த்ரிதா⁴ த்ரிம்ஶதாஹ்ருதே ||

வர்ஜ்யோ கு³ணாஷ்டதஶாஷ்டாபி⁴: யோநிஷ்ட்²யஷ்டாதி³பி⁴: |

(33–37) அளவைக்குறிக்கும் எண்ணை 8, 6 அல்லது 3 ஆல் பெருக்கி முறையே 12, 11, 10 ஆல் வகுக்க வரும் மிச்சமே ஆயம். இப்படி மூன்று வகையாக ஆயத்தைக் கண்டு பிடிக்கலாம். 10, 9, 8 ஆல் பெருக்கி முறையே 7, 6, 10 ஆல் வகுக்க வரும் மிச்சம் வ்யயம். இப்படி மூன்று வகையாக வ்யயத்தைக் கண்டுபிடிக்கலாம். 9, 8, 6 ஆல் பெருக்கி 7 ஆல் வகுக்க வரும் மிச்சம் ஞாயிறு முதல் வாரமாகும். இப்படி 3 வகையாக வாரம் கிடைக்கும். 6, 8, 10 ஆல் பெருக்கி 27 ஆல் வகுக்க மூன்று வகையாக தினம் என்னும் நக்ஷத்திரம் கிடைக்கும். 7, 6, 5 ஆல் பெருக்கி 9- ஆல் வகுக்க மூன்று வகையில் நவாம்சம்

கிடைக்கும். 9, 8 ஆல் பெருக்கி 30 ஆல் வகுக்க இரண்டு வகையாக திதி கிடைக்கும். 3 ஆல் பெருக்கி 8 ஆல் வகுக்க த்வஜமாதியாக யோநி கிடைக்கும்.

𑌅𑌯𑌵𑌾𑌰𑌰𑍍𑌕𑍍𑌷𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑍇𑌣 𑌆𑌯𑌾𑌦𑌿𑌵𑌿𑌧𑌿𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௩௭ ॥

𑌵𑌸𑍁𑌨𑌨𑍍𑌦𑌰𑍍𑌤𑍁𑌸𑌙𑍍𑌗𑍁𑌣𑌂 𑌹𑌰𑍇𑌤𑍍 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌭𑌿𑌰𑍍𑌹𑌰𑍇𑌤𑍍 ।
𑌆𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌸𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌭𑌵𑍇𑌤𑍍𑌤𑌚𑍍𑌚 𑌤𑍍𑌰𑌯𑍋 𑌵𑌿𑌧𑌾𑌃 ॥

𑌨𑌵𑌾𑌷𑍍𑌟𑌵𑍇𑌦𑌸𑌙𑍍𑌗𑍁𑌣𑌂 𑌤𑍁 𑌦𑌶𑌭𑌿𑌰𑍍𑌹𑌾𑌰𑌯𑍇𑌦𑍍𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ।
𑌨𑌵𑌾𑌷𑍍𑌟𑌰𑍍𑌤𑍁𑌗𑍁𑌣𑌂 𑌸𑌪𑍍𑌤𑌹𑌾𑌰𑌾𑌦𑍍𑌵𑌾𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌅𑌷𑍍𑌟𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌕𑌸𑌙𑍍𑌗𑍁𑌣𑌂 𑌹𑍃𑌤𑍇 𑌭𑍈𑌰𑍃𑌕𑍍𑌷𑌦𑌿𑌨𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌵𑍇𑌦𑌨𑌨𑍍𑌦𑌾𑌗𑍍𑌨𑌿𑌸𑌙𑍍𑌗𑍁𑌣𑌂 𑌚 𑌨𑌵𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌾𑌷𑍍𑌟𑌭𑌿𑌰𑍍𑌹𑌰𑍇𑌤𑍍 ॥

𑌨𑌵𑌾𑌂𑌶𑌂 𑌚 𑌤𑌿𑌥𑌿𑌂 𑌚𑍈𑌵 𑌯𑍋𑌨𑌿𑌞𑍍𑌚 𑌤𑍍𑌰𑌯𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ।

(37–41) அல்லது வேறு வகையாகவும் ஆயாதிகளை நிச்சயிக்கலாம். 8, 9, 6 ஆல் பெருக்கி 12 ஆல் வகுக்க வரும் மிச்சம் மூன்று வகையாகக் கிடைக்கும் ஆயமாகும். 9, 8, 4 ஆல் பெருக்கி 10 ஆல் வகுக்கக் கிடைக்கும் மிச்சம் வ்யயம் மூன்று வகை. 9, 8, 6 ஆல் பெருக்கி 7 ஆல் வகுக்க வரும் மிச்சம் மூன்று வகையாகக் கிடைக்கும் வாரமாகும். 8, 10, 12 ஆல் பெருக்கி 27 ஆல் வகுக்க மூன்று வகையாகக் கிடைக்கும் மிச்சம் தினம் அல்லது நக்ஷத்திரமாகும். 4 ஆல் பெருக்கி 9 ஆல் வகுக்கக் கிடைக்கும் மிச்சம் நவாம்சமாகும். 9 ஆல் பெருக்கி 30 ஆல் வகுக்கக்கிடைக்கும் மிச்சம் திதியாகும். 3 ஆல் பெருக்கி 8 ஆல் வகுக்க கிடைக்கும் மிச்சம் யோநியாகும்.

𑌅𑌯𑌵𑌾𑌰𑌰𑍍𑌕𑍍𑌷𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑍇𑌣 𑌆𑌯𑌾𑌦𑌿𑌵𑌿𑌧𑌿𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௪௧ ॥

ലക്ഷണം]

നവനാഡ്യാദിവൈവര്‍ത്തലം ഗൂഢാ നക്ഷത്രഭോഗരേഖ് |
ശേഷകായം ക്രിയാ വ്യാപ്തം വേദനാഡ്യാദിവൈദേശഃ ||

പയിച്ചൈതല്‍ വ്യയം ഹന്യാത് പഞ്ചഷഷ്ഠസ
ഹസ്തൈഃ |
ക്രൂയാധികം വ്യയം ക്ഷീണം ത്രൈനം ശാന്തോ ഭഗ്നത് ||

പയിച്ചത്വഷ്ടവൈന്യഗൃഹീതേസ്തേന
പാദകൽ |
ചന്ദ്രാദിശാന്തം യോഗം ദിനവാരയുതം ശാന്ത് ||൪൪||

ദശഹാംശഷ്ടിവത്സരം ക്ഷയേദൃക്ഷേണ തജ്ജനൽ |
ഹാനംവൃദ്ധിം വിനാ വാരയ ഗൂഢൈര്യവൃത്താ ഭാനി
പഞ്ചഭിഃ ||൪൫||

ക്ഷവയേദൃക്ഷസംഖ്യാഭിഃ ശിക്ഷം സ്യാത് ത്രിഷു
പഞ്ചയാ |
ശിഷ്ടമസ്മാദിദം വിദ്യാത് ഗണയേദ്ബുധകോവിദഃ ||

പ്രവക്തുസ്തു പാദസ്ഥാനാം ജന്മനാമക്ഷതാരഭേത് |
തന്നജാതനക്ഷത്രാവസാനം ഗണ്യതേ ബുധൈഃ ||

ജന്മനാമയോഃ ശ്രേഷ്ഠം ജന്മഭം മധ്യമം ഭവേത് |
അധമം നാമ നക്ഷത്രം യോജയേത് ത്രിവിധം ഭവേത് ||

ജന്മസംപദ്വിപത് ക്ഷേമം പ്രത്യരഃ സാധകോ വധഃ |
മൈത്രം പരമമൈത്രം ച ജന്മാദീനാം പുനഃ പുനഃ ||

പ്രത്യരാധമവാദാ വര്‍ജ്യായശ്ചേന ഗണ്യതേ |
ത്രിദിനം പഞ്ച സപ്താഹം ത്രയോദശ ദിനം തഥാ ||൫൰||

ஸப்ததஶம் சாஷ்டாதஶம் த்ரிஜைஶ்சாவிம்ஶகம் ஹிதம் ।
ஸப்தவிம்ஶந்நக்ஷத்ரம் த்யாஜ்யேந்யூநம் ஸ்ம்ருதம் ॥௫௧॥

ஜந்மத: பூர்வ நக்ஷத்ராத் ஸப்தவிம்ஶதிகம் பவேத் ।
ஜந்மாச்சாவிம்ஶ நக்ஷத்ரம் வைநாஶிகமிதி ஸ்ம்ருதம் ॥

ஷஷ்டாதஶமிதம் யத்ர ஸம்க்ராம்ஶகவிவர்ஜிதம் ।
ஷண்ணாம்ஶம் ஶேஷகம் வ்யாதம் ஏவம் த்ருகுணயேத்வய: ।
ஷஷ்டாயிகாம்ஶீ த்ரிம்ஶத்ப்ரவர்ஜயேத்ஸர்வதா ॥௫௩॥

(41–53) இன்னொரு வகையிலும் ஆயாதிகளை நிச்சயிக்கலாம். 9 8, 6ஆல் பெருக்கி 11, 12, 10ல் வகுக்கக் கிடைக்கும் 3 வகை ஆயமாகும். 4, 8, 6 10ஆல் பெருக்கி 5, 6, 8, 7ஆல் வகுக்கக் கிடைக்கும் மிச்சம் 4 வகை வ்யயமாகும். ஆயம் அதிகமாகவும் வ்யயம் குறைவாகவும் இருந்தால் சுபம். 8, 6 9ஆல் பெருக்கி 7ஆல் வகுத்த மிச்சம் 3 வகையாகக் கிடைக்கும் வாரமாகும். நக்ஷத்திரமும் வாரமும் சேர்ந்த சேர்க்கைக்கு யோகம் என்று பெயர். நக்ஷத்திரத்தின் ஆயாதி கிடைக்க 10, 12, 8ஆல் பெருக்கி 27ஆல் வகுக்கவேண்டும். கிடைக்கும் 3 வகை மிச்சங்கள். 3 வகை நக்ஷத்திரமாகும். அல்லது 12ஆல் வகுக்காமல், 11ஆல் அல்லது 7, 5ஆல் பெருக்கி 27ஆல் வகுத்த மிச்சங்களை எடுத்துக்கொள்ளவும். ராஜா, சில்பத்தைச் செய்விக்கும் யஜமானன் இவர்களுடைய நக்ஷத்திரம் அல்லது நாம நக்ஷத்திரம் முதல் எண்ணவேண்டும். அதிலிருந்து சில்பத்தின் அளவினால் கிடைத்த நக்ஷத்திரம் வரையில் எண்ணவேண்டும். ஜன்ம நக்ஷத்திரம் நாம நக்ஷத்திரம் இரண்டிலிருந்தும் எண்ணி சுபமாக இருப்பது உத்தமம். ஜன்ம நக்ஷத்திரத்திலிருந்து எண்ணி சுபமாக இருப்பது

முக்ஷணம்]

மத்யமம். நாம நக்ஷத்திரத்திலிருந்து எண்ணி சுபமாக இருப்பது அதமம். இப்படி எண்ணிக்கிடைக்கும் எண் 1 ஆனால் அதற்கு ஜன்மம் என்று பெயர். 2 ஆனால் சம்பத்து, 3 ஆனால் விபத்து, 4 ஆனால் க்ஷேமம், 5 ஆனால் ப்ரத்யரம், 6 ஆனால் ஸாதகம், 7 ஆனால் வதம், 8 ஆனால் மைத்ரம், 9 ஆனால் பரம மைத்ரம். 9 தாண்டினால் மறுபடி 1, 2, 3 என்று 9 வரையில் எண்ணி பலனைத் தெரிந்துகொள்ளவேண்டும். இவ்விதம் 3 முறை வரையில் செய்யலாம். இவைகளுள் 3வது நக்ஷத்திரம், 5வது நக்ஷத்திரம், 7வது நக்ஷத்திரம், 13வது நக்ஷத்திரம், 17வது நக்ஷத்திரம், 18வது நக்ஷத்திரம், 22வது நக்ஷத்திரம், 27வது நக்ஷத்திரம் இவை விலக்கத்தக்கவை. மற்றவை சுபம். 22வது நக்ஷத்திரத்திற்கு வைநாசிக நக்ஷத்திரம் என்று பெயர். ஜன்ம நக்ஷத்திரத்திற்கு முந்திய நக்ஷத்திரம் 27வது நக்ஷத்திரமாகும். 18வது நக்ஷத்திரத்தில் சந்திரனுடைய அம்சம் விலக்கத்தக்கது. மற்ற அம்சங்களாக இருந்தால் சுபம். மேலும் ஜன்ம நக்ஷத்திர பாதத்திலிருந்து 88வது பாதமும் விலக்கத்தக்கது. மற்ற பாதங்கள் சுபம்.

ஜந்மநாமநக்ஷத்ரம் நக்ஷத்ரம் ஸாங்கக்ஷத்ரம் ஸாம்ஹதம் விதுः |
திஷ்யமூலமகாஸாவித்ரு ஸ்ரவிஷா வாஸவேந்த்ரஹம் ||

தேஷ்ட நக்ஷத்ரமேகம் யச்ச வஜ்ரயேத்துஹநந்யா |
ஸவம் ஸநீக்ஷ்யகத்யம் நக்ஷத்ராணாம்
விஶேஷதः || ருரு ||

(54–55) ஜன்ம நக்ஷத்திரம், நாம நக்ஷத்திரம் சில்பத்தின் அளவினால் கிடைத்த நக்ஷத்திரம் மூன்றும் ஒரே நக்ஷத்திரமானால் சுபம். ஆனால் பூசம், மூலம், மகம்,

ஆயில்யம் அவிட்டம், மிருகசீர்ஷம், சித்திரை இவை ஒரே நக்ஷத்திரமானால் விலக்கத்தக்கது. இவ்விதமாக நக்ஷத்திர பரீக்ஷை செய்யவேண்டியது.

குஜஶுக்ரபு³த⁴ஶ்சந்த்³ரோ ரவிர்ஜ்ஞஶ்ஶுக்ரபௌ⁴மயோஸ்ததா² ச ।
ஶுக்ராங்கா³ரௌ ஸௌரிஶ்சைவ ஸுரிஜீவௌ
ஸௌரிஜீவ்யௌ ॥ ௫௬ ॥

அஶ்வின்யா ரேவத்யந்தாஸ்து த்ரீணி த்ரீணி ச பா⁴ஸ்வதா: ।
நக்ஷத்ராம்ஶமிதி ப்ரோக்தம் குஜாத்³யாஸ்து க்³ரஹா: க்ரமாத் ॥

(56–57) இனி நக்ஷத்திராம்சம் சொல்லப்படுகிறது. அசுவதி முதல் ரேவதி வரைக்கும் மும்மூன்று நக்ஷத்திரத்திற்கு நக்ஷத்திரம் ஒன்றுக்கு நான்கு பாதம் வீதம் 12 பாதங்களுக்கும் முறையே, செவ்வாய், சுக்கிரன், புதன், சந்திரன், சூரியன், புதன், சுக்கிரன், செவ்வாய், குரு, சனி, சனி, குரு இவர்களுடைய அம்சம் நக்ஷத்திராம்சம் என்று அறியவேண்டியது.

ப³ந்தா⁴தி³நக்ஷத்ரா *யக்ஷ்யம் வயிதம் தூ யஶ: ।
வதா⁴ஹிமக்ஷயமேஷு ஸாம்ஶகம் தஸ்-
ய ப்ரகீர்திதம் ॥ ௫௮ ॥

ஸாம்ஶகம் து ஸமைதப்ரத³ஸ்யா வயஸ்யத்ரு
ப்ரகீர்திதம் ।
ஸாம்ஶகம் குஜராஶீநாம் சந்த்³ரக்ஷேத்ரம் விஶேஷத: ॥

---

* இந்த சுலோகத்தில் யக்ஷ்யம் வயிதம் தூ தஸ் என்ற பகுதிக்கு சரியாகப் பொருள் விளங்கவில்லை. மூலச்சுவடியில் கண்ட உரையில் 'இரட்டித்து' என்று காணப்படுகிறது. அதுவும் திருப்தியான பொருளாகத் தோன்றவில்லை.

முக்ஷணம்]

(58–59) நிர்மாணம் செய்யப்படும் சில்பத்தின் அளவினுல் கிடைத்த நக்ஷத்திரத்தின் எண்ணை இரட்டித்து நான்கால் வகுத்துக் கிடைத்த மிச்சம் பாம்சமாகும். நக்ஷத்திராம்சம் என்பது இதன் பொருள். இந்த பாம்சத்தை நூறுல் பெருக்க சில்பத்தின் வயது கிடைக்கும். பாம்சம் சில்பத்தை செய்விக்கும் யஜமானனுடைய ராசிக்கு அனுகூலமாக இருக்கவேண்டும்.

ப்ரதமாம்ஶோ த்விதீயம் ச த்ருதீயம் ச சதுர்த்தகம் ।
சதுஷ்பாதஸமோபேதம் அஶ்விந்யாதி நிரீக்ஷயேத் ॥௬௰॥

அஶ்விந்யாரேவத்யந்தா ச ஸர்வாத்யர்க்ஷம் விது: ।
ஜ்யேஷ்டாதிநவகஞ்சைகைகம் து ப்ருதக் ப்ருதக் ॥

ஏவம் ராஶிவிபாகேய: ஸ்யாத் தத்ராம்ஶோ
விஶேஷத: ।
மேஷவ்ருஶ்சிக(ஶ்சீச)யோர்ராஶ்யோஸ் தஸ்ய பௌமோऽதிபோ
பவேத் ॥ ௬௨ ॥

வ்ருஷதுலாஶ்ரயோ: ஶுக்ர: மேஷக்ஷேத்ரௌ ஜம்பகுரோ:
நைவ தத்ஸ்தாதரஸ்ய ।
மிதுநகந்யே புதக்ஷேத்ரே தஸ்யேஶஸ்து
திவாகர: (நிஶாகர:) ॥ ௬௩ ॥

கர்கடஸ்யாம்ஶகஸ்யைவ தஸ்யாஸ்யாதிபோ ராஜா
(ரிபோ) பதய: ।
ஸிம்ஹஸ்ய ராஶோஶ்சைவ தஸ்யாதிபோ ப்ருஹஸ்பதி:
(தத்ராஷ்டௌ காஜோமராரா: ॥ ௬௪ ॥

யதாகீநள மகரக்ஷேத்ரௌ விஜ்ஞாநா
(கஜேந்த்ர) ஸ்ருஹாஸ்யஹுஸ: ।

ஸாம்ஹஸ்கஸ்ய வொரஸ்நோஷிட்டீ ஸம்ஜேஷ்டீவாஸஸா: ॥ ௬௫ ॥

ராஶித்வத்திஶ்த்ராஸ்ச ஶத்ருவ்யோர்வ கீர்த்திதா: |

(60–66) அசுவதி முதல் ஒவ்வொரு நக்ஷத்திரத்திற்கும் முதல் பாதம், இரண்டாம் பாதம், மூன்றாம் பாதம், நான்காம் பாதம் என்று நான்கு பாதங்கள் கணக்கிட வேண்டும். அசுவதி முதல் ரேவதி வரையில் உள்ள 27 நக்ஷத்திரங்களையும் மேஷம் முதல் மீனம் வரையில் உள்ள ராசி 12க்கு வீதிக்கவேண்டும். அப்பொழுது ராசி ஒன்றில் $2\frac{1}{4}$ நக்ஷத்திரம் அடங்கும். இவ்விதமாக ராசியை நிச்சயிக்கவேண்டும். ஒவ்வொரு ராசிக்கும் ஏற்பட்ட அதிபதியும், அதிபதியின் சத்ரு மித்ரர்களும் இனிச் சொல்லப்படுகிறது. மேஷத்திற்கும், வ்ருச்சிகத்திற்கும் அதிபதி செவ்வாய். அவருடைய சத்ரு புதன். [1] வ்ருஷப துலாத்திற்கு அதிபதி சுக்ரன். அவருடைய சத்ரு சந்திரனும் சூரியனும் மிதுன கன்னிக்கு அதிபதி புதன். அவருடைய சத்ரு சந்திரன். கடகத்திற்கு அதிபதி சந்திரன். அவருக்கு மித்ரன் சூரியனும் புதனும். சிம்மத்திற்கு அதிபதி சூரியன். அவருடைய மித்ரன் செவ்வாய், சந்திரன், குரு. தனுசு, மீனத்திற்கு அதிபதி குரு. அவருக்கு மித்திரன் சுக்ரன், செவ்வாய், சந்திரன். மகர கும்பத்திற்கு அதிபதி சனி. இவருடைய சத்ருக்கள் சூரியன், சந்திரன், செவ்வாய் ஆகும் இவ்வாறாக ராசிகளின் அதிபதிகளும் அவர்களின் சத்ரு மித்ரர்களும் சொல்லப்பட்டது.

ஜேஷ்ட்யோர்க்ஷா வ ஊக்ஷோ ஸுத்ராக்ஸஷ்டீக்ஸ தயா ॥ ௬௬ ॥

---

1. கிரகங்களின் சத்ரு மித்திரர்கள் மூலச் சுலோகத்தில் கண்டிருப்பது சில இடங்களில் ஜோதிட சாஸ்திரத்துக்கு மாறுபட்டிருக்கிறது. அந்த இடங்களை ஜோதிஷ சாஸ்திரத்துக்கு அனுகுணமாகத் திருத்தப்பட்டிருக்கின்றன.

லக்ஷணம்]

[illegible] रव्यादितुङ्गराशिः प्रकीर्तितः ।
तद्राशेस्सप्तमं नीचं [illegible] ॥ ௬௭ ॥

(66-67) மேஷம், வ்ருஷபம், மகரம், கன்னி, கடகம், மீனம், துலாம் இந்த ராசிகள் முறையே சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி இவர்களின் உச்ச ஸ்தானங்கள். உச்ச ஸ்தானத்திலிருந்து 7வது ராசி நீச ஸ்தானமாகும்.

कर्तृराशेरनुकूलं शिल्पमाननक्षत्रांशकम् ।
कर्तृनामर्क्षराशेश्च चतुर्थषष्ठांशकं त्यजेत् ॥

द्वादशं चैव सन्त्यज्य शेषाश्चैव शुभावहाः ।
द्वादशाष्टमराशिश्च षट्चतुर्थक [illegible] विशेषतः ॥ ௬௯ ॥

[illegible] उच्चतुङ्गाश्शुभावहाः ।
शत्रुनीचद्वयं हन्ति वर्जयेत्तु [illegible] ॥ ௭௰ ॥

(68-70) சில்பத்தைச் செய்விக்கும் யஜமானனுடைய ராசிக்கு சில்பத்தின் அளவினால் ஏற்பட்ட நக்ஷத்திரத்தின் பாம்சம் அனுகூலமாக இருக்கவேண்டும். எஜமானனுடைய நக்ஷத்திரம், நாம நக்ஷத்திரம் இவைகளுக்குரிய ராசிக்கு நாலாவது, ஆறுவது அம்சத்தை விலக்க வேண்டும். பனிரெண்டாவது ராசியையும் விலக்க வேண்டும். மற்றவை சுபம். இது பொது விதி. 12வது, 8வது, 6வது, 4வது ராசிகள் ஒரே அம்சமாக இருந்தாலும் அல்லது மித்திரனது அம்சமாயிருந்தாலும், உச்சாம்சமாயிருந்தாலும் சுபத்தையே கொடுக்கும். சத்ரு ராசியும் நீச ராசியும் கெடுதியையே உண்டாக்கும். அவற்றை விலக்கவேண்டும்.

ஸப்த ஷட் பஞ்ச வேதக்னம் நவஹ்ருந்நவாம்சகம் |
தஸ்கரஃ ஶக்திர்புக்திஶ்ச தந்யோ ராஜா ததா க்லீபஃ ||௭௧||

நிர்பீதிரதனஃ ப்ரேஷ்யோ நவாம்சாநி பவந்தி ஹி |
தஸ்கரம் க்லீபகம்(அதனம்)ஷண்டம் வர்ஜயேச்சேஷஸம்ஜ்ஞயா ||

(71-72, ஏழு, ஆறு, ஐந்து, நான்கு இவைகளால் பெருக்கி ஒன்பதால் வகுக்க மூன்று வகையாகக்கிடைக்கும் மிச்சம் நவாம்சமாகும். ஒன்பது நவாம்சங்களுக்கும் முறையே தஸ்கரன், சக்தி, புக்தி, தன்யன், ராஜா, க்லீபன் (அலி) பயமின்மை, அதனன் (தரித்திரன்) ப்ரேஷ்யன் (வேலைக்காரன்) என்ற பெயர்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளுள் தஸ்கரன், அதனன் க்லீபன் இந்த நவாம்சங்களை விலக்கவேண்டும். மற்றவை சுபம்.

நவாஷ்டரஸஸங்க்யாபிஃ ஸ்யாத்த்ரிம்ஶதாஹரேச்ச |
நந்தா பத்ரா ஜயா ரிக்தா பூர்ணா சேதி க்ரமஃ க்ரமஃ ||

நந்தாம் ரிக்தாம் விநா ஸர்வாஃ ஶுபதம் வ்யவஹ்ரியதே |
அயுக்மாஸ்திதயஸ்ஸர்வே வர்ஜிதா நவமீம் விநா ||௭௪||

யுக்மேஷு தசமீ ஷஷ்டீ த்விதீயா வர்ஜிதா ஶுபாஃ |

(73-75) ஒன்பது, எட்டு, ஆறு இவைகளால் பெருக்கி 30ஆல் வகுக்க கிடைக்கும் மிச்சம் திதியாகும். திதிகளுக்கு நந்தா, பத்ரா, ஜயா, ரிக்தா, பூர்ணா என்று ஐந்தைந்து திதிகளுக்கு வரிசையாகப் பெயர்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளுள் நந்தை, ரிக்தை இவையிரண்டையும் தவிர மற்றவை சுபம். ஒற்றைப்படைத் திதிகளில் நவமியைத் தவிர மற்றவை சுபம். இரட்டைப்படைத்திதிகளில் தசமி, ஷஷ்டி, துவிதீயை இவை சுபம்.

லக்ஷணம்]

திதிவாரஸமாயோகம் ஶுபாஶுபம் விஶேஷத꞉ ||

த்வாதஶ்யேகாதஶீ சைவ பஞ்சமீ ச த்விதீயகா |

ஷஷ்டீ ததாஷ்டமீ சைவ நவமீ ச ததைவ ச || ௭௫ ||

தண்டயோகமிதி க்யாதம் ஸர்வகார்யேஷு வர்ஜிதம் பவேத் |

(75-77) திதி, கிழமை இவ்விரண்டும் சேர்ந்து ஏற்படும் சேர்க்கையின் யோகம் வருமாறு:—ஞாயிறு முதல் ஏழு நாட்களிலும் முறையே த்வாதசி, ஏகாதசி, பஞ்சமி, த்விதீயை ஷஷ்டி, அஷ்டமி, நவமி இவை சேர்ந்தால் அதற்கு தண்டயோகம் என்று பெயர். அதை விலக்க வேண்டும். மற்றவை சுபம்.

திதிவாரநக்ஷத்ரயோகம் து வக்ஷ்யே தத்விஶேஷத꞉ ||

க்ருத்திகா பஞ்சமீ ஸூர்யே சந்த்ரே சித்ரா த்விதீயகே |

பௌமே ச பூர்ணிமா ரேவத்யா புதே பரணிஸப்தமீ || ௭௯ ||

ஜீவே த்ரயோதஶீ ஜ்யேஷ்டா சாஷ்டம்யாம் ஶுக்ர ரோஹிணீ |

ஶ்ரவணா மந்தவாரே ச ஷஷ்டீ சைவ ததா || ௮௦ ||

நாஶயோகமிதி க்யாதம் ஸர்வகார்யேஷு வர்ஜிதம் பவேத் |

(77-80) திதி, கிழமை, நக்ஷத்திரம் இவை மூன்றும் சேர்ந்த சேர்க்கையினாலுண்டாகும் யோகம் இனி சொல்லப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமையோடு, கார்த்திகையும் பஞ்சமியும் சேர்ந்தாலும், திங்கட்கிழமையோடு சித்திரையும் த்விதீயையும் சேர்ந்தாலும், செவ்வாய்க் கிழமையோடு பௌர்ணமியும் ரேவதியும் சேர்ந்தாலும், புதன்கிழமையோடு பரணியும் சப்தமியும் சேர்ந்தாலும், வியாழக் கிழமையோடு

ப்ரதமையும். கேட்டையும் சேர்ந்தாலும், வெள்ளிக் கிழமையோடு ரோஹிணியும் அஷ்டமியும் சேர்ந்தாலும், சனிக்கிழமையோடு ரேவதியும் த்வாதசியும் சேர்ந்தாலும், 'நாசயோகம்' என்று பெயர். இது விலக்கத்தக்கது. மற்ற சேர்க்கைகள் அமிர்தயோகம் ஆகும்.

நதீஶ்சாத்ரிவ்ருக்ஷாம்ஶ்ச யோநிபி: க்ஷபயேத்யதா ॥ ௮௰ ॥

ஶேஷ: ஸர்வப்ராதிஷ்டஸ்தாநேஷ்வா த்வஜோ தூம்ரஶ்ச கேஸரீ ।

ஸாரமேயஶ்ச வ்ருஷப: கரோ நாகஶ்ச வாயஸ: ॥ ௮௧ ॥

த்வஜஸிம்ஹவ்ருஷா ஹஸ்தீ ஶுபாஸ்த்வந்யாம்ஸ்து வர்ஜயேத் ।
ப்ராகாரீணாம் து வாஸ்தூநாம் ப்ராஸாதாதிஷு ததைவ ச ॥

ஸர்வப்ராஸாதிஷு ஸ்திதா யோநி: ப்ராதக்ஷிண்யக்ரமேண து ।
ப்ராஹ்மணாதிஸர்வம் தேஷு ஸாரவ்ருத்தம் நிஷித்யதே ॥

தத்ஸ்தாநேஷு தத்யோநி: ப்ராகாரேண ந ப்ரஜாயதே
(ஜாயதேऽபி) ।

ஶுபதம் ஸர்வஸாத்யம் ததோ த்ருவம் ஸ்வீயதே ॥ ௮௪ ॥

த்வஜக்ஷேத்ரே ஶ்ருங்கம் வா கஜம் வா வ்ருஷபம்
ஶுபம் ।

ஸிம்ஹக்ஷேத்ரே த்வஜோ ஜாத: தநதாந்யாதிவர்தந: ॥

வ்ருஷஸ்தாநே த்வஜோ ஹஸ்தீ யுக்தௌ புத்ரதநப்ரதௌ ।
கஜஸ்தாநே த்வஜோ ஜாதோ நித்யம் கல்யாணதாதிஶேஷு ॥

உத்தரே வ்ருஷபம் ஸிம்ஹம் ஸம்யுக்தம் ஶரணம் த்ருவம் ।
பஶ்சிமே கேஸரீயுக்தம் ஶரணம் து ந ஸம்ஶய: ॥ ௮௭ ॥

𑌲𑌕𑍍𑌷𑌣𑌂]

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌵𑍃𑌷𑌸𑌂𑌹𑌹𑌸𑍍𑌤𑌿 𑌯𑌾𑌕𑍍𑌷𑌂 𑌸𑌵𑍍𑌯𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌯𑌾 |
𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌵𑌦𑌂𑌯𑌾𑌨𑌿 𑌨𑌿𑌵𑍇𑌶𑍍𑌯𑌾𑌯𑌤𑍍𑌰
*𑌕𑌾𑌤𑍍𑌰𑍁𑌵𑌿𑌤𑍍 ‖ ௮௮ ‖

𑌯𑌾𑌮𑍍𑌯𑌯𑍋𑌰𑍍𑌨𑌿𑌰𑍃𑌤𑌿𑌦𑍍𑌵𑌾𑌰𑌤𑌃 𑌸𑍌𑌮𑍍𑌯𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑌕𑍍𑌷𑌯𑍋𑌃 |
𑌸𑍌𑌮𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌵𑌾𑌯𑌵𑍍𑌯𑍇𑌷𑍁 𑌵𑌾𑌰𑍁𑌣𑌵𑍇𑌷𑍁
𑌕𑍍𑌰𑌾𑌮𑍇𑌷𑍁 ‖ ௮௯ ‖

(80-89) இனி யோனி என்பது சொல்லப்படுகிறது. 9, 11, 3 இவைகளால் பெருக்கி எட்டால் வகுக்கக் கிடைக்கும் மிச்சம் 3 வகையான யோனியாகும். அவைகளுக்கு முறையே த்வஜம், தூமம், கேசரி (சிம்மம்) நாய், வ்ருஷபம், கழுதை, யானை, காகம் என்று பெயர். இவைகளை கிழக்கு முதல் எட்டு திக்குகளிலும் ஸ்தாபிக்கவேண்டும். யோனிகளில் த்வஜம், சிம்மம், வ்ருஷபம், யானை இவை நான்கும் சுபம். மற்றவை அசுபம். கிராமம் முதலிய நிர்மாணங்களுக்கும், ப்ராஸாதம் முதலிய நிர்மாணங்களுக்கும் கிழக்கு முதல் எட்டு திக்குகளுக்கும் எட்டு யோனிகளும் உரித்தாகும். யோனியானது கிழக்கு முகமாக மத்தியில் இருக்கும் ப்ரும்ம ஸ்தானத்திற்கு நேர் முகமாக இருப்பது சுபம். பின்புறமாக இருப்பது விலக்கத்தக்கது. மேலும் அந்தந்த யோனிக்குரிய ஸ்தானத்தில் அந்தந்த யோனியையுடைய அளவுள்ள நிர்மாணம் ஏற்பட்டால் அது சுபத்தையே கொடுக்கும். மற்ற யோனிகளுள்ள நிர்மாணம் ஏற்பட்டால் அதனால் ஏற்படும் பலன் இனிச் சொல்லப்படுகிறது. த்வஜ யோனியினிடத்தில் சிம்ம யோனி அல்லது வ்ருஷப யோனியுள்ள நிர்மாணம் சுபம். சிம்மயோனியின் க்ஷேத்திரத்தில் த்வஜயோனியுள்ள நிர்மாணம் ஏற்

*‘𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌂’ 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 |

படுத்தினால் தனதான்யம் விருத்தியடையும். வ்ருஷப யோனியின் ஸ்தானத்தில் த்வஜயோனி, கஜயோனியுள்ள நிர்மாணம் ஏற்படுத்துவதனால் புத்ரன் தனம் இவை உண்டாகும். கஜயோனியின் ஸ்தானத்தில் த்வஜயோனியுள்ள நிர்மாணம் ஏற்படுத்துவதனால் எல்லா சுபங்களும் உண்டாகும். மேலும் வடக்கு திக்கில் வ்ருஷபம் அல்லது சிம்மம் சேர்ந்தால் மரணம் சம்பவிக்கும். மேற்கே சிம்ம யோனி சேர்ந்தாலும் அதேபலன். தெற்கில் வ்ருஷபம் கஜம் சேர்ந்தால் ஆபத்தை உண்டாக்கும். வ்ருஷபத்தின் ஸ்தானத்தில் மற்ற யோனிகளைச் சேர்க்கலாம். மற்ற யோனிகளின் ஸ்தானங்களில் வ்ருஷபத்தைச் சேர்க்கக் கூடாது. இவ்வாறாக இரட்டைப்படை யோனி சொல்லப் பட்டது. ஒற்றைப்படை யோனியும் [1] இப்படியே மூன்று வகையாகப் பிரித்துப் பலன் கொள்ளவும்.

𑌸𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑍇 𑌯𑍋𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌶𑍍𑌚 𑌤𑍍𑌰𑍀𑌣𑌿 𑌯𑍋𑌨𑌿𑌕𑌮𑍍 ।
𑌷𑌡𑍍𑌜𑌰𑍍𑌷𑌭𑌗𑌾𑌨𑍍𑌧𑌾𑌰𑌾 𑌉𑌤𑍍𑌤𑌮𑌂 𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌤𑌥𑌾 ॥ ௪௰ ॥
𑌧𑍈𑌵𑌤𑌂 𑌨𑌿𑌷𑌾𑌦𑌂 𑌸𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌭𑌿𑌃 𑌕𑍍𑌷𑌯𑍇𑌚𑍍𑌚 𑌤𑌾𑌨𑍍𑌤𑌤𑌃 ।
𑌏𑌵𑌂 𑌸𑌦𑍍𑌸𑍍𑌵𑌰𑌯𑍋𑌨𑌿𑌶𑍍𑌚 𑌸𑌪𑍍𑌤𑌯𑍋𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥

𑌭𑍂𑌮𑌿𑌰𑌾𑌪𑌸𑍍𑌤𑌥𑌾 𑌤𑍇𑌜𑍋 𑌵𑌾𑌯𑍁𑌰𑌾𑌕𑌾𑌶 𑌏𑌵 𑌚 ।
𑌕𑍍𑌷𑌯𑍇𑌦𑍍𑌵𑌯𑍋𑌨𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌚 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌹𑌵𑌨𑍀𑌯𑌕𑌮𑍍 ॥

𑌗𑌾𑌰𑍍𑌹𑌪𑌤𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌸𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌸𑌂𑌵𑍍𑌯𑌾𑌯 𑌵𑌿𑌭𑌜𑍍𑌯𑌤𑍇 ।
𑌷𑌡𑍍𑌜𑌸𑍍𑌤𑍁 𑌋𑌷𑌭𑍋 𑌉𑌤𑍍𑌤𑌮𑌃 𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 ॥

---

1. இந்த ச்லோகத்தின் பிற்பகுதியின் பொருள் சரியாக விளங்கவில்லை.

லக்ஷணம்]

ஸப்தைதேஷு ப்ருதிவீஜ்யோதிஃ ஶ்ரேஷ்டாவஸாநி
பூஜயேத் |
கார்ஹபத்யாஹவநீயௌ பஶ்சிமௌ சாந்யௌ
பஶ்சிமௌ ‖ ௯௪ ‖

ஷட்ஜஸ்து பஶ்சிமேத்வத்ர ஸம்ஸ்தம் தக்ஷிணோத்தரே |
ருஷபஸ்து ப்ராக்ஸ்தஃ ஸ்யாத் பஶ்சிமே ஷோடஶவேத் ‖

ஸர்வேஷாமபி வாஸ்தூநாம் பஶ்சிமே ப்ருதிவீஜயே |
வாருணே தக்ஷிணே ஸோமே ஸௌம்யே
சாஹவநீயகம் ‖ ௯௫ ‖

ஸர்வேஷாமபி வாஸ்தூநாம் கார்ஹபத்யம் து
யோஜயேத் |
சதுர்வித்யக்ரமேண யோநிஷ்வேகேநஸம்யுதம் ‖

யுக்மாநாம் ச அயுக்மம் ஸ்யாத் யுக்மம் ஸப்தயோநிகம் |
த்ரயாணாம் யோஜயேச்சாந்து பஞ்சம் பஞ்சமே
ஸம்ஸ்தம் ‖ ௯௬ ‖

த்விதீயேந த்விதீயம் து த்ருதீயேந த்ருதீயகம் |
தஸ்ய பஞ்சாயகேநைவ ஹாநிர்ஸோத்தமஸம்பதா ‖

யதாக்ரமேண கர்த்தவ்யம் விபரீதம் விபத்கரம் |

(90–100) யோனியை ஏழாகவும், ஐந்தாகவும், மூன்றாகவும் கணக்கிடலாம். ஏழாகக் கணக்கிடும்போது அவைகளுக்கு ஸப்த ஸ்வரங்களின் பெயர்கள் இடப்படுகின்றன. அதாவது முறையே ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்பவை ஒன்று

முதல் வரிசையாகப் பெயர்களாகும். ஐந்தாகக் கணக்கிடும் போது பஞ்ச பூதங்களின் பெயர்கள் இடப்படுகின்றன. அதாவது முறையே ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்பவை முறையே ஒன்று முதல் பெயர்களாம். மூன்றாகக் கணக்கிடும் போது 3வித அக்னிகளின் பெயர்கள் இடப்படுகின்றன. அதாவது முறையே தக்ஷிணாக்கினி, ஆஹவநீயம், கார்ஹபத்யம் என்பவை பெயர்களாம். ஏழாகக் கணக்கிடுவதற்கு ஏழால் வகுத்த மிச்சத்தையும் ஐந்தாகக் கணக்கிடும்போது ஐந்தால் வகுத்த மிச்சத்தையும், மூன்றாகக் கணக்கிடும்போது மூன்றால் வகுத்த மிச்சத்தையும் எடுத்துக் கொள்ளவேண்டும். ஏழாகக் கணக்கிடும் யோநியில் ஷட்ஜம், ரிஷபம், மத்யமம் இம்மூன்றும் சுபம். மற்றவை அசுபம். 5 ஆகக் கணக்கிடும் யோநியில் ப்ருதிவி, தேயு, இரண்டும் சுபம். மற்றவை அசுபம். மூன்றாகக் கணக்கிடும் யோனியில் கார்ஹபத்தியம், ஆஹவநீயம் இரண்டும் சுபம். மற்றவை அசுபம். மேலும் ஸப்த யோநியில் ஷட்ஜம் எந்த திக்கிலும் சுபம். மத்யமம் தெற்கிலும் வடக்கிலும் சுபம். ரிஷபம் மேற்கில் சுபம். பஞ்ச யோநியில் ப்ருதிவியும் அப்பும் எல்லாவிடங்களிலும் சுபம். த்ரியோநியில் ஆஹவநீயம் மேற்கிலும், தெற்கிலும், வடக்கிலும் சுபம். கார்ஹபத்தியம் எல்லாதிக்குக்களிலும் சுபம்.

இவ்விதமாக 4 வகையாக யோநியை ஆயாதி சுத்தி செய்யும்போது ஏதாவது ஒரு வகையில் சுத்தியாக வேண்டியது அவசியம். மேலும் இரட்டைப்படை யோநியின் ஸ்தானத்தில் இரட்டைப்படை யோநியுள்ள நிர்மாணத்தைச் செய்யவேண்டும். ஒற்றைப்படை யோநியின் ஸ்தானத்தில் ஒற்றைப்படை இரட்டைப்படை இரண்டு வகை யோநியுள்ள நிர்மாணத்தையும் செய்யலாம். மேலும் ஸப்தயோநி, பஞ்சயோநி, த்ரியோநி இந்த மூன்று

ருக்ஷாணாம்]

வகையாக யோனி சுத்தி செய்யும்போது அததற்கேற்பட்ட விதிப்படி கணக்குப் பார்த்துக் கூடுதல் குறைத்தல் செய்ய வேண்டும். ஒன்றோடொன்று கலந்து சுத்தி செய்யக் கூடாது. அது ஆபத்தை உண்டாக்கும்.

மைத்ரஶ்ரவணரேவத்ய: புநர்வஸ்வாதி
ஹஸ்தகா: ||௱||

அஶ்விநீம்ருகஶீர்ஷம் ச புஷ்யம் தேவகணா: ஸ்ம்ருதா: |
த்ரீண்யுத்தராணி பூர்வாணி ரோஹிணீ ச
ததைவ ச ||௱க||

பரண்யார்த்ரா ச விஜ்ஞேயா மாநுஷா இதி கீர்திதா: |
க்ருத்திகா ச மகாऽऽஶ்லேஷா விஶாகா ஶததாரகா ||௱உ||

ஶ்ரவிஷ்டா சித்ராஸம்யுக்தா ஜ்யேஷ்டா மூலம் ச ராக்ஷஸா: |
ஸ்வகணம் சோத்தமம் வித்யாத் தத்ப்ரீதிர்நவயோர்ந்ருணாம் ||௱௩||

மத்யமம் தேவமாநுஷ்யம் சாத்ரௌ ப்ராஹிவயோர்ந்ருணாம் |
அதமம் தேவராக்ஷஸ்யம் ம்ருத்யு: ப்ரீதிர்நராக்ஷஸே ||௱௪||

மநுஷ்யராக்ஷஸம்யுக்தம் மரணம் ப்ரவிதீயதே |

(100-105) அனுஷம், திருவோணம், ரேவதி,[1] புனர் பூசம், ஸ்வாதி, ஹஸ்தம், அசுவதி, மிருகசீர்ஷம், பூசம், இவை தேவகணம். பூரம், பூராடம், பூரட்டாதி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி ரோஹிணி, பரணி, திருவாதிரை, இவை மனுஷ்யகணம். கிருத்திகை, மகம்,

1. சோதிட நூல்களில் ரேவதி மனுஷ்யகணம் என்றும், சதயம் மனுஷ்யகணம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆயில்யம், விசாகம், சதயம், அவிட்டம், சித்திரை, கேட்டை, மூலம் இவை ராக்ஷஸகணம். கர்த்தாவின் நக்ஷத்திரம் அல்லது நாம நக்ஷத்திரமும் சில்பத்தின் அளவால்கிடைத்த நக்ஷத்திரமும் ஒரே கணமாகில் உத்தமம். சகல சம்பத்தும் உண்டாகும். இவை தேவகணம், மனுஷ்ய கணமானால் மத்யமம். புத்திர பௌத்திர விருத்தியுண்டாகும். இவை தேவகணம் ராக்ஷஸகணம் ஆனால் அதமம். ஆயுள், சம்பத்து இவையுண்டாகும். இவை மனுஷ்யகணம் ராக்ஷஸ கணமானால் மரணத்துக்கு ஹேது உண்டு.

நக்ஷத்ரவாரஸம்யுக்தம் யோகம் தச்சாபி வீக்ஷ்யதே ॥

விசாகாச்வாஶ்வநராயா ஶ்ரவிஷ்டாதிஷ்யரோஹிணீ ।
ஸ்வாதீ பூர்வமஶீரோ ஜ்யேஷ்டா ஸப்தயோகா நராதயோ வாரா: ॥

தீஷ்ணோத்தராணி ஹஸ்த ஶ்வாதி சித்ரா நராயிகா ।
விசாகாஶ்வஸம்யுக்தா மரயோமோ நராதயோ வாரா ॥

ப்ராஜேஶம் ச உத்தராஷாட விசாகா ஶ்ரவணா ஆர்த்ரா ஹஸ்ததி ।
ஜ்யேஷ்டா ஸ்வாதிஷ்டா மரயோமோ நராதயோ வாரா ॥

வஸ்வப்ருத்யோஶ்வாஸவபூ வர்ஷ வணஷ்டாயஶ்லேஷா ।
ஸ்ராகாவரா ஸ்வாதீ பூர்வயே மரயோமோ நராதயோ
வாரா: ॥ ௩௧ ॥

உத்தராஷாட ரோஹிணீ வாருணா க்ருத்திகோத்தரே ।
பூர்வமஶீரோ உத்தரேஜீவே மரயோமோ நராதயோ வாரா: ॥

ஶ்ரவிஷ்டா சித்ரா ரோஹிணீ சைத்ர ஸப்தயோக
ஶ்வாஶ்லேஷா ।

வார்ஷ்ட்ராஶ்லேஷாஹஸ்ரஶாதவாரே மந்த³யோஶ்ஶ
தக்³த⁴யாவரா: ॥ ௱௧௧ ॥

உத்தரா ரேவதீ ஹஸ்த ஶ்ரவணே திஷ்யவாருணே ।
ஶ்ருதித்ராத்ரூரமூலாந்த்யா ஶநைஶ்சரே தக்³த⁴யா வரா: ॥

(105-112) நக்ஷத்திரமும் வாரமும் சேர்ந்த யோகங்கள் இனிச் சொல்லப்படுகின்றன. ஞாயிற்றுக் கிழமையோடு விசாகம், மகம், அனுஷம், அவிட்டம், பூசம், ரோஹிணி, அசுவதி, மிருகசீர்ஷம், கேட்டை இவை சேர்ந்தால் அதற்கு 'தக்த யோகம்' என்று பெயர். 'எரிந்த யோகம்' என்பது அதன் பொருள். அது நல்லதல்ல. மற்றவை சுபம் திங்கள்கிழமையோடு உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, கார்த்திகை, மகம், சித்திரை, அனுஷம், திருவாதிரை, விசாகம் இவை சேர்ந்தாலும் 'கரயோகம்' என்று பெயர். அதாவது 'விஷயோகம்'. இதுவும் நல்லதல்ல. மற்றவை சுபம். செவ்வாய்க் கிழமையோடு பூரட்டாதி, உத்திராடம், விசாகம், திருவோணம், திருவாதிரை, கேட்டை, சதயம் இவை சேர்ந்தாலும் 'கரயோகம்' ஆகும். புதன்கிழமையோடு பூரம், பூராடம், பூரட்டாதி, மகம், ரோஹிணி, பூசம், ரேவதி, பூஷா, யமன், தேவதையுள்ளவை, சியாமா, வரா, அசுவதி இவை சேர்ந்தாலும் கரயோகமாகும். வியாழக் கிழமையோடு உத்திராடம், ரோஹிணி, சதயம், கார்த்திகை, உத்திரம், மிருகசீர்ஷம், [1] உத்திரம் இவை சேர்ந்தாலும் கரயோகமாகும். வெள்ளிக்கிழமையோடு அவிட்டம், சித்திரை, ரோஹிணி, அனுஷம், விசாகம், மகம், பூசம், ஆயில்யம் இவை சேர்ந்தாலும் கரயோகமாகும். சனிக்

1. 'உத்திரம்' இருமுறை சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவது 'உத்திரம்' என்ற சொல்லுக்கு மிருகசீர்ஷத்துக்கு அடுத்தது என்று பொருள் கொண்டால் அதற்குத் திருவாதிரை என்ற பொருள் கிடைக்கும்.

கிழமையோடு உத்திராடம், ரேவதி, ஹஸ்தம், திருவோணம், பூசம், சதயம், புனர்பூசம், உத்திரம் இவை சேர்ந்தாலும் தக்தயோகமாகும். இவை தவிர மற்ற சேர்க்கைகள் சுபம்.

जात्यंशकं विधेयं स्याद् ब्राह्मणादि चतुर्ष्वपि ।
चतुरधिकाशीत्यंशं द्विषष्ट्यंशकं तथा ॥११३॥

चतुर्विंशांशकं चैव षोडशांशं तथैव च ।
तत्तदेकांशसंयुक्तं तज्जात्यंशकमुच्यते ॥११४॥

तदंशाष्टगुणा तु सप्तविंशद्धृते सति ।
शिष्टं नक्षत्रमश्विन्यादि क्रमेण तु ॥

पूर्वाश्रविष्ठा ज्येष्ठा चाश्वयुग्भाग्यभेषु ।
यद्दिनं विषयं चास्तु नक्षत्रं तु यदृक्षके ॥११५॥

यत्कर्तुर्वर्णसम्भवं वास्तुकानां ।
तद्विनेष्टवियुक्तं वा शूल्यादीनां तु शोभनम् ॥

(113-117) சிற்பம் எந்த எஜமானனுக்காக நிர்மாணிக்கப்படுகிறதோ அவனுடைய ஜாதியைப் பொறுத்து சிற்பத்தின் அளவோடு அடியில் விவரிக்கப் படும் ஜாத்யம்சம் என்பதைச் சேர்த்துக்கொண்டு ஆயாதி சுத்தம் செய்யவேண்டும். சிற்பத்தின் அளவில் 84-ல் 1 பங்கு பிராம்மண ஜாதிக்கும், 62-ல் 1 பங்கு க்ஷத்திரிய ஜாதிக்கும், 24-ல் 1 பங்கு வைசிய ஜாதிக்கும், 16 ல் 1 பங்கு சூத்திர ஜாதிக்கும் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஜாத்யம்சத்திற்கான பாகத்தைச் சேர்த்துக் கிடைத்த அளவை எட்டால் பெருக்கி இருபத்தேழால் வகுக்கக் கிடைக்கும் மிச்சம் அச்வினி முதலாக தினம் அல்லது நக்ஷத்திரத்தைக் குறிக்கும். உதாரணமாக சிற்பத்தின் அளவு நான்கு ஜாதிகளுக்கும் முறையே 84, 62, 24, 16 எனக்கொண்டால்

முக்ஷணம்]

ஜாத்யம்சத்தைச் சேர்த்த அளவு முறையே 85, 63, 25, 17 என ஆகும். இவற்றை 8 ஆல் பெருக்கி 27 ஆல் வகுக்க வரும் மிச்சம் முறையே மிருகசீர்ஷம், கேட்டை, பூரம், அச்வினி ஆகும். இவ்விதமாகக் கிடைத்த சிற்பத்திற்கான நக்ஷத்திரம் கர்த்தாவின் நாம நக்ஷத்திரத்துக்குச் சமமானால் தன விருத்தி, குல விருத்தி, பசு விருத்தி, பூமி விருத்தி இவைகளைக் கொடுக்கும். அல்லது சிற்பத்திற்காகக் கிடைத்த நட்சத்திரத்திற்கு நாம நட்சத்திரம் அனுகூலமாக இருந்தாலும் சுபம்.

ஸாஹாஸெந ஸம்யுக்தம் நாஜஹு ஈஜிவாஸுஷு ।
க்ஷயாதிஸம் வ்ரஜேஷிசாது க்ஷயாதிஸா விஊநகூ ॥

வாஸ்துவெபாதிகாநாம் வ க்ஷயாதிஸம் ஸுயோஜயெத் ।
பதாம்ஸாத் த்ரிம்ஸதம்பாதி ஸவிெஜ்காம்ெஸந
யொஜயெத் ॥ ககஎ ॥

(118-119) விமானம், வாஸ்து அல்லது ஏனைய கட்டடம், பிம்பங்கள் இவைகளின் அளவு அரசன் அல்லது மற்ற கர்த்தாவினுடைய நக்ஷத்திரத்திற்குப் பொருத்தமான அளவாகவே இருக்கவேண்டும். அப்படிப் பொருந்தாவிட்டால் அளவை நூறு கூறாக்கி உள்ள அளவோடு முப்பது பங்கு முதல் நூறு பங்கு வரையில் பொருந்தும் அளவு கிடைக்கிறவரையில் சேர்த்துக்கொள்ளலாம்.

ஊவஊயாதிகம் ஷேக்ஷம் தத்ஷம் தா ஷவக்ஷ்தெ ।
யொமம் ஹொமம் வ ஸம்ஷாஷ்ம் வீஸம் யாநம்
யநம் ஸவ்ஷ ॥ கஉ௰ ॥

யஜ்ஞம் ஜ்ஞாநம் வ ஹொமம் வ ஸிஷிஷம் வாயஷாயகூ ।
ஆதிபாயதநாஊதி யயாயம் தக்ஷுாநி செவ ॥ கஉக ॥

(120 121) இவ்வாருக ஆயாதிக்கணக்கு சொல்லப் பட்டது. அவை ஒவ்வொன்றின் பயன் இனிச் சொல்லப் படுகிறது. ஆயம் பனிரெண்டுக்கும் முறையே யோகம், (அதிர்ஷ்டம்) போகம், (சுகானுபவம்), ஸம்ப்ராப்தி (கிடைத்தல்) வீரம், தான்யம், தனம், சுகம், தர்மம், ஞானம், யோகம், சித்திதம் (சித்தியைக் கொடுப்பது), அர்த்ததாயகம் (செல்வத்தைக் கொடுப்பது) என்று பெயர். அவற்றின் பலனும் பெயர்களின் பொருள்களே யாகும்.

അഗ്നിനാശം തഥാ ഋദ്ധിരാപവത് പുത്രവർദ്ധനം |
ചക്ഷുർഹീനം ച വിജയം ദരിദ്രം ശ്രീപ്രദം നൃണാം ||

പുത്രനാശശ്ച പുഷ്ടിഃ സ്യാദിത്യേതേ വ്യയനാമകാഃ |

(122-123) வ்யயம் பத்து வகைக்கும் பெயர்கள் வருமாறு :— அக்னி, நாசம், ருத்தி (செல்வம்) ஆபவத் (?) புத்ரவர்த்தனம், சக்ஷுர்ஹீனம், விஜயம், தரித்திரம், ஸ்ரீப்ரதம், புத்ரநாசம், புஷ்டி இவைகளாம். இவைகளின் பலன்களும் இப்பெயர்களின் பொருளேயாகும்.

ആയാധിക്യം വ്യയം ക്ഷീണം തദ്ധ്രുവം ശോഭനം സ്മൃതം ||

വ്യയാധിക്യസമം യത്തു സർവ്വസമ്പത്ക്ഷയോ ഭവേത് |

... ...

... ...

(123-125) ஆயம் அதிகமாகவும் வ்யயம் குறைவாக வும் இருப்பது சுபத்தைக்கொடுக்கும். வ்யயம் அதிகமாக வும் ஆயம் குறைவாகவும் அல்லது இரண்டும் சமமாகவோ இருந்தால் சம்பத்தைக் குறைக்கும். ... ...

... ...

ஶ்ரேணம்]

ஶத்ருநீசலயம் ஹந்தி ஸஜ்ஜயேத்தத்³விசக்ஷண: || ௧௨௬ ||

தஸ்கரோ நாஶதோ பு⁴க்திர்த⁴நதா⁴ந்யவிவர்த⁴நீ |
ஶக்திஸ்த்வாரோக்³யதோ³ த⁴ந்யஸ்து த⁴நதோ³ ந்ருப: ||

ந்ருப: க்ஷேத்ராயுர்வ்ருத்³தி⁴த³: க்லீப³: கலஹாதி³ப்ரத³: |
நிர்பீ⁴தி: ப்ரியதா³ரோக்³யம் த³ரித்³ரோ த⁴நநாஶந: ||

ப்ரேஷ்யோ ஜயத³ஸ்து புத்ரபௌத்ராதி³வர்த⁴ந: |
நவாம்ஶகப²லம் ஜ்ஞேயம் தத்தந்நாமப்ரதி³தம் || ௧௨௯ ||

(126-129) சத்ரு ராசியும் நீச ராசியும் கெடுதியைச் செய்யும். அதை விலக்கவேண்டும். நவாம்சம் ஒன்பதின் பலன் வருமாறு:— தஸ்கரம் நாசத்தையுண்டுபண்ணும். புக்தி தனதான்யத்தை விருத்தி செய்யும். சக்தி ஆரோக்கியத்தைக் கொடுக்கும். தன்யம் தனத்தைக் கொடுக்கும். ந்ருபன் பூமி ஆயுள் இவற்றை விருத்தி செய்யும். க்லீபன் கலகத்தை உண்டாக்கும். நிர்பீதி பிரியத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கும். தரித்திரம் தனத்தை நாசம் செய்யும். ப்ரேஷ்யன் ஜயத்தையும் புத்ர பௌத்ராதிகளையும் விருத்தி செய்யும்.

திதி: பக்ஷவாரௌ ஜ்ஞாநதா³ ப்ரஶஸ்தாதி³ஶோப⁴நம் |
தயோர்வித்³ய(வஜ்ர)ப்ரஶஸ்தா வித்³யாஸு த்³விதீயாயாம்
ப்ரஶஸ்யதே || ௧௩௦ ||

த்ருதீயா விஜயம் ஜ்ஞேயம் சதுர்தீ² விஜயப்ரதா³ |
பஞ்சமீ ஸர்வத³ஶமீ ஸப்தமீ ஷஷ்டீ² சாஷ்டமீ
ப்ரஶஸ்யதே || ௧௩௧ ||

ஸப்தமீ ஸௌக்யதா ப்ரோக்தா அஷ்டமீ ஆரோக்யதாயிநீ |
நவமீ தநநாசம் ஸ்யாத் தசமீ தீர்க்கஸௌக்யதா || ௧௩௨ ||

ஏகாதசீ வய: ப்ரோக்தா த்வாதசீ புத்ரவர்த்தநீ |
ஸர்வஸம்பத் த்ரயோதச்யாம் சதுர்த்தச்யாம் தநநாசநீ ||

பூர்ணிமா ஸக்திதா ப்ரோக்தா அபரம் தநநாசநீ |

(131-134) திதிகளைப் பூர்வபக்ஷம் பதினைந்து, அபர பக்ஷம் பதினைந்தாகப்பிரித்துப் பலன் புரிந்து கொள்ள வேண்டும் பூர்வ பக்ஷத்தில் பிரதமை விலக்கத்தக்கது. த்விதீயை தனத்தைக் குறைக்கும். த்ருதீயை ஜயத்தைக் கொடுக்கும். சதுர்த்தி செல்வத்தைக் குறைக்கும். பஞ்சமி புத்ர விருத்தி செய்யும். ஷஷ்டி ஆயுளை விருத்தி செய்யும் சப்தமி சௌக்யத்தைக்கொடுக்கும். அஷ்டமி ஆரோக்கியத் தைக் கொடுக்கும். நவமி தனத்தை நாசம் செய்யும். தசமி வெகு காலம் சௌக்கியத்தைக்கொடுக்கும். ஏகாதசி ஆயுளை விருத்தி செய்யும். த்வாதசி புத்ர விருத்தி செய்யும். த்ரயோதசி எல்லா ஸம்பத்தையும் கொடுக்கும். சதுர்த்தசி யும் தனத்தை நாசம் செய்யும். பௌர்ணமி அதிக சக்தியைக்கொடுக்கும். அதன் பிறகு உள்ள அபர பக்ஷத்திலுள்ள 15 திதிகளும் தனத்தை நாசம் செய்யும்.

நக்ஷத்ரவாரஸம்யுக்தம் திதியோநிஸமந்விதம் || ௧௩௪ ||

தத்ஸர்வம் ஸௌபாக்யதம் புத்ரபௌத்ராபி வர்த்தநம் |

(134-135) நக்ஷத்திரம், கிழமை, திதி, யோனி இவைகளெல்லாம் சேர்ந்து நல்ல பலனைக் கொடுக்கக் கூடியவைகளாக ஏற்பட்டால் அதுவே சுபம், புத்ர பௌத்ரர்களை விருத்தி செய்யும்.

𑌲𑌕𑍍𑌷𑌣𑌂]

𑌧𑍍𑌵𑌜𑌾𑌦𑌿𑌵𑌾𑌯𑌸𑌾𑌨𑍍𑌤𑌂 𑌯𑌤𑍍 𑌫𑌲𑌾𑌫𑌲𑌮𑌿𑌹𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

𑌶𑍍𑌰𑍀𑌕𑌰𑌂 𑌤𑍍𑌵𑌗𑍍𑌨𑌿𑌨𑌾𑌶𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌵𑌿𑌜𑌯𑌂 𑌕𑌲𑌹𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌪𑍁𑌤𑍍𑌰𑌲𑌾𑌭𑌂 𑌚 𑌰𑍋𑌗𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌆𑌰𑍋𑌗𑍍𑌯𑌂
𑌧𑌨𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ॥ ௧௩௬ ॥

(*135-136*) த்வஜம் முதல் வாயஸம் வரையிலுள்ள எட்டு வகை யோனிகளுக்கும் பலன் முறையே (*1*) செல்வத்தை உண்டாக்குவது (*2*) அக்னியினால் கெடுதி (*3*) ஜெயம் (*4*) கலகம் (*5*) புத்ரோத்பத்தி (*6*) வியாதி (*7*) ஆரோக்கியம் (*8*) தனநாசம் ஆகும். இவ்விதமாக அஷ்டயோனிகளின் பலன் சொல்லப்பட்டது.

𑌅𑌷𑍍𑌟𑌯𑍋𑌨𑌿𑌰𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌸𑌪𑍍𑌤𑌯𑍋𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ।
𑌷𑌡𑍍𑌜𑌃 𑌶𑍍𑌰𑍀𑌕𑌰𑌮𑌾𑌰𑍋𑌗𑍍𑌯𑌂 𑌋𑌷𑌭𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌧𑌨𑌃 ॥

𑌗𑌾𑌨𑍍𑌧𑌾𑌰𑌃 𑌕𑌲𑌹𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌮𑌧𑍍𑌯𑍋 𑌰𑍋𑌗𑌦𑍋
𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌪𑌞𑍍𑌚𑌮𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌧𑌽𑌵𑌤𑍇 𑌧𑌨𑌨𑌾𑌶𑌨𑌂 ॥

𑌨𑌿𑌷𑌾𑌦𑌂 𑌵𑌧𑌕𑍃𑌤𑍍𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 ।

(*137-139*) யோனியை ஏழாகக் கணக்கிடும்போது அவற்றின் பலன் இனிச் சொல்லப்படுகிறது. ஷட்ஜம் செல்வத்தை விருத்திசெய்யும். ஆரோக்கியத்தைக் கொடுக்கும். ரிஷபம் புத்திரர்களை விருத்திசெய்யும். காந்தாரம் கலகத்தை விளைவிக்கும். மத்யமம் வியாதியை உண்டுபண்ணும். பஞ்சமம் புத்ர விருத்தி உண்டாக்கும். தைவதம் தனத்தை நாசம் செய்யும். நிஷாதம் வதத்தை உண்டாக்கும்.

ப்ருதிவ்யாதிவிதயோநி ப்ருதிவீ புத்ரதா பவேத் ||

ஸர்வகாமப்ரதமம்பஸ்யம் ஜ்வலநாக்நிர்நாஶநம் பவேத் |
மாருதெ மரணம் வித்யாதாகாஶெ ஸர்வஸம்ஹதிः ||

தக்ஷிணாக்நிவிதயோநி தக்ஷிணாக்நிர்விபத்கரः |
ஸ்ரீதஶ்சாஹவநீயாக்நிர்கார்ஹபத்யஸ்த்வாயுஷः ||கசக||

(139-141) பஞ்சயோனியின் பலன் வருமாறு:— 'பிருத்வி' புத்ரபாக்கியத்தைக் கொடுக்கும். 'அப்பு, விருப்பங்களை நிறைவேற்றும், 'தேஜஸ்' நாசத்தைக் கொடுக்கும். 'வாயு' மரணத்தைக்கொடுக்கும். ஆகாசம்' எல்லாவற்றையும் அழிக்கும். மூன்று வகையாகக் கணக்கிடப்படும் யோனிக்குப்பலன், தக்ஷிணாக்னி ஆபத்தை உண்டாக்கும். ஆஹவநீயாக்னி செல்வத்தைக் கொடுக்கும். கார்ஹபத்யம் ஆயுளை விருத்தி செய்யும். படும்

ஆயாதீநாம் ஶுபம் ப்ரோக்தம் தத்க்ராஹ்யம் ஸர்வ
ஸம்மதம் |
யத்க்ராஹ்யம் ஶோபநம் வித்யாத் யதோக்தம் தோஷவர்ஜநம் ||

தஸ்மாத்ஸர்வப்ரயத்நேந ஶோபநம் ப்ரயோஜயேத் |
குணாதிக்யம் து யதோக்தம் தோஷத்வம் ந
தோஷலாபகம் || கசங ||

(142-143) இவ்விதமாக ஆயாதி முதலியவைகளுக்குச் சொல்லப்பட்ட சுப பலன்கள் உள்ளவை ஏற்கத்தக்கவை. தோஷமுள்ளவைகளாகச் சொல்லப்பட்டவை விலக்கத் தக்கவை. எப்படியாவது சுபமான அளவைகளையே ப்ரயோகம் செய்யவேண்டும். குணம் அதிகமாகவும் தோஷம் குறைவாகவும் இருப்பது குணம் என்றே கருதப் படும்.

முக்ஷிணம்]

ஞிஜும் வா ஷுதிஜ்வாகவி ஏந நக்ஷத்ரேஷு யதி |
தஷீ²ஜூவ்யாஸம்ஹணம் வாக்ய ஸாஞூஸ்ஹாவநகம்
துவா || கசச ||

தஜிநெஷு ஷுதிஷ்டாம் வா காரயேத்து விசக்ஷண: |
ஸஜீவம் ச ஸஸாகிஷ்யம் ஸவஜாவம்ஷுதாரகம் ||

ஷூஸாஷாதீநி ஞிம்ஶாநி வெரஷூாவநவாவெகுகெ |
வாஞுஞிஶாநி ஸிம்வாநி தத்ஷூாஞுாஞுயாநிவ || கசரு ||

ஜீணொரூாஜாரணவசெவெ வா கஞூ ஸவம்
விஸெஷத: |

(144-147) லிங்க நிர்மாணம் செய்வதும், பிம்ப நிர்மாணம் செய்வதும் அவற்றின் அளவைகளுக்கான நக்ஷத்திரத்திலேயே அவற்றிற்கான பொருள்களைச் சேகரிக்கவேண்டும். சூல ஸ்தாபனம் செய்யும் விஷயத்திலும் அவ்வித நக்ஷத்திரமே மேலானது. இப்படி ஆரம்பித்துப் பிரதிஷ்டை செய்தால் ஜீவகளையுடனும் தெய்வ ஸாந்நித்யத்தோடும், சந்திர சூரியன் உள்ளவரை சுகத்தைக் கொடுக்கக்கூடியதாகவும் விளங்கும். ஆலயத்தின் 'ப்ராஸாதம்' என்ற விமானத்தோடுகூடிய கர்ப்பகிருஹத்தை நிர்மாணித்தல், லிங்கம், பிம்பம் இவைகளை ஸ்தாபித்தல், பால லிங்கத்தை ஸ்தாபித்தல், பால பிம்பத்தை ஸ்தாபித்தல், அவற்றிற்கான பாலாலயங்களை நிர்மாணம் செய்தல், புதுப்பித்தல் இவை எல்லாவற்றையும் மேலே சொல்லப்பட்டபடி நாள் பார்த்துச் செய்யவேண்டும்.

ஆயாதிவா ந ஸங்கஞூ ஆயாதீநி ந காரயெத் || கசஎ ||

𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌂 𑌜𑌙𑍍𑌗𑌮𑌂 𑌬𑍇𑌰𑌂 𑌤𑌦𑌙𑍍𑌗𑌂 𑌮𑌾𑌨𑌵𑌾𑌦𑌿𑌕𑌮𑍍 ।
𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑌕𑌂 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍀𑌨𑌾𑌂 𑌚 𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥

𑌆𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌨 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌆𑌦𑍍𑌯𑍇 𑌵𑌿𑌂𑌶𑌿𑌕𑌾𑌦𑌿𑌷𑍁 ।
𑌸𑍁𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑌿 𑌸𑌦𑍇𑌹𑍇𑌷𑌾𑌂 𑌆𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍[1] ॥

𑌆𑌯𑌂 𑌵𑍍𑌯𑌯𑌂 𑌬𑌹𑍁𑌲𑌮𑌲𑍍𑌪𑌂 𑌧𑌨𑌾𑌵𑌹𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍
𑌵𑌾𑌰𑌂 𑌋𑌕𑍍𑌷𑌂 𑌶𑍁𑌭𑌦𑌯𑍁𑌕𑍍 𑌶𑍁𑌭𑌯𑍋𑌨𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑍈 ।
𑌭𑌾𑌂𑌶𑌂 𑌚 𑌰𑌾𑌶𑌿𑌤𑌿𑌥𑌿𑌯𑍋𑌨𑌯𑌃 𑌆𑌯𑍁𑌰𑍍𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑍈
𑌯𑌨𑍍𑌮𑌾𑌨𑌸𑌂𑌪𑌚𑍍𑌛𑍁𑌭𑌦𑌂 𑌨𑍃𑌪𑌤𑍇𑌸𑍍𑌤𑍁 𑌶𑌸𑍍𑌤𑌮𑍍 ॥ ௧௫௰ ॥

𑌹𑌰𑌿𑌃 𑌓𑌮𑍍 । 𑌶𑍁𑌭𑌮𑌸𑍍𑌤𑍁 ॥

𑌇𑌤𑌿 𑌆𑌯𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑍍 ॥

(148-150) ஸ்தாவரமான லிங்கம், பிம்பம் இவைகளும் இடம் விட்டு இடம் மாறக்கூடிய பிம்பங்களும் அவற்றின் அங்கங்களும், ஸ்திரீ, புருஷ, தேவதா ரூபங்களும் சுபத்தைக் கொடுக்கும் அளவுகளைக் கொண்டே செய்யவேண்டும். ஆயம் அதிகமாகவும் வ்யயம் குறைவாகவும் இருப்பது தனத்தைக் கொடுக்கும். வாரம், நக்ஷத்திரம் இவை சுபத்தைக் கொடுக்கக்கூடியவையாகவும் யோனி சுத்தமாகவும் இருப்பது விருத்தியைத் தரும். நக்ஷத்திராம்சம், ராசி, திதி, யோனி இவைகள் ஆயுளை விருத்திசெய்யக் கூடியவையான அளவுகள் அரசனுக்கு நன்மையைச் சொல்லக்கூடியதாகவும் இருக்கவேண்டும். ஹரி: ஓம்.

சுபம் உண்டாகட்டும்.

இவ்வாறாக ஆயாதி லக்ஷணம் முற்றிற்று

---

1. இந்த சுலோகம் திருத்தவோ பொருள் கொள்ளவோ கூடவில்லை.